
கல்கி
KALKI
0.2.1963
30
காசு



துப்பட்டிகள், தலையணை உறைகள்
மேஜை விரிப்புகள்
இவற்றை மின்னும்
வெண்மையுடன்
மிகையான
வெண்மையுடன்
வைத்திருக்க எப்பொழுதும்
டினோபாலை உபயோகியுங்கள்

உங்களுடைய துப்பட்டிகள், தலையணை உறைகள், மேஜை விரிப்புகள், துண்டுகள் இவற்றைக் கண்கூசும் வெண்மையுடன் எப்பொழுதும் வைத்திருக்க டினோபாலை தவறாமல் உபயோகியுங்கள்! நீங்கள் டினோபாலை தவறாமல் உபயோகிக்கும்போது, உங்களுடைய வின ருக்கு மங்கிய நிறமில்லை; பழுப்புத் தோற்றமுமில்லை. டினோபால் ஒழுங்காக உபயோகிப்பதனால் மட்டுமே வெள்ளைத் துணிகளை உண்மையிலேயே வெண்மையாக வைத்திருக்க முடியும். ஆகையினால், வெள்ளை ஆடைகளைத் துவைத்தபின், அவைகளை எப்பொழுதும் டினோபாலினால் வெளுக்கச் செய்யுங்கள்—

ஒரு சிறிதளவு
டினோபால்
வெள்ளைத் துணிகளை மிக
வெண்மையாக்கப் போதுமானது.

டினோபால் என்ற வார்த்தை ஜே. ஆர். கெய்கீ. எஸ். ஏ. பால், ஸ்விட்ஸர்லாந்து என்பவர்களுடைய ரெஜிஸ்டர்டு ட்ரேட் மார்க்காகும்.

தயாரிப்பாளர்கள் :
சுஹ்ரித் கெய்கீ லிமிடெட், வடிவாடி, பரோடா

ஸோல் டிஸ்ட்ரிப்யூட்டர்ஸ்:
சுஹ்ரித் கெய்கீ ட்ரேடிங் லிமிடெட், த. பெ. 965, பம்பாய்-1. பி. ஆர்.

SISTA'S SG 174A

TAM


காபி வேளை என்பது
அவளுக்குத் தெரியும்
என்பது அவனுக்கும்
தெரியும்
உற்சாகம், புது உணர்ச்சி, திருப்தி பெற காபி
அருந்தும் நேரம் இது!...இது அவளுக்குத்
தெரியும் என்பது அவனுக்கும் தெரியும் !
காபி எந்த மனநிலையிலும்
திருப்தி அளிக்கிறது
காபி போர்டு
பெங்களூர்


...பிப்ரவரி 9௳ முதல்...
சென்னை · சாந்தி (ஏர்கண்டிஷண்ட்)
பிராட்வே · சயானி
மற்றும் தென்னாடெங்கும்...
உமா பிக்சர்ஸ்
சித்தூர் ராணி பத்மினி
டைரக்ஷன் :
Ch. நாராயணமூர்த்தி B.A.
வசனம் :
ஸ்ரீதர்
தயாரிப்பு :

சுபகிருது, தைமீ 28உ

கல்கி

பிப்ரவரி, 10உ 1963

பொருளடக்கம்

''கல்கி''யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.


தீயினால் சுட்ட வடு மாறுது

புகைபிடிப்போருக்கு அழகு. பற்ற வைத்த சிகரெட்டை மேஜை போன்ற சாமான்கள் மீதோ, அலங்காரப் பொருள்களை ஒட்டியோ வைக்காமலிருத்தலே. சாம்பலைப் போக்குவதற்கு ஆஷ்ட்ரே இருக்க, வீணே மேஜை மீது தீய்ந்த வடுக்களையும், பளபளப்பான தளங்கள் மீது பழுப்பு நிறச் சுவடுகளையும் விளைவிப்பானேன்?

உயரிய பண்போடு உபயோகிப்பதற்கும் உதவுவதற்கும் உகந்தது

பனாமா

புகைபிடிக்கும் இங்கிதம்





இழுக்க இழுக்க இன்பம் — இறுதிவரை

விசேஷக் கலவை செய்வோர்:
கோல்டன் டுபாக்கோ கம்.. ப்ரைவேட் லிட்.
பம்பாய்-56.

பாரதத்தில் இத்தகைய தேசிய ஸ்தாபனங்களில் மிகப் பெரியது.

GT 410 TAM



மலர் 22 | தமிழ்த்திரு நாடுதன்னைப்—பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 28

கண் திறக்க வேண்டும்

இந்திய அரசாங்கம் ஆமோதித்த கொழும்பு சமாதானத் திட்டத்தைச் சீனா நிராகரித்து விட்டது. 'நல்லவேளையாக நாம் சீனாவுடன் பேச்சு வார்த்தை நடத்தி ஏமாந்து போகும் சூழ்நிலை ஏற்படாமல் சீனா காப்பாற்றியதே' என்று நாம் அடைந்த ஆசுவாசத்துக்குப் பிரதமருடைய தில்லிப் பிரசங்கம் ஐயம் ஏற்படுத்தி விட்டது.

சீனா சற்றும் விட்டுக் கொடுக்காமல் பிடிவாதமாக இருப்பதோடு, எல்லைப் புறங்களில் தனது படைகளையும் ஆயுதங்களையும் குவித்து வருவதாகச் செய்திகள் வரும் இந்த நிலையில் இந்தியா செய்ய வேண்டியதென்ன? சீனாவுக்குச் சமமாக நம் படைகளைப் பெருக்கிக் கொள்வது இயலாதபடியால், அமெரிக்கா, பிரிட்டன் முதலிய நாடுகளின் உதவியைப் பலப்படுத்திக் கொண்டு நம் எல்லையிலுள்ள சீனத் தளங்களை மீட்க வேண்டியது தானே? ஆனால் இதைப் பற்றிப் பிரதமர் எண்ணிப் பார்க்கவில்லை. பழைய கூட்டு சேராக் கொள்கையையே உடும்புப்பிடியாகப் பிடித்துக் கொண்டு ஏதோ பேசுகிறார் அவர். "மேல்நாட்டு வல்லரசுகளுடன் கூட்டு சேர்ந்தால் நம் சுதந்திரத்துக்கு ஆபத்து நேரிடும்" என்று பேசுகிறார்.

ருஷியாவுக்கும், அமெரிக்காவுக்கும் இடையில் நடைபெறும் பனிப்போரைப் பற்றியோ, அதில் யாருடனும் சேராமல் நடுநிலைமை வகிப்பது பற்றியோ இப்போது யாரும் விவாதிக்கவில்லை. உடனடியாக நமக்கு ஏற்பட்டுள்ள ஆபத்தை உணர்ந்து, அதை விலக்க யார் நமக்குச் சகாயம் அளிப்பார்களோ அவர்களின் பூரண உதவியையும் நட்பையும் பலத்தையும் பெறுவதல்லவா இன்று அரசாங்கத்தின் கடமை? அதற்கேற்றபடி நம்முடைய வெளிநாட்டுக் கொள்கையைத் திட்டமாக அமைத்துக் கொள்ள வேண்டியதல்லவோ பிரதமரின் பொறுப்பு? ஆனால் நேரு அவர்களோ இன்னமும் இரண்டுங் கெட்டானாகவே பேசிக்கொண்டு நமக்கு உதவும் நாட்டு மக்களிடம் அதிருப்தியை ஏற்படுத்தி வருகிறார். இது அமெரிக்காவின் பிரபல பத்திரிகை யொன்றில் பிரபல நிருபர் ஒருவர் எழுதியிருப்பதிலிருந்து தெளிவாகத் தெரிகிறது.

இனி என்னதான் நடைபெறப் போகிறது என்பதையும் ஊகிக்கலாம். 'மத்தியஸ்த' நாடுகள் என்று சொல்லப்படும் நாடுகள் மீண்டும் நிபந்தனைகளுடன் திட்டம் கொண்டு வரும். அதற்கு நம் சர்க்கார் தலையாட்டும். மத்தியஸ்த நாடுகள் இப்படி இன்னொரு சமாதானத் திட்டம் கொண்டு வந்து நம்மை நிர்ப்பந்தப்படுத்தும் நிலைக்கு நேருஜி நம்மை ஆளாக்கி விடுவார் என்றுதான் இப்போது தோன்றுகிறது. இந்த இடைக்காலத்தில் சீனா சும்மாயிருக்குமா? தன் யுத்த முயற்சிகளை மேலும் தீவிரமாக்கும்.

அதே இடைவெளியில் சர்க்கார் நடவடிக்கைகளின் பயனாகப் பாரத மக்களின் ஆர்வம் தணிந்து போக ஆரம்பிக்கும். அந்நிய உதவியின்றி நாமே பெரும் படைகளை நிர்வகித்து, ஆயுதங்களை உற்பத்தி செய்ய வேண்டும் என்ற காரியசாத்தியமற்ற கொள்கைக்காக வரிப்பளுவை அரசாங்கம் அதிகமாக்கும். தனிப்பட்டு நடத்தும் யுத்த தளவாடப் போட்டியில் ஈடுபட்டால் நாடு திவாலாகும் நிலைக்கு வந்துவிடும். மக்களின் அதிருப்திக்கு அவசர நிலையின் அடக்குமுறை தூபம் போடும். மக்களின் தேசபக்தி ஆர்வம் குறைந்து போகும். போதாத குறைக்குத் திருவாளர் "தோழர்"களும் தங்களுடைய ஐந்தாம்படைக் கைவரிசையைக் காட்டுவார்கள்.

இத்தகைய எதிர் விளைவுகளைக் கருதாமல் 'நாட்டுக்கு உத்வேகம் தேவை' என்று பிரசங்கங்கள் புரிந்து வருகிறார் பிரதமர். இன்று நாட்டுக்கு எந்தப் பிரசங்கமும் தேவையில்லை. பிரதமரை உத்வேகப் படுத்தத்தான் பிரசங்கம் தேவையாக இருக்கிறது. எதிர்காலத்தின் கடிவாளத்தைச் சீனாவிடமே விட்டு வைத்து, சீனா போகும் வழியைக் கொண்டு நம் எதிர் நடவடிக்கைகளை உருவாக்க வேண்டும் என்று நேருஜி எண்ணி வருகிறார். ''சீனா மறுபடியும் நம்மைத் தாக்க முடிவு செய்தால் அந்த இன்னலைச் சமாளிக்க இந்தியா தயாராக வேண்டும்'' என்று அவர் கூறியிருப்பது வேதனையை அளிக்கிறது. சீனாவின் இச்சையும் யுத்த நிறுத்தமும் முடிவான உத்தரவாகி விட்டது. இது அவமானம். நம்மைப் போலவே தங்களுக்கும் பொது எதிரியான சீனாவை எதிர்க்க உதவி செய்யப் பிரியப்படும் நண்பர்களின் உதவியுடன் நம்முடைய பலத்தை நாம் பெருக்கிக் கொண்டு நம் எல்லையில் சீனா கபளீகரம் செய்துள்ள பிரதேசத்தை மீட்க வேண்டிய காரியங்களைத் தொடங்குவதல்லவா முறை?

'இவ்வாறு அந்நிய உதவியை உறுதிப் படுத்திக் கொள்வதற்காகப் பிரதமர் அவர்களே அமெரிக்கா செல்ல வேண்டும். அமெரிக்க ஜனாதிபதியுடன் நம்முடைய பிரச்னைகளை மனம் விட்டு விவாதிக்க வேண்டும். அந்நாட்டினருக்கு நம்மிடம் நம்பிக்கை ஏற்படுமாறு செய்ய வேண்டும்' என ராஜாஜி யோசனை கூறுகிறார்.

அமெரிக்காவிடமிருந்து ராணுவ உதவி பெறப் பிரிட்டன் கூச்சப்படவில்லை. அப்படி உதவி பெற்றதால், நேருஜி கூறுவது போல் பிரிட்டன் அமெரிக்காவிடம் தன் சுதந்திரத்தை இழந்துவிடவுமில்லை. பிரிட்டனுக்கு ஏற்பட்டது போன்ற பயம் நமக்கும் ஏற்பட்டுள்ளது. பிரிட்டனைவிட நம்முடைய ராணுவ நிலையும் பலமாக இல்லை. தனித்திருந்து வீர தீர சாகஸம் செய்வது பற்றியும், தியாகச் செயல்கள் புரிவது பற்றியும் பேசி, அந்நிய ராணுவ உதவியில் அசிரத்தை காட்டுவது நமக்குப் பேராபத்தாகும்.

டிகாலின் பிடிவாதம்

பிரஞ்சு நாட்டுத் தலைவர் டிகாலின் பிடிவாதம் காரணமாக இங்கிலாந்து ஐரோப்பிய பொது மார்க்கெட்டில் சேருவது தடைப்பட்டு நின்றுவிட்டது. ஐரோப்பிய பொது மார்க்கெட் குழுவில் பிரான்ஸைத் தவிர இன்னும் ஐந்து நாடுகள் இருக்கின்றன. அவை யாவும் பிரிட்டன் சேருவதை வரவேற்கையில் பிரான்ஸ் மட்டும் பிடிவாதமாக பிரிட்டன் கோரும் சலுகைகளை அனுமதிக்கக் கூடாது என்ற அடிப்படையில் பிரிட்டன் சேருவதை நிராகரித்துவிட்டது. பிரான்ஸின் இந்தப் போக்கு மேற்கத்திய நாடுகளின் ஒற்றுமையில் ஒரு பிளவு ஏற்படுத்தி விட்டது.

பொருளாதார அடிப்படையில் நிறுவப்படும் மார்க்கெட் ஆயினும் ஈ. ஸி. எம். மின் புறப்பாடலத்தில் நிலவுவது அரசியல் ஒற்றுமையும் பலமும்தான்.

பொருளாதார ரீதியிலும் அரசியல் ரீதியிலும் ஒன்றுபட்ட ஐரோப்பா உருவானால் ருஷ்யாவின் கம்யூனிஸ பலத்துக்கு நல்ல முறையில் ஈடு கொடுக்க முடியும் என்று எண்ணிய அமெரிக்கா, பிரிட்டனை ஐரோப்பிய பொது மார்க்கெட்டில் சேரும்படி வற்புறுத்தியது. பிரிட்டன் சேருவதால் காமன்வெல்த் நாடுகளான ஆஸ்திரேலியா, கனடா, நியூஜிலந்து, இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளின் வர்த்தகம் ஓரளவு பாதிக்கப்பட்டாலும் சிறு சலுகைகள் பெற்று பிரிட்டனை ஐரோப்பிய பொது மார்க்கெட்டில் சேரும்படி வற்புறுத்தியது. பிரிட்டனும் ஈ. ஸி. எம். மில் சேராவிடில் ஐரோப்பிய அரசியல் விவகாரங்களில் தான் ஒதுக்கப்படலாம் என்று கருதிச் சேரத் தீர்மானித்தது.

ஆனால் பிரஞ்சுத் தலைவர் டிகால், பிரிட்டன் சேர்ந்தால் ஐரோப்பாவில் பிரிட்டனின் அரசியல் செல்வாக்கும், அமெரிக்காவின் செல்வாக்கும் ஓங்கி, பிரான்ஸின் செல்வாக்கு தேயத் தொடங்கிவிடும் என்று எண்ணுகிறார். அதனால்தான், பிரிட்டனின் காமன்வெல்த் நாடுகளுக்குச் சலுகை தர முடியாது என்று காரணம் காட்டி ஒதுக்குகிறார். ஆனால் அதே சமயம் பிரான்ஸ் தன் ஆதிக்கத்தின் கீழிருந்து சமீபத்தில் சுதந்திரமடைந்த ஆப்பிரிக்க நாடுகளுக்குப் பொது மார்க்கெட்டில் சலுகைகள் கோரிப் பெற்றிருக்கிறது என்பதை மறந்துவிட்டார் அவர். ஆகவே, பிரிட்டனை ஒதுக்க பிரான்ஸ் கூறும் காரணம் யாருக்கும் சமாதானமளிக்காது. டிகால், நெப்போலியன் சென்ற வழியில் தவறாகச் செல்லத் தொடங்கிவிட்டார் என்றுதான் உலகம் கருதுகிறது.

என்ன சேதி?

நல்ல சூழ்நிலை

அணுகுண்டு சோதனைகளைத் தாற்காலிகமாக நிறுத்தி வைக்கும்படி அமெரிக்க ஜனாதிபதி கென்னடி, தமது நாட்டு அணுசக்தி கமிஷனுக்கு உத்தரவு பிறப்பித்திருக்கிறார்.

ஜினிவாவில் இம்மாதம் நடக்கவிருக்கும் அணுகுண்டு பரிகரண மகாநாட்டை நல்ல சூழ்நிலையில் தொடங்க வேண்டும் என்ற நோக்கத்தோடு கென்னடி இவ்வுத்தரவைப் பிறப்பித்திருக்கிறார்.

ருஷ்ய நாட்டுத் தலைவர் குருஷேவும் தமது நல்லெண்ணத்தைக் காட்டிக் கொள்ளும் வகையில், அமெரிக்கா கூறி வந்த அணு ஆயுதப் பரிசீலனை பற்றிய நிபந்தனையை ஏற்றுக் கொண்டு, ஆண்டில் இரண்டு அல்லது மூன்று தடவைகள் ஸ்தல சோதனைகள் நடத்த அனுமதிப்பதாகக் கூறியிருக்கிறார்.

இது ஒரு மகத்தான முன்னேற்றம். அமெரிக்கா, அணு ஆலைகளைச் சோதனை போட அனுமதிக்க வேண்டும் என்று வற்புறுத்திய போது, 'இது வேவு பார்க்கும் சூழ்ச்சி' என்று கூறி ருஷ்யா இணங்காமல் இருந்தது. இப்பொழுது இணங்கி யிருப்பதால், ருஷ்யா அமெரிக்காவுடன் ஒத்துப் போக எண்ணம் கொண்டிருப்பதாகத் தோன்றுகிறது.

அமெரிக்கா, ஆண்டில் எட்டுமுதல் பத்து தடவை பரிசீலிக்க அனுமதிக்க வேண்டும் என்று வற்புறுத்தி யிருக்கிறதாம்.


இவ்வளவு தூரம் ஒத்துக் கொண்டான பிறகு, நடைமுறை அம்சங்களில் இரு நாடுகளும் பெருந்தன்மையோடு விட்டுக் கொடுத்து, வாயு மண்டலத்திலும், பூகர்ப்பத்திலும் அணுகுண்டு விஷத்தைப் பரப்பாமல் காப்பார்கள் என்று உலகம் எதிர்பார்க்கிறது.

ரகசியம் தெரியுமா?


சென்ற வாரம் பெங்களூரில் நடைபெற்ற சுதந்திரக் கட்சிக் கூட்டத்தில் சர்க்கார் தங்கக் கட்டுப்பாடு செய்து, மக்களை அல்லல்படுத்துவதன் அந்தரங்கமான காரணத்தை வெளியிட்டார் ராஜாஜி.

நமது திட்டங்களுக்காக நிதி தேடிக் கொண்டு அமெரிக்காவுக்குச் செல்லும் நிதிமந்திரியை அமெரிக்கப் பொருளாதார நிபுணர்கள் "இந்தியா ஏழை நாடு என்கிறீர்கள். ஆனால் அங்கு தங்கம் மட்டும் உலக மார்க்கெட் விலையை விட

வெண்ணெயும் சுண்ணாம்பும்



ருசி கண்ட பூனை!



அதிக விலைக்கு விற்பானேன்? சிலர் அமெரிக்காவிலிருந்தும் மற்ற நாடுகளிலிருந்தும் கள்ளக் கடத்தல் செய்து கொண்டு போய் இந்தியாவில் அதிக விலைக்கு விற்றால் உங்கள் நாட்டு மக்களால் எப்படி வாங்க முடிகிறது?'' என்று கேட்டார்களாம். இதற்குத் தக்க பதில் சொல்ல முடியாததால், மேனாட்டினர் போதிய கடன் தர மறுப்பார்களோ என்ற அச்சத்தில் உலக மார்க்கெட் விலைக்குத் தங்கத்தைக் கொண்டு வரவும், மக்கள் தங்கத்தின்மேல் கொண்டுள்ள ஆசையை இழக்கச் செய்யவும் இந்த நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறார் நிதிமந்திரி என்று குறிப்பிட்டார்.

பாங்கிகள் கிட்டப் போகத் தெரியாத ஏழைக் குடும்பங்கள் மிச்சப்படுத்தும் சொற்பமான பணத்துக்குத் தங்க ஆபரணங்கள் ஒருவித நல்ல 'சேமிப்பு பாங்கி'கள் ஆகும் என்பதையும், கள்ளத்தனமாக வரும் தங்கம் இந்தியா பூராவும் பரவினால் ஒவ்வொரு குடும்பத்துக்குச் சராசரி சிறு அளவுதானாகும் என்பதையும் சொல்லி உண்மையை விளக்கியிருந்தால் அமெரிக்க ஜனங்கள் விஷயத்தை உணர்ந்திருப்பார்கள்.

மாணவர் கலாட்டா

சமீபத்தில் உத்தரப் பிரதேசத்தில் உன்னாவ் என்ற ஊரில் சில மாணவர்கள் ஸ்டேஷனில் நின்றுகொண்டிருந்த ரயிலில் ஏறிப் பிரயாணிகளை அடித்தும், அவர்கள் பொருள்களைச் சூறையாடியும் நிகழ்த்திய கலாட்டா நம் நாட்டின் எதிர்காலத்தைப் பற்றிச் சிந்திப்பவர்களுக்குக் கவலையை உண்டாக்கியுள்ளது.

குடியரசுத் திருநாளில் கலந்து கொண்டு விட்டுத் திரும்பிய மாணவர்கள், ரயிலில் இடமில்லை என்று அறிந்ததும் ரிஸர்வ் கம்பார்ட்மெண்டில் பலாத்காரமாக நுழைந்து பிரயாணிகளைத் துன்புறுத்தியிருக்கின்றனர்.

ஒழுங்கையும், கட்டுப்பாட்டையும் கடைப்பிடிக்க வேண்டிய மாணவர்கள் இவ்வாறு நடந்து கொண்டது வருத்தத்துக்கு இடம் தருகிறது.

அனந்தநாயகியைப் பாராட்டுகிறோம்

காங்கிரஸ் அங்கத்தினர்களைப் பாராட்டும் வாய்ப்பு நமக்கு நேருவதேயில்லை. இப்பொழுது கிடைத்தற்கரிய அந்த வாய்ப்புக் கிட்டியுள்ளதைப் பற்றி மகிழ்கிறோம்.

சென்னை சட்டசபையில் ஸ்ரீமதி அனந்தநாயகி தங்கத்துக்குப் பதினாறு காரட் கட்டுப்பாடு கூடாது என்றும், 'இந்த விஷயம் பற்றி மத்திய சர்க்காரிடம் மாநில சர்க்கார் வற்புறுத்த வேண்டும்' என்றும் பேசியிருக்கிறார்.

'பொற்கொல்லர்களின் கலை அறிவைப் போக்கிவிட வேண்டாம். இந்த விஷயத்தில் மாநில அரசாங்கம் மத்திய அரசாங்கத்துக்குத் தெளிவாக எடுத்துச் சொல்ல வேண்டும்' என்றும் பேசியிருக்கிறார்.

சென்னை சர்க்கார் இதையெல்லாம் செய்வார்கள் என்று எதிர்பார்க்க முடியாது என்றாலும் ஸ்ரீமதி அனந்தநாயகி தம் கட்சி நல்ல பெயரையும் செல்வாக்கையும் இழக்காமலிருக்க வேண்டுமென்பதற்காகவோ அல்லது தம் பெண் இனத்தின் குரலைச் சட்டசபையில் பிரதிபலிக்க வேண்டுமென்பதற்காகவோ பேசியதற்குப் பாராட்டுகிறோம்.

பெரியோரைப் போற்றுவோம்

இவ்வாண்டு குடியரசு தினத்தில் பாரத அரசாங்கம் கௌரவித்துப் பாராட்டிப் பட்டங்கள் வழங்கியுள்ள பெரியோர்களில் சிலரை நேயர்களுக்கு அறிமுகப்படுத்துவதில் பெருமை கொள்கிறோம்.



உதவி ஜனாதிபதி டாக்டர் ஜாகிர் ஹுஸேன் அவர்களுக்குப் 'பாரத ரத்ன' பட்டம் வழங்கப்பட்டுள்ளது. டாக்டர் ஜாகிர் ஹுஸேன் என்றவுடன் 'வர்தா கல்வித் திட்டத்தின் சிற்பி' அவர் என்ற நினைவுதான் யாருக்கும் வரும். மகாத்மா காந்தியடிகளோடு துணை நின்று இந்தத் திட்டத்துக்கு உருவம் அமைத்தவர் இவர். ஆனால் தற்போது வர்தா கல்வித் திட்டம் என்ற பெயரில் நடந்து வரும் ஊழலைச் சற்றும் ஒப்பாதவர். காந்தி பக்தர்கள் என்று சொல்லிக் கொள்வோர் கோபப்படுவார்களே என்று தாட்சிண்யம் பாராமல் உண்மையை விண்டுரைக்கும் தைரியம் படைத்தவர். கல்வித் துறையில் சீரிய பணியாற்றியவர். அகில உலக கல்வி மகாநாடுகளில் கலந்து கொண்டு பாரதத்தின் புகழை மேம்படுத்தியவர். பீகார் ராஜ்ய கவர்னராகச் சிறிது காலம் பணியாற்றினார். தற்போது உதவி ஜனாதிபதி பதவி வகித்து, தில்லியில் மேல் சபையின் சபாநாயகராக விளங்கி வருகிறார்.

டாக்டர் காணே அவர்களின் முழுப் பெயர் பாண்டுரங்க வாமன் காணே யாகும். பாரத ரத்ன விருது பெற்றுள்ள இப் பெரியார் சம்ஸ்கிருத இலக்கிய உலகில் மாமேதை என்று பல்லோரால் மதிக்கப் பெற்றவர். நமது தர்ம சாஸ்திரத்தைப் பற்றியும், 'ஹிந்துக்களின் பழக்க வழக்கங்களும் இன்றைய சட்டமும்' என்பதைப் பற்றியும் சமஸ்கிருத கவிதை வரலாற்றைப் பற்றியும் அரிய புத்தகங்கள் எழுதியுள்ளார். பம்பாய் பல்கலைக் கழகத்தின் உப அத்தியட்சகராகச் சிறிது காலம் பணியாற்றினார். இந்திய சாகித்திய அகாடெமி அவருடைய நூலுக்கு ஐயாயிரம் ரூபாய் பரிசுவழங்கிற்று. பாரத அரசாங்கம், 1958ல் அவருடைய சீரிய பணியைப் பாராட்டி மன்னது வழங்கி அவர் ஆயுள் காலத்துக்குப் பென்ஷன் வழங்கத் தீர்மானித்து, அவ்வாறே அளித்தும் வருகிறது.





ஏற்கனவே பத்மபூஷண் கௌரவத்தைப் பெற்ற டாக்டர் ஏ. லட்சுமணசாமி முதலியார் அவர்களுக்கு இவ்வாண்டு பத்ம விபூஷண் பட்டம் வழங்கப் பட்டுள்ளதை அறிந்து தமிழ் மக்கள் பெருமையடைவதில் வியப்பில்லை. டாக்டர் முதலியார் அவர்களின் சீரிய பணிக்குச் சென்னை சர்வகலாசாலை சான்று பகர்ந்து கொண்டு நிற்கிறது. 1943ம் ஆண்டிலிருந்து அவரே தொடர்ந்து உப அத்தியட்சகராக இருந்து வருகிறார். வைத்தியத் துறையில் அவர் புகழ் மிகப் பெரிது. சென்னை வைத்தியக் கல்லூரிக்கு முதல் இந்திய பிரின்ஸிபலாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்றாலே போதும், அவர் மேதையைப் பற்றிச் சொல்லத் தேவை இல்லை. ஆங்கிலத்தில் அற்புதமாகப் பேசும் திறன் படைத்த டாக்டர் முதலியார் சென்னை மேல்சபையில் எதிர்க் கட்சித் தலைவராகச் சிறப்பாகத் தொண்டாற்றி வருகிறார். இங்கிலாந்தின் ஒரு சர்வகலாசாலை இவ்வருடம் அவருக்குக் கௌரவ டாக்டர் பட்டம் வழங்கி பெருமையடையப் போகிறது.

இத்தகைய பெரியோர்களைப் பெற்ற பாரததேசம், மேலும் மேலும் பெரியோர்களை அளித்துப் பாரதப் பண்பாட்டைப் பேண இறைவன் அருள வேண்டும் என்பதே நமது பிரார்த்தனை.

சென்னை: மிட்லண்ட் தியேட்டரில்

(ஏர்கண்டிஷன் செய்யப்பட்டது)

8-2-1963 ஆரம்பம்

பிரும்மாண்டமான படம். திடுக்கிடும் சம்பவங்களும் மயிர்க் கூச்செடுக்கும் காட்சிகளும் நிறைந்தது. இரண்டாம் உலக மகா யுத்தத்தில் ஒரு நாள் நடந்த நிகழ்ச்சிகளை அப்படியே தத்ரூபமாக எடுத்துக் காட்டும் படம். உள்ளத்தை உருக்கும் சம்பவங்கள் நிறைந்தது. 30 லட்சம் வீரர்கள், 50 ஆயிரம் போக்குவரத்து வண்டிகள், 5 ஆயிரம் கப்பல்கள், 16 ஆயிரம் விமானங்கள் கொண்ட சேனையின் படையெடுப்பைக் காட்டும் சித்திரம். ஒன்றுக்கு மேற்பட்ட உலக பரிசுகளைப் பெற்றது.

பம்பாயில் இப்போது எட்டாவது வாரம் ஓடிக் கொண்டிருக்கிறது



42 INTERNATIONAL STARS!

DARRYL F. ZANUCK'S

THE LONGEST DAY

FROM THE BOOK BY CORNELIUS RYAN
Released by 20th Century-Fox

தினசரி மூன்று காட்சிகள்: மாலை: 2, 6-15, இரவு: 9-45 மணிக்கு

கட்டணம்: ரூ. 3-15; ரூ. 2-62; ரூ. 1-81; & ரூ. 1-07

உங்கள் இடத்துக்கு இப்போதே ரீசர்வ் செய்து கொள்ளுங்கள்



அறிவுக்கனலே, அருட்புனலே!

ரா. கணபதி



ஓம்' என்று தக்ஷிணேசுவரத்து ஆலயமணி முழங்கும். யார் யாரை யெல்லாமோ அருகே வரச் சொல்லிஅழைக்கும் துடிப்பு அந்த மணி நாதத்தில் துளும்பும்.

தக்ஷிணேசுவர ஆலயத்தில் சர்வேசுவரியான பவதாரிணிக்கு மாலை வழிபாடு செய்யும் ராமகிருஷ்ண முனிவரின் இதயத்தில் அன்பு துளும்பும்; கண்களில் நீர் துளும்பும்; நாவின் நுனியில் இது வரை வார்த்தைகளில் வடித்திராத ஆர்வத்தின் குரல் துளும்பும்.

அம்பிகையின் சந்நிதியிலிருந்து புறப்படுவார் அருளாளர். ஆலயத்திலிருந்து வெளியேறுவார். தோப்பும் துரவுமான அந்தச் சூழலிலுள்ள ஓர் இல்லத்தின் உச்சிக் கூரை மீது பரபரக்க ஏறுவார். நாற்புறமும் மலங்க மலங்கச் சுற்றிப் பார்ப்பார்.

''என் குழந்தைகாள்! எல்லோரும் எங்கே போனீர்கள்? உங்களை விட்டு நான் எவ்வளவு காலம் பிரிந்திருப்பேன்? வாருங்கள், வாருங்கள்'' என்று நீர்க்கமான குரலில் சோக மயமாகக் கூவி அழைப்பார். நாவின் நுனியில்துளும்பிக் கொண்டிருந்த ஆர்வம் சொல்லாக வடியும்.

ஆலயத்தைத் தொட்டுக் கொண்டு ஓடும் கங்காதேவிதான் அவரது அழைப்புக்குத் தனது அலை நாக்குகளால்'சலசல' வென்று விடை சொல்வாள். தன்னில் சாரும் எந்தப் பிற பொருளையும் தன்னிடம் வைத்துக் கொள்ள மாட்டாமல் உருட்டிப் புரட்டிக் கரையில் சேர்த்து விடுவதோடு மட்டுமின்றி, தன்னிலேயே தோன்றும் அலைகளைக் கூடத் தரிக்க முடியாமல் கரையில் ஒதுக்கிவிடுபவள் அல்லவா அவள்? அவள் கங்கா நதி என்றால் அவரோ கருணை நதி. அன்புத் தேக்கமாகிய தம்மிடம் எழும் அநுபவ அலைகளைக் கூடத் தம்மிடமே வைத்துக் கொள்ள இயலாமல்தான் அவர் துடித்துக் கொண்டிருந்தார். முட்ட முட்டப் பால் சுரந்து மடி கனக்கும் பசு, கன்றைத் தேடி மறுகுவது போலத் தம் அகத்தே விம்மி நிற்கும் அநுபவங்களை ஊட்டுவதற்குத் தக்க ஞானக் குழந்தைகளைத்தான் அவர் அப்படிக் கூவிக் கூவி அழைப்பார்.

சலசல வென்ற ஆற்றிசையோடு புள்ளினங்களின் கலகலத்வனியும் கலக்கும். அந்தி மயங்கும் நேரமல்லவா ? பட்சிகள் தத்தம் கூடுகளை நாடித் திரும்பியபடி இருக்கும். ஆகா, கூட்டிலுள்ள குஞ்சுகள் தாய்ப் பறவைகளை ஆவலாக எதிர்பார்த்திருக்கும்! தாய்ப் பறவை தான் திரட்டிய பூச்சி புழுக்களை அவற்றுக்கு ஊட்டி மகிழும்! ராமகிருஷ்ண தேவரோ பூச்சியையும் புழுவையும் அன்றி அமுதத்தையே நிரப்பி வைத்துக் கொண்டிருக்கிறார். அமுதமான சிந்தனைகளையும், அமுதமான சம்பவங்களையும், அமுதமான அநுபவங்களையும் சுமந்து கொண்டு நிற்கிறார். அமுதத்தை அமுதத்தாலேயே எடுத்துப் பரிமாறுவது போலத் தமது அமுதஉணர்வுகளைப் பரிமாறுவதற்கு அமுதமான வாக்குடனும், அமுதமான நோக்குடனும் காத்துக் கொண்டிருக்கிறார். அப்படியிருந்தும் இந்தத் தாய்ப் பறவைக்காக ஏன் எந்தக் குஞ்சுகளும் தவிக்க வில்லை? அவரல்லவோ தவிக்கிறார்?

நித்திய சத்தியமான சர்வேசுவரி எங்கேனும் அசத்திய வசனம் மொழிய முடியுமா? அவளல்லவோ கூறினள் — ராமகிருஷ்ண மகாமுனி சேமித்து வைத்துள்ள அறிவுச் செல்வத்தை, ஆன்மீகச் செல்வத்தை, அருட் செல்வத்தை, அநுபவச் செல்வத்தைப் பெற்றுப் பாரெங்கும் வழங்கப் போகும் வாரிசுகள் அவரைத் தேடி வரப் போகிறார்கள், என்று? பின்னர் அவர்கள் ஏன் வரவில்லை?

''குழந்தைகாள்! எப்போது என்னிடம் வரப் போகிறீர்கள்?'' என்று கதறினார் பரமஹம்ஸ ராமகிருஷ்ணர்.

பரமஹம்ஸர்தான். அம்பிகை என்ற அன்பு மடுவில் இதமாகச் சிறகுகளைப் பரப்பித் தன் வயம் இழந்து, தன் இச்சை மறந்து, நீரோட்டத்தின் போக்குப்படி மிதக்கும் ஹம்ஸம்தான் அவர். 'பரம புருஷனும் நானும் ஒருவரே ; **அஹம் ஸ:**' என்ற உண்மையை உன்னி உணர்ந்த ஹம்ஸம்தான் அவர். எனினும் அவர் ஏன் இப்படிச் சிந்தாகுலமானார்? அதுதான் கருணை செய்யும் காரியம் !

எவ்வளவுக்கெவ்வளவு மேகம் மேலே செல்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு குளிர்ந்து மழையாகி இந்த மண்ணுலகையே ஆவேசமாக வந்தடைவது போல, மேலே மேலே உயர் நிலைக்குச் செல்லும் மகான்களும் கருணையால்

குளிர்ந்து இந்த மண்ணுலக மாந்தரிடையே அறிவுமழையாகப் பொழிந்து அவர்களுக்குச் செழிப்பூட்டுவதற்குத் தான் துடிப்பார்கள். ராமகிருஷ்ண யோகியும் அப்படித்தான் துடித்துக் கொண்டிருந்தார்.

அவரை நாடி யாரும் வராமலில்லை. யாரெல்லாமோ வந்து கொண்டுதான் இருந்தார்கள். ஆனால் அவர்களுக்கு ராமகிருஷ்ணர் சேகரித்து வைத்திருந்த ஞான அமுதம் தேவைப்பட வில்லை; அதனைச் சுவைக்கவும் அவர்கள் அறிந்திருக்கவில்லை. லௌகிகமான புழு, பூச்சி விஷயங்கள்தாம் அவர்களுக்குத் தேவைப்பட்டன. இந்தக் கூட்டத்தைக் கருணைநிதியான பரமஹம்ஸராலேயே தாள முடியவில்லை. அவர்கள் கேட்ட கேள்விகளையெல்லாம் அவரால் சகிக்க முடியவில்லை.

'எங்கே, அம்பிகை வாக்களித்திருந்த அந்தக் குழந்தைகள்? முக்கியமாக **அந்த ஒரு பிள்ளை?** யாரும் கேட்டறியாத கேள்வியுடன் தகித்துக்கொண்டிருக்கும் அந்தக் கொழுந்து எங்கே?' ராமகிருஷ்ணதேவரின் உள்ளம் நொந்து கொண்டிருந்தது.

அடியார்களைத்தான் சோதிப்பாள் அன்னை. பரமஹம்ஸ ராமகிருஷ்ணரையும் சோதித்தாள். சோதிப்பதைவிடச் சோதனையை நீக்குவதில்தான் அவள் அதிக சமர்த்தள். அதையும் பரமஹம்ஸர் விஷயத்தில் மெய்ப்பித்துக் காட்டி விட்டாள் அன்னை.

மலரை நாடி வரும் வண்டு போல ராமகிருஷ்ணரிடம் ஊறும் ஞானத் தேனைப் பருக மெய்யடியார்கள் ஒவ்வொருவராக வரலாயினர். கடைசியாக அந்த ஒரு பிள்ளையும் யாரும் கேட்டறியாத தனது கேள்வியுடன் ஜ்வலித்துக் கொண்டு தக்ஷிணேசுவரம் வந்து சேர்ந்துவிட்டான்!

அதற்குச் சில நாட்கள் முன்பே, அதாவது 1881-ம் ஆண்டு நவம்பர் மாதத்தில், கல்கத்தாவில், சுரேந்திரநாத மித்ராவின் இல்லத்தில் இந்தப் பிள்ளையைக் கண்டிருக்கிறார் குரு தேவர் ராமகிருஷ்ணர். சுரேந்திர நாதரின் வீட்டில் கண்ட அந்த இளைஞனுக்குப் பெயர் நரேந்திரநாதன். அன்று அவன் பாடிய தேவகானம் அவர் உள்ளத்தைத் தொட்டுவிட்டது. அவனைத் தக்ஷிணேசுவரம் வருமாறு அழைத்தார். ஆகா, இன்று அவன் வந்தே விட்டான்!



சில நாட்களுக்கு முன்பு ராமகிருஷ்ணர் அழைத்த அழைப்புக்காக மட்டும் தானா அவன் வந்தான்? ஆண்டு ஆண்டுகளாக அவரது ஆத்மா எழுப்பிய அலறல் அல்லவா அவனை அங்கு இழுத்துக் கொண்டு வந்திருக்கிறது?

அவ்வளவுதானா? காலம் கணிக்க முடியாத பாரத தத்துவம், கால வெள்ளத்தில் சிக்கிக் கொண்டு உருச் சிதையும் நவீன இந்தியாவுக்கு விடுத்த அழைப்பல்லவா அது? நவீன இந்தியா தனது புராதனப் பொலிவு குன்றி உருச் சிதையாமல் இருப்பதற்கே அல்லவா நரேந்திரநாதன் அன்று அந்த அழைப்பை ஏற்று அங்கு வந்தான்?

ராமகிருஷ்ண தேவருடைய அறைக்குள் மேற்கு வாயில் வழியாகப் பிரவேசித்தான் நரேந்திர நாதன். மேற்கு நாடுகளிலெல்லாம் அவரது மேலான உபதேசங்களைப் பரப்பப் பிறந்தவன் அந்த ஆனந்த சாம்ராஜ்யத்துக்குள் பிரவேசித்து விட்டதற்கு அது அறிகுறியோ என்னவோ?

நரேந்திரனுடன் நண்பர்களும் வந்திருந்தனர். ஆனால் அவர்கள் யாரையும் அவன் நினைத்ததாகத் தெரியவில்லை. அவனையும் அறியாமலே, அவனது உணர்வுகள் உடன் வந்தவர், உடல், உடை இந்த நினைப்புக்களைக் கடந்து அந்தர்முகமாகப் பதிந்து கொண்டிருந்தன. கம்பீரம் அலை மோதும் அவனது காந்தக் கண்கள் யாரும் கேட்டறியாத அந்தக் கேள்வியில் கனலாகக் கனிந்து கொண்டிருந்தன; எனினும் உள்நோக்காகவும் அவனது அகத்தைத் துழாவிக் கொண்டிருந்தன. அவனைப் பார்த்தவுடனேயே அவனுக்குள் அழுந்திக் கிடந்த ஆன்மிகம் குருதேவருக்குத் தெரிந்து விட்டது. லோகாயதம் கப்பி வரும் கல்கத்தாவிலிருந்தா இப்படி ஒரு கட்டிளம் காளை வருகிறான் என்று அவருக்கு வியப்பேற்பட்டது. 'இவன் அவன்தானோ?'

தரையில் பாய் விரிக்கப்பட்டது. நண்பர்களுடன் அமர்ந்தான்

நரேந்திரன். தமது இதய பீடத்தில் அமர்ந்த நரேந்திரன் முதன் முதலில் தக்ஷிணேசுவரத்தில் அமர்ந்த இடத்தைப் பரமஹம்ஸர் என்றுமே மறக்கவில்லை. பல வருஷங்களுக்குப்பின் இந்தச் சந்திப்பைப் பற்றிப் பக்த ஜனங்களிடம் பேசிய முனிபுங்கவர், ''அதோ, கங்கை நீருடன் 'ஜாடி' வைத்திருக்கிறதே, அந்த இடத்தில்தான் நரேந்திரன் உட்கார்ந்தான்'' என்று நினைவாகக் கூறினார். அக்கினிப் பிழம்பாக வந்த நரேந்திரனையே குளிர்வித்துக் கருணை எனும் கங்கையை அவனுள் நிரப்பி விட்டவரல்லவா அவர்!



நரேந்திரனைப் பாடச் சொன்னார் ராமகிருஷ்ணர்.

அவன் நெக்கு நெக்குருகத் தன் மதுரகண்டத்தைத் திறந்து நாதவெள்ளத்தைப் பெருக்கினான்:

மனமே, உன் மனைக்கு ஏகு!
மண்ணுலகு உனக்கு அந்நியமன்றோ?
மாறுவேஷமிட்டேன் மயங்குகிறாய் இங்கே?
பார்க்கும் இப்பாரெல்லாம், பஞ்சபூதம் எல்லாம்
பரமேயன்றோ உனக்கு, மடமனமே!

என்று தொடங்கி, மனதைச் சத்திய சிகரத்தின் மீதேறுமாறு அறைகூவிக் கானம் செய்தான் நரேந்திரன். மேலும் பாடினான்:

சாதுக்கள் சங்கம் சத்தியப் பாதையில்
சாவடியாய் நிற்கும் மடமனமே!
சாவடியில் தங்கி, சோர்வுதனை நீக்கிச்
சாந்தி கொள்வாய் எந்தன் மடமனமே!

களைத்துச் சளைத்துப் போன நரேந்திரன் தனக்குச் சாவடியான சாதுவிடம்தான் வந்திருக்கிறான்! 'இன்னும் என்ன சந்தேகம்? இவன் அவனேதான்!'

பரமஹம்ஸர் அப்படியே எழுந்திருந்து நரேந்திரனை இறுகப்பற்றினார். அறைக்கு வடபுறத்துள்ள முகமண்டபத்துக்கு அவனை இட்டுச் சென்றார். பொல பொல வென்று அவரது கன்னத்தில் கண்ணீர் வழிந்தது.

''ஆகா, கடைசியில் நீ வந்தே விட்டாய்! எவ்வளவு காலம் தாழ்த்தி வந்திருக்கிறாய்? இத்தனை காலமாக இந்த உலகத்தவர்களின் அற்பமான பேச்சுக்களைக் கேட்டு என் காது கொப்புளித்தே போய் விட்டது! என்னுடைய எண்ணங்களை யெல்லாம் புரிந்து கொள்ளக் கூடிய ஒருவரிடம் அவற்றை அவிழ்த்துக் கொட்டி என் பாரத்தைக் கழித்துக் கொள்ள வேண்டுமென எத்தனை காலமாக ஏங்குவேன்? என்னை இவ்வளவு காலம் காக்க வைப்பதற்கு உனக்கு எவ்வளவு கொடுமை இருக்க வேண்டும்?''

ராமகிருஷ்ண பகவான் நரேந்திரனிடம் பேசினார். அநாதியான சநாதன தர்மம் நவீனத்துடன் பேசிற்று.

ஆங்கிலப் படிப்புப் படித்த பகுத்தறிவு வாதியான நரேந்திரனுக்கு ஏதும் புரியவில்லை. 'என்னை யார் என்று எண்ணி இவர் இப்படி யெல்லாம் பேசுகிறார்? சில நாட்களுக்கு முன்பு சுரேந்திரநாத மித்ராவின் வீட்டில் சிறிது காலம் கண்டு பிரிந்த ஏதோ ஒரு சிறுவனுக்காக இவர் காத்திருந்ததாகத் தோன்றவில்லையே! ஜன்ம ஜன்மாந்தரங்களாக, யுக யுகாந்தரங்களாக, கல்ப கல்பாந்தரங்களாக என்னுடன் இணை பிரியாமல் வாழ்ந்து விட்டுப் பிரிந்தது போலல்லவா நிலை கொள்ளாமல் தத்தளிக்கிறார்? ஏன் இத்தனை காலமாக வரவில்லை என்று என்னைக் கேட்கிறாரே! யாரும் கேட்டறியாத ஒரு கேள்வி, கேள்விக்குறி போல உண்மையாகவே கொக்கி போட்டு என்னை இங்கே இழுத்து வந்திருக்கும் போது, நான் அந்தக் கேள்வியைக் கேட்கு முன்பே இவரல்லவோ என்னிடம் ஏதேதோ விடை சொல்ல முடியாத வினாக்களைப் போடுகிறார்? இவர் என்னை யாரென்றுதான் எண்ணுகிறார்?'

''நீ... நீ... நரன்'' என்று மீண்டும் தொடங்கினார் பரமஹம்ஸர்.

நரர்களுக்குள் இந்திரனான நரேந்திரநாதன் என்று உறவினர் அவனுக்குப் பெயரிட்டிருந்தனர். ஆனால் குருதேவர் அதைக் குறிப்பிட்டு அவனை நரன் என்று கூறவில்லை. நர — நாராயணர்கள் என்பதாகச் சொல்கிறோமே, நாராயணனோடு இணைந்த சகாவான அந்தத் தபஸ்வி நரனே இந்த யுவன் என்று அவர் கண்டார்.

''மகா ஞானியான நரன் நீ! நரர்களின் துயர் தீர்க்கவே பிறந்தவன் நீ'' என்று உணர்ச்சியுடன் கூறினார் ராமகிருஷ்ணர். பகுத்தறிவுவாதியான நரேந்திரனை அவருடைய சொற்கள் தொடவே

யில்லை. எனினும் அவரது உணர்ச்சிப் பரவசம் என்னவோ ஓங்கிற்று. அது ஓங்க ஓங்க நரேந்திரன் யார் என்பதும் அவருக்கு நன்முக உறுதிப்பட்டது.

முன்பு சமாதி நிலை கூடிய போது தாம் கண்ட காட்சியில் தோன்றிய முனிவர் மீண்டும் அவர் முன் தோன்றினர்.

முன்பு சமாதி நிலை கூடியபோது அவர் கண்ட அந்தக் காட்சி!


ராமகிருஷ்ண பரமஹம்ஸர் எங்கோ உயர உயர, இன்னும் உயர உயர, அப்பாலும் உயர, அதற்கும் உயரச் சென்று கொண்டே யிருந்தார். பூமண்டலமும், மேக மண்டலமும், வாயு மண்டலமும் பின்னல் பின்னல் தேய்ந்து மாய்ந்து போயின. மேலும் மேலும் சென்று கொண்டே யிருந்தார் முனிவர். சந்திர மண்டலத்தையும் கடந்தாயிற்று. சூரியனும், இதோ, எங்கோ அடியில் போய்க் கொண்டே யிருக்கிருன். தாராகணங்கள் பின்தங்கிப் புள்ளி புள்ளி யாகி, அடியோடு மறைகின்றன. தவயோகி மட்டும் இன்னமும் உயர உயரச் சென்று கொண்டே யிருக்கிருர்.

'நாம் காணும் இந்தப் பிரபஞ்சமெல்லாம் மின் அலைகளே; அந்த மின் அலைகளிலும் கோடானு கோடியில் ஒரு பங்குதான்



பொருள் உள்ளது; மற்றதெல்லாம் சூனியமே; இன்னும் ஆழ்ந்து ஆராய்ந்தால் இந்த உலகம் சூனியம் மிகுந்த அலைகள் மட்டும் அல்ல. ஏதோ ஒரு மகாமதியின் எண்ணங்களே இவை எல்லாம் என்று தெரியக் கூடும்' என விஞ்ஞானம் கூறுகிறதல்லவா? ஜடப் பொருள்களெல்லாம் எண்ணத் திவலைகளாகத் தெறிக்கும் அந்த உயரிய பாவத்தில்தான் நீந்திக் கொண்டிருந்தார் பரமஹம்ஸர்.

அதற்கும் மேலாக ஓர் அதிசய நிலை. பொருள்கள் யாவும் எண்ணமாக ஒடியதைப் போல, எண்ணங்களெல்லாம் பொருள்களாக உருவத்துடன் கூடி நிற்கும் உலகங்களின் மேலாக ராம கிருஷ்ண தேவர் சென்று கொண்டிருந்தார். அன்பு, அழகு, அறிவு இந்தத் தத்துவங்களின் உருவங்களை யெல்லாம் தேவ தேவியராகக் கண்டார் அவர்.



அதையும் விட சூட்சுமமான பிரதேசங்களில் அவரது பயணம் தொடர்ந்தது. எண்ணம், பொருள் என்ற எல்லா மாயத் தோற்றங்களையும் பரம் பொருளிடமிருந்து பிரிக்கும் எல்லைக் கோட்டில் சஞ்சரித்துக் கொண்டிருந்தார் குரு மகராஜ். என்ன ஆச்சரியம்! இனி ஒன்றேயான மெய்ப் பொருளைத் தவிர வேறெதுவும் இடையாது என்று அவர் எண்ணிய அந்தப் பரமானந்த வெளியிலே ஏழு முனிவர்கள் திவ்வியமான குளிர்ந்த ஒளி வீசிக் கொண்டிருந்தார்கள். எத்தகைய அற்புத தரிசனம் அது! ஸப்த ரிஷிகளும் பரப்பிரமத்துடன் ஒன்றிய தியான நிலையில் திளைத்திருக்கிறார்கள். தேவ தேவியருக்கும் மேம்பட்ட உயர்ந்த ஸ்தானத்தில் இருப்பவர்கள் அல்லவா அவர்கள்! ஞானத்திலும் தூய்மையிலும் ஒப்புயர்வற்ற அவர்களைப் பக்தி புஞ்சிதமாகத் தரிசித்துக் கொண்டிருந்தார் பரமஹம்ஸ ராமகிருஷ்ணர்.

அப்போது இவற்றை யெல்லாம்விட மகத்தான ஓர் அதிசயம் நிகழ்ந்தது. உருவும், குணமுமற்ற பரம்பொருள் ஆனந்தச் சாறு போல ஒரு தோற்ற மிட்டது. சாற்றில் ஒரு பகுதி இறுகியது. கற்கண்டாயிற்று. அந்த விநோதமான கற்கண்டுக்கு எழிலார்ந்த கையும், காலும், உடலும், தலையும், கண்ணும், மூக்கும் மலர்ந்தன. அந்தத் தெய்விகக் குழந்தை எவ்வாறோ ஸப்த ரிஷிகளில் ஒருவரின் மடியில் வந்து விழுந்தது. அங்கிருந்து எழுந்து, துவளும் தன் கோமள உடலுடன் அவர் மேனி மீது ஏறி ஏறிச் சரிந்தது. ஒருவாறு தனது புஷ்பக் கரங்களால் அவருடைய கழுத்தைக் கட்டி அணைத்து, அவருடைய காது உயரத் தன் கனி வாயை உயர்த்தியது. அவருடைய காதில் ஏதோ தேவ இரகசியத்தை — தேவ நிலைக்கும் உயர்ந்த பிரம்ம இரகசியத்தை— ஓதிற்று. அந்த இரகசிய ஒலியே மந்திரக் கோலாகி மாமுனிவரின் நிச்சலமான உள்ளத்தைத் தீண்டியது. அவர் தமது காலம் கடந்த சமாதி நிலை சடேரெனக் கலையப் பெற்றார். பாதி திறந்த தமது பழுத்த விழிக் கலைகளால் அந்தப் பாலனை விழுங்கி விடுவது போலப் பார்த்தார். அந்தக் குழந்தை ஆனந்தம் கரை புரளும் குரலில், ''நான் பூமிக்குப் போகிறேன். நீ என்னோடு வர மாட்டாய்?'' என்று கேட்டது. பேரின்ப வீட்டிலிருந்து துன்ப மயமான உலகுக்குச் செல்வதிலா இத்தனை ஆனந்தம்? ஆம், அதனால் அந்தத் துன்ப உலகிலிருந்து இன்ப உலகுக்குப் பலரை இட்டு வரலாம் என்ற கருணையின் ஆனந்தம்தான் அது.

அருள் பூரித்து நிற்கும் திருஷ்டியுடன் குழந்தையைப் பார்த்தார் ரிஷி. 'வருகிறேன்' என்று இணக்கம் தெரிவிக்கும் முறையில் தலையை ஆட்டினார். மறு கணமே நினைவிழந்து, நினைவு கடந்த களிப்புக் கடலிலே மூங்கிப் போய் விட்டார். எனினும் அவரிலிருந்து அலை அலையாக ஏதோ பிரிந்துதிரண்டது. ஒளிமயமாகிக் கீழ் நோக்கிச் செல்லலாயிற்று. உருண்டு உருண்டு சென்றுகொண்டே யிருந்தது. எண்ணங்கள் உருவு தரித்துலவிய உலகங்கள், உருவங்கள் எண்ணங்களாகத் திரிந்த உலகங்கள், தாரா கணங்கள், சூரியன், சந்திரன், வாயு மண்டலம், மேகக் குவியல்கள் யாவற்றையும் கடந்து அந்த ஒளி கீழ் நோக்கி 'விர்' ரென்று விரைந்து கொண்டே யிருந்தது. நில உலகமாகிய இந்த நம் உலகத்தில், பாரதத்தில், வங்காளத்தில், கல்கத்தாவில், சிம்லா பகுதியில், கௌர் மோகன் முகர்ஜி தெருவில் உள்ள விசுவநாத தத்தரின் இல்லத்துள் புகுந்தது.

விசுவநாத தத்தரின் மனைவி புவனேசுவரிக்கு ராஜாவைப் போல ஓர் ஆண் குழந்தை பிறந்த செய்தி பிரசவஅறையிலிருந்து வெளிப்பட்டது. (தொடரும்)

போகிற போக்கில்....

சிட்டுக் குருவி

'இந்திய மக்களில் ஒவ்வொருவர் கண்ணீரையும் துடைப்பதுதான் என் லட்சியம்' என்று மகாத்மா கருதினார். நாடெங்கும் அவரது மறைவு நாள் கொண்டாடப்பட்டது. மகாத்மாவை அன்று நினையாதவரே இல்லை என்று கூறலாம். ஏழை மக்களெல்லாம் அன்று அவரை நினைத்துக் கண்ணீர் உகுத்தார்கள்.

சுயராஜ்யம் வந்ததும் ஏழைகளின் துன்பமெல்லாம் பறந்து போய்விடுமென்று அனைவரும் எதிர்பார்த்தார்கள். அதிலும் முக்கியமாக ஏழை விவசாயிகள் கட்டிய மனக் கோட்டைகளுக்குக் கணக்கே - இல்லை. மாகாண சுயாட்சி இருக்கும் போது முதல் காங்கிரஸ் மந்திரி சபை ஏற்பட்டது. சென்னைக்குப் 'பிரதம'ராக வந்தவர் ராஜாஜி. வந்ததும் வராததுமாக ஜமீந்தாரி ஒழிப்புச் சட்டமும் கடன் நிவாரணச் சட்டமும் கொண்டு வந்தார். ஏழை விவசாயிகள் இந்தச் சட்டங்களைக் கண்டு ஆனந்தக் கண்ணீர் வடித்தார்கள். அரைகுறை மாகாண சுதந்திரம் இருக்கும் போது இவ்வளவு பெரிய சீர்திருத்தம் வந்தது என்றால் பரிபூரண சுயராஜ்யத்துக்குப் பிறகு எப்படியெல்லாம் இருக்குமென்று கற்பனைசெய்து சந்தோஷப்பட்டார்கள்.

ஃ ஃ ஃ

விவசாயி சந்தோஷப்பட்டால் இந்தியாவே சந்தோஷப்படுவதாகத்தான் அர்த்தம். ஏனெனில் இந்தியாவின் ஜனத்தொகையில் 70 சதவிகிதத்தினர் விவசாயிகள். நமது நாட்டின் மொத்த தேசிய வருமானத்தில் பாதித் தொகை விவசாயத் துறையிலிருந்து கிடைக்கிறது. இந்த விவசாயி இன்று எப்படி இருக்கிறான் ?

1946-ல் இருந்த நிலவரி, தண்ணீர்த் தீர்வை, கன்று காலிகள் விலை, உரம் — உப கருவிகள் விலை, எல்லாமே இன்று ஏகத்தாறுக ஏறியிருக்கின்றன. ஆனல் விவசாயியின் வருமானம் மட்டும் ஏறவில்லை. இந்தியாவின் சராசரி வருமானம் முந்நூறு ரூபாய் என்று வைத்துக் கொள்வோம். இதில் விவசாயிகள் வருமானம், அதாவது கிராமப்புற வருமானம் மிகக் குறைவு. கிராமப்புறங்களில் வாழ்கிற மக்களில் முப்பது சதவிகிதத்துக்குச் சற்று மேலாக ஆண்டொன்றுக்கு நூறு ரூபாய்தான் சம்பாதிக்கிறார்கள் என்று கணக்கு இருக்கிறது. அம்பியும் குழவியும் பண விக்கப் புயலில் ஆகாயத்தில் பறக்கும் இந்நாளில் இந்த நூறு ரூபாய் எந்த மட்டுக்கு? ஏழை விவசாயி கண்ணீர் வடிக்கிறான். தங்கள் கண்ணீரைத் துடைப்பதாகக் கூறிய மகாத்மா எங்கே என்று கலங்குகிறான்.

ஃ ஃ ஃ

ஏற்கெனவே கண்ணீர்விட்டு நிற்கும் இந்த விவசாயிக்குச் சென்னை சர்க்கார் இந்த ஆண்டு பட்ஜெட்டில் ஒரு பரிசு கொடுக்கப் போகிறார்கள். அதாவது நன்செய் நிலத்துக்குத் தீர்வையை இரட்டிப்பாக்கவும் புஞ்சை நிலத்துக்குத் தண்ணீர்த் தீர்வையைக் கூட்டப் போவதாகவும் தீர்மானித்திருக்கிறார்கள். சென்ற சட்டசபைக் கூட்டத்திலேயே அறிக்கை வந்தது. கவர்னர் பெருமானும் இந்தக் கூட்டத்தில் வெளியிட்டு விட்டார். ஆகவே அடுத்த தீர்வை கட்டும் போது விவசாயிகள் கண்ணீர் மட்டும் விடமாட்டார்கள்; 'கோ'வெனக் கதறி அழுதாலும் வியப்பில்லை. இந்தச் சூழ்நிலையில் உற்பத்தி எப்படிப் பெருகும்? இதையெல்லாம் கேட்பது யார்? கேட்டாலும் கேளாக் காதினர்களாக

'அவர்கள்' இருப்பதெனை முடிவு செய்து விட்ட பிறகு என்ன செய்வது?

ஃ ஃ ஃ

அவசர காலத்தை முன்னிட்டுப் பாஞ்சால முதன் மந்திரி கெய்ரோன் தமது மந்திரி சபையைக் குறைத்து 'இதோ சிக்கனம்' என்றார். உத்தரப் பிரதேச முதலமைச்சர் குப்தா, 'இப்படியெல்லாம் நான் செய்ய முடியாது' என்று கூறி விட்டார். டில்லி மத்திய சர்க்காரும் மந்திரிகளைக் குறைப்பதாக இல்லை. இதர மாகாணங்கள் இன்னும் 'யோசித்துக் கொண்டே' இருக்கின்றன. அவசரகாலம் நீள்வது மாதிரி இந்த யோசனையும் நீளுமென்பதைக் கூறத் தேவையில்லை.

சென்னை சர்க்கார் இப்படி யோசிக்கவே யில்லை. அவர்கள் நடவடிக்கைகளில் இறங்க ஆரம்பித்து விட்டார்கள். எப்படி இறங்கியிருக்கிறார்கள் என்றால், 'ஒரு சூப்ரின்டெண்டெண்ட், ஒரு அப்பர் டிவிஷன் குமாஸ்தா, ஒரு லோயர் டிவிஷன் குமாஸ்தா ஆகியோரைச் சட்டசபை இலாகாவிலிருந்து தற்காப்பு முயற்சி சம்பந்தமான வேலைகளுக்கு மாற்றியதன் மூலம் 'சிக்கனத்தை'க் கையாண்டு காட்டியிருக்கிறார்கள்.

அதிக வரி கொடுக்கப் போகும் விவசாயி இந்தச் செய்தியைப் பார்க்கும் போது எந்த அளவுக்கு சந்தோஷப்படுவான் என்று தெரியவில்லை. இந்தச் செய்தி வந்த தினமே மற்றொரு செய்தி வந்திருக்கிறது. அதாவது சென்னை சட்ட சபையைச் சேர்ந்த அங்கத்தினர்களின் நித்தியப்படி ரூ. 12–50 லிருந்து பதினைந்து ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறதாம். இதுவும் அவசர கால நடவடிக்கை போலும்!

ஃ ஃ ஃ

லஞ்ச ஒழிப்பு நடவடிக்கை என்று முன்பு அறிக்கைகள் வரும். அதில் ஒரு பியூன், ஒரு கான்ஸ்டேபிள் பிடிபட்டதாக விவரம் வரும். இதைப் பார்க்கும் பொது மக்கள் சிரிப்பார்கள். லஞ்சக் கடல்களில் மிதக்கும் திமிங்கிலங்கள், சுறுமீன்கள் ஆகியவை யெல்லாம் பிடிபடாது. இந்தச் சின்னஞ் சிறு அப்பாவி மீன் குஞ்சுகள்தான் அகப்பட்டனவா என்று நகைப்பார்கள். அதே போல் 'சிக்கன ஏற்பாடு' ஒரு சில குமாஸ்தாக்களை இன்னொரு இலாகாவுக்கு மாற்றுவதன் மூலம் நடந்து, நகைப்புக்கு இடமளித்திருக்கிறது. நகைத்து வைப்போம்! பொன் நகைக்கு மட்டும் தானே ஆபத்து வந்திருக்கிறது?

வட்ட மேஜை

பொற்கொல்லர் துயரம்

நம் இந்தியத் துணைக் கண்டம் பல வகைத் தொழில்களில் முன்னேற்றம் அடைந்து வருகிறது என்றாலும், 'பொற்கொல்லர்' மட்டும் அரசினரின் ஆதரவோ, பாதுகாப்போ இல்லாததால் 'காப்பற்ற குழவி போலும், 'காவலற்ற சோலை' போலும், இருந்து வருகின்றனர்.


இந்நிலையில் அரசினர் தங்கத்தின் தரம் பதினான்கு காரட்டு மட்டும்தான் இருக்க வேண்டுமென்று தரத்தைக் குறைக்கக் கட்டளை பிறப்பித்துள்ளனர். அரசினரின் கட்டளைப்படி தங்கம் பதினான்கு காரட்டுகளாக மாறினால் 1946-ம் ஆண்டு தென்னகத்துக் கைத்தறி நெசவாளர்கள் என்பது லட்சத்துக்கு மேற்பட்ட தொழிலாளர்கள், பாதுகாப்பு இல்லாமையால் தொழில் இழந்து தொல்லைகளுக்கு உள்ளாகி, தாங்கள் பெற்ற குழந்தைகளை விலை கூறி விற்ற பிச்சைக்காரர்களாக மாறி விட்டது போல், பொற்கொல்லர்களும் பதினாறு காரட் தங்கத்தில் நகைகள் செய்ய இயலாது தொழிலை விட்டுத் தொல்லைகள்பட நேரிடும்.

பதினான்கு காரட் தங்கத்தை யந்திரங்கள் இயக்கித் தொழில் புரியுமே தவிர, கைவினைஞர்கள் கையால் இயக்கித் தொழில் செய்ய முடியாது. மேலை நாடுகளில்கூடத் தங்க விலைக்குக் கட்டுப்பாடு இருக்கிறதே யொழியத் தங்கவினைத் தொழிலுக்குரிய தங்கத்துக்கு, தரக் கட்டுப்பாடு இல்லை. மேலும் மேல்நாடுகளில் சீதோஷ்ண நிலைக்குத் தகுந்தபடி பதினான்கு காரட்டிலும் பதினெட்டு காரட்டிலும் நகைகள் அணிந்து கொள்ளுகிறார்கள்.

இந்நாட்டு சீதோஷ்ண நிலைக்கு, இருபத்திரண்டு காரட்டில் நகைகள் செய்கிறார்கள். பதினான்கு, பதினெட்டு காரட்டில் நகைகள் செய்தால் காதும், கழுத்தும், மூக்கும், கையும் அரிப்பு ஏற்பட்டுப் புண்ணாகுமே தவிர உடல் நிலையைச் சமனப் படுத்தாது. இந்நாட்டு சித்த வைத்தியமும், ஆயுர் வேதமும் தங்கம் உடல் உஷ்ணத்தைத் தணிப்பது பற்றி மிக விரிவாகக் கூறுகின்றன. மேலும் பதினான்கு காரட்டில் ஆபரணங்கள் செய்வதாயிருந்தால் பத்து கிராம் எடையுள்ள நகைக்கு இரண்டு கிராமுக்கு மேல் சேதமாகும்.

இரண்டொரு மாற்று குறைந்த பொன்னிலேயே கல் பதித்த நகைகளையும் நுண்ணிய வேலைப்பாடுகள் அமைந்த வேலைகளையும் செய்யத் தொல்லைப்படும் பொற் கொல்லர்கள், தங்கத்தின் தரம் பதினான்கு காரட்டாக மாறினால் கல் பதித்த நகைகள் செய்ய முடியாது. இதனால் கல் பட்டை தீட்டும் தொழிலாளிகளும், நூலைத் தொழிலாளிகளும் மூன்றரை லட்சம் பேர்களுக்கு மேல் திருச்சி, திருச்சூர், திருச்செங்கோடு, தஞ்சாவூர், மதுரை, சென்னை அதன் சுற்றுப்புறங்களில் உள்ளவர்கள் வேலையை இழக்க நேரிடும்.

மேலும் ஒவ்வொரு பொற்கொல்லரும் நூறு ரூபாய் கட்டணம் கொடுத்து லைசென்க



தி. மு. க. விடம் மனமாற்றம் ஏற்படவில்லை என்று மந்திரி பக்தவத்சலம் அவர்கள் கருதுகிறார்

பெற்றுத்தான் தொழில் செய்ய முடியும் என்று கூறுகிறார்கள். அன்றாடம் தேவையான உணவுப் பொருள்கள், வேலை செய்யக் கூடிய சாமான்களின் விலை விஷம்போல் உயர்ந்துள்ள இந்நாளில் குறைந்த கூலிகள் வாங்கி அரைப் பட்டினி கிடக்கும் தொழிலாளிகள் நூறு ரூபாய் கொடுத்து எப்படி லைசென்ஸ் பெற முடியும்? இந்நிலையில் அரசு புதிதாக விதித்துள்ள சட்டத்தின்படி பொற்கொல்லர்களின் நுண்ணத் தொழில் புரிவோரும், (சுமார் பத்து லட்சம் பேர்கள்) பட்டினி கிடக்க நேரிடும்.

பொன்னம்பட்டு
24—1—63

பெ. சு. முனிரத்தினம்
தலைவர், தென்மாநிலம் ஐம்பெருந் தொழில்வல்லோர் மன்றம்

படமும் கதையும்

சமீப காலத்தில் தமிழ்ப்பட உலகில் சில மாறுதல்கள் நிகழ்ந்து வருகின்றன. வங்காளி, இந்திக் கதைகளைத் தேடிப் போன படத் தயாரிப்பாளர்கள் இப்போது தமிழ்க் கதைகளைத் தேட ஆரம்பித்திருக்கிறார்கள். இப்படிக் கதைகளைத் தேடுவதில் நேர்மையைக் கடைப்பிடிப்பது ஒரு வழிதான் என்றும், வேறு பல வழிகளும் உள்ளன வென்றும் தெரிய வருகிறது.

'கல்கி' 1960 தீபாவளி மலரில் நான் எழுதிய 'சிறை காக்கும் காப்பு' என்னும் கதையின் முடிவு, சற்றே வேறுபட்ட சாயலுடன், சமீபத்தில் வெளியாகியுள்ள ஒரு சினிமாப் படத்தின் கடைசி முடிவாக இருப்பதைக் கண்டு ஆச்சரியப்படுகிறேன். முடிவில் கதாநாயகி கிறிஸ்துவ கன்யா ஸ்திரீயாக மாறுவதாகவும், கன்யா ஸ்திரீகளின் கூட்டத்தோடு அவள் போகும் போது அவளது உறவினரால் பார்க்கப்படுவதாகவும் என் கதையில் காணப்படுகிறது. இதே சம்பவச் சாயலை அப்படியே அந்தத் திரைப்பட முடிவில் காண முடிகிறது. ஆனால் கதாநாயகிக்குப் பதிலாகக் கதாநாயகனுக்கு இந்தக் கதி ஏற்படுகிறது.

ஒரு கதாநாயகனையோ, நாயகியையோ கிறிஸ்துவராக மாற்ற எல்லாருக்கும் கற்பனை தோன்றலாம். ஆனால் அந்த முடிவைக் காட்டும் சம்பவங்கள் எல்லாருக்கும் எளிதில் ஒரே மாதிரித் தோன்றி விடாது.

தழுவல்கள் போன்ற விஷயங்களில் யார் மீதும் திட்டவட்டமாகப் பழி சுமத்த முடியாது என்பதை உணர்ந்திருக்கிறேன். குற்றம் சாட்டும் எண்ணமும் எனக்கில்லை. தக்க ஆதாரங்கள் இருந்தாலும் ஏமாற்றத்துக்கு உள்ளான எழுத்தாளர்கள் எல்லோரும் ஏராளமாகப் பணச் செலவு செய்து வக்கீலையும் கோர்ட்டையும் நாடிப் போவதும் சாத்தியமில்லை. இதில் படவுலகக்காரர்களே தங்களுக்குள் ஒரு நியதியை வகுத்துக் கொள்ள வேண்டும். பத்திரிகையில் வரும் கதைகள் இத்தகைய துர்ப்பாக்கியங்களுக்கு ஆளாகாமல் இருக்கப் படாதிபதிகள் கண்ணியத்துடன் நடந்து கொள்ள வேண்டும்.

சென்னை
24—1—63

ஸ்ரீ வேணுகோபாலன்



என்ன நாரதரே! ருக்மிணி துளசி தளத்தை வைத்து ஜெயித்தாள்! இவா எந்த தளத்தை வைப்பா?
யுத்த தளத்தை!
துலாபார விழா!
எவ்வளவு தங்கக் கட்டிகள் நோட்டுக் கட்டுகள் வைத்தும் போதவில்லையே! இவர் மகா கனம் மந்திரியோ?
இவர் லேசுப் பட்ட மனிதர் அல்ல என்று நான் சொன்னது சரியாப் போச்சு பார்த்தீரா!
ஏன் சார் எனக்கு ஒரு சந்தேகம்! ஒரு வேளை கிருஷ்ண பரமாத்மாவே வந்து மாயா ஜாலம் செய்கிறாரோ!
கரெக்ட்! ஓடிப் போய் ஒரு துளசி இலை கொண்டு வந்து வச்சுப் பார்த்து விடுவோம்!
நமக்குச் சமமா உலகத்தில் எதுவும் இல்லை என்று அவர் நினைப்பு சார், முகத்தைப் பாருங்க!
அது நம்ப விறகுக் கடை. ரெட்டைத் தராசுங்கறது தெரியாமல் எல்லோரும் பேசறாங்க பாரேன்!
சாமு!



இவர்கள் ரிடையரானால்?

குண்டுமணி

"என்ன ஸார்! காலா காலத்திலே நல்ல பேர் இருக்கும்போதே போய் விடுவது நல்லது. அந்த நல்ல பெயர் அப்படியே நிலைத்து நிற்கு மல்லவா?" என்று கூறினார் வயதானவர் தம் நண்பரிடம்.

"என்ன இந்த உலகத்தை விட்டா? அதற் குள் நீங்கள் எதற்கு அவசரப்படுகிறீர்கள்? உங்களுக்கு ரிடையரான பிறகு இரண்டு வருஷம் எக்ஸ்டென்ஷன் கிடைத்திருக்குன்னு வேறு சொன்னார்களே!"

"என்னைச் சொல்ல வில்லே, ஸார்! ஆஸ்திரேலிய கிரிக்கெட் ஆட்டக் காரர்களான காப்டன் பீனோவும், டேவிட்ஸனும், ஹார்வியும் தங்கள் ஆட்டமும் புகழும் உச்ச நிலையில் இருக்கும் பொழுதே டெஸ்ட் ஆட்டத்தி லிருந்து ரிடையராகப் போகிறார்களாம்! பேப்பரில் போட்டிருக்கு!" என்றார்.


"ஸார்! நல்ல ஆட்டக்காரர்கள் இப்படி யெல்லாம் சீக்கிரம் ஓய்வெடுத்துக் கொள்ள லாமா? அப்புறம் ஆட்டம் என்ன ஆவது? நீங்களே சொல்லுங்கள்!" என்று தோசை யைத் திருப்புவது போல் அவரிடமே கேள்வி யைப் போட்டார் நண்பர்.

என்ன பதில் சொல்வார் அவர்?

வயதானவர்கள்தான் இப்படி என்றில்லே, சிறுவர்களும், வாலிபர்களும், கிரிக்கெட் ரசி கர்களும் ஆஸ்திரேலிய ஆட்டக்காரர்களான காப்டன் பீனோவும், டேவிட்ஸனும், ஹார்வி யும் இப்படித் திடீரென்று டெஸ்ட் கிரிக்கெட் பந்தயங்களிலிருந்து ஓய்வெடுப்பதைக் கேட்டு மன வருத்தப்படுகிறார்கள். இவர்களது நல்ல ஆட்டத்தை இனி காண முடியாமல் போய் விடுமே என்று அங்கலாய்க்கிறார்கள். ஆஸ்தி ரேலிய நாட்டுக்கே இந்தப் பிரச்னையை எப் படித் தீர்த்து வைப்பது என்பது பெரும் கவலையாகத்தான் இருக்கிறது.

ஆஸ்திரேலியாவில் நியூ சவுத் வேல்ஸில் ஒரு சிறுவன் பந்தை வீசிக் கான்கிரீட் சுவரை உடைக்க முயற்சி செய்து கொண்டிருந்தான். இதைக் கண்டு அந்தச் சிறுவனின் தந்தை அவ னைக் கோபித்துக் கொண்டாரா? இல்லை, அவனை வியப்புடன் பார்த்தார். அவன் தம்மை விடக் கிரிக்கெட் விளையாட்டில் முன்னணியில் நிற்பான் என்று எண்ணினார். அவர் எண்ணம் வீண் போகவில்லை.

கிரிக்கெட் உலகில் இன்று ஆஸ்திரேலியா முன்னணியில் நிற்பதற்குக் காப்டன் பீனோ வின் திறமையான பந்து வீச்சும், கோஷ்டியை நிர்வகிக்கும் திறனும் காரணமாக அமைந் துள்ளன. பேஷ்பிடிக்கும்மன்னர் பீனோ இன்று உலகில் உள்ள பந்து வீசும் நிபுணர்களில் முதன்மை ஸ்தானம் வகிக்கிறார். இங்கிலாந்தில் 'ஆஷெஸ்' வெற்றி இவரது தலைமையின் சிறப் புக்குச் சான்றாகும்.



காப்டன் பீனோ

இன்று ஆஸ்திரேலியாவில் இங்கி லாந்து கோஷ்டியினரை ஆஸ்திரேலிய கோஷ்டியினர் திணற அடிக்கி றார்கள் என்றால் அதில் பீனோவின் பங்கு அதிகமாகும். இரண்டு டெஸ்ட்கள் வெற்றி தோல்வி யின்றியும், இரு கோஷ்டிகளுக் கும் ஆளுக்கொரு டெஸ்டில் வெற்றியும் கிட்டியிருக்கின்றன. ஐந்தாவது டெஸ்டைக் கிரிக்கெட் ரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்த் துக் கொண்டிருக்கிறார்கள். இந்தச் சமயத் தில்தான் இந்தத் திடுக்கிடும் செய்தி கிடைத் திருக்கிறது.

பதினெட்டாவது வயதிலே ஷெப்பீல்டு ஷீல்டுக்காக ஆடிய ஆட்டத்தில் பீனோவுக்கு நன்றாக அடிபட்டு விட்டது. மறுபடியும் கிரிக்கெட் ஆட முடியுமோ, முடியாதோ என்ற நிலைமை ஏற்பட்டு விட்டது. ஆஸ்தி ரேலியாவின் அதிர்ஷ்டம் மறுபடியும் அவர் ஆடுவதற்கு வந்தார். இன்று அவர் டெஸ்ட் பந்தயங்களிலிருந்து ஓய்வெடுக்கப் போகிறார் என்றால் ஆஸ்திரேலிய மக்களுக்கு எப்படி யிருக்கும்?

"பீனோ மட்டுமில்லே, நானும் ஓய்வெடுக்கப் போகிறேன்!" என்று ஆஸ்திரேலிய பந்துவீச்சு நிபுணர் டேவிட்ஸனும் சொல்லி யிருக்கிறார்.

இங்கிலாந்து கிரிக்கெட் மன்னர் ஹட்டனுக்கு ஆஸ்திரேலிய கோஷ்டி யில் டேவிட்ஸன் பீல்டிங்கில் இருக் கிறார் என்றால் அவர் பக்கம் அடிக்கப் பயம்தான்! கழுகு எப்படிப் பாய்ந்து சென்று இரையைக் கவ்வுமோ, அப் படி, பறக்கும் பந்துகளை யெல்லாம் பாய்ந்து பிடித்து எதிரியைத் திணற அடித்தவர் டேவிட்ஸன். ஆஸ்தி ரேலியாவில் முன்பு நடந்த பந்த யத்தில் ஹட்டன் அடித்த பந் தைப் பிடிப்பது கஷ்டம் என்று இருந்த போது பீல்டிங்கில் மூன்று



கஜ தூரத்தில் நின்ற டேவிட்ஸன் அதை அபாரமாகப் பிடித்ததை ஹட்டன் அதற்குள் மறந்து விடுவாரா, என்ன?

டேவிட்ஸன் ஆஸ்திரேலிய நாட்டின் 'ஸ்டார் பௌலர்!' ஆஸ்திரேலிய — இங்கிலாந்து நான்காவது டெஸ்ட் பந்தயம் இரண்டாவது இன்னிங்ஸில் டேவிட்ஸன் கலந்துகொள்ளாததினாலேயே ஆஸ்திரேலியர்களுக்கு வெற்றி கிடைப்பதற்குப் பதிலாக ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிந்தது என்று நினைக்குமளவுக்கு இருந்ததானால் அவரது திறமையை அதிலிருந்து தெரிந்து கொண்டு விடலாமே?

இவர்கள் இரண்டு பேரும்தான் இப்படி விலகிக் கொள்கிறார்கள் என்றால் 'இரண்டாவது பிராட்மன்' என்று புகழ்ப்பெற்ற இடதுகை ஆட்டக்காரர் ஹார்வியும் டெஸ்ட் பந்தயங்களிலிருந்து விலகப்போவதாக ஒரு வெடிகுண்டைத் தூக்கிப் போட்டிருக்கிறார். இவர் தம் மனைவியாரோடு தொழில் துறையில் ஈடுபடப் போவதால் இந்த முடிவுக்கு வந்திருப்பதாகக் கூறுகிறார். 'இன்னும் எவ்வளவோ திறமையுடன் நான் எதிர்காலத்தில் ஆட முடியும் என்று கருதுகிறேன். ஆனால் நன்றாக ஆடிக் கொண்டிருக்கும்போதே விலகி விடுவது நல்லதல்லவா?' என்கிறார் ஹார்வி.

ஆஸ்திரேலிய ஆட்டக்காரர்களில் பாட்டிங்கில் சூரப் புலியாகவும், பீல்டிங்கில் நெருப்பாகவும் விளங்கும் ஹார்வியும் ரிடையராவது ஆஸ்திரேலிய கோஷ்டிக்குக் கை ஒடிந்த மாதிரிதான்! ஆஸ்திரேலிய பாட்ஸ்மன்களில் பிராட்மனுக்கு அடுத்தபடியாகச் சதக் கணக்கில் ரன்களைக் குவித்தவர் ஹார்வி. ஆஸ்திரேலியாவுக்கும் மேற்கு இந்தியத் தீவுகளுக்கும் நடந்த கிரிக்கெட் பந்தயத்தில் ஆஸ்திரேலிய ஆட்டக்காரர்கள் ஐந்து பேர்கள் சதத்துக்கு மேல் ரன்களை எடுத்த போது, ஹார்வி 204 ரன்களை எடுத்துப் பெரும் புகழ் பெற்றார். கிரிக்கெட் ரசிகர்களுக்குப் பல விதக் கோணங்களில் பந்தைத் தாக்கி விருந்தளிக்கும் ஹார்வியை இனி டெஸ்ட் பந்தயங்களில் காண முடியாதே!


'டெஸ்ட் ஆட்டத்துக்கு வரும் போதே எத்தனையோ ஆட்டக்காரர்களை இவர்கள் ரிடையராக மாட்டார்களா, ஆட்டம் உருப்படுமே' என்று கிரிக்கெட் ரசிகர்கள் எண்ணியது உண்டுதான்! ஆனால் இவர்கள் விஷயத்தில் அது செல்லுமோ?

ஆட்டத்தின் உச்சத்திலும், புகழின் உச்சியிலும் உள்ள இம்மூன்று கிரிக்கெட் ஆட்டக்காரர்களும் இந்தத் தருணத்தில் ஓய்வெடுப்பது அவர்களுக்கு நல்லதுதான். ஆனால் அவர்கள் இடத்தை முழுதும் இட்டு நிரப்பக் கூடியவர்கள் வந்தபிறகல்லவா அவர்கள் விலக வேண்டும்?

நம் நாட்டில் வேலையில் ரிடையர் ஆனவர்களுக்கெல்லாம் 'எக்ஸ்டென்ஷன்' அளிக்கும் காலம் இது! ஆஸ்திரேலிய கிரிக்கெட் சங்கத்தினர் அவர்கள் மனத்தைத் திருப்பி, அவர்கள் டெஸ்ட் ஆட்டத்துக்கும் எக்ஸ்டென்ஷன் வழங்கினால் நன்றாயிருக்கும். நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? 'ததாஸ்து' தானே!


ஆதரவுடன் சீராட்டி
ஆஸ்டர்மில்க்
பாலூட்டி...
OSTERMILK
உங்கள் ஆசைக் கண்மணியின் பாக்கியம்: ஆஸ்டர் மில்க் அளிக்கும் ஆரோக்கியம். காரணம், தாய்ப் பாலுக்கு நிகரானது ஆஸ்டர்மில்க். பரிசுத்தமான பாலிலிருந்து தயாரிக்கப்பட்டுள்ள ஆஸ்டர்மில்க், பாப்பாவின் பச்சிளம் ஜீரண சக்திக்கேற்பப் பிரத்தியேகமாகப் பக்குவப்படுத்தப்பட்டுள்ளது. தவிர, பற்களும், எலும்புகளும் திடவளர்ச்சி பெறுவதற்கான வைட்டமின் 'டி'யும் இரத்த சோகை தட்டாமல் காப்பதற்கான அயச்சத்தும் அதில் சிறப்புறச் சேர்க்கப்பட்டுள்ளன.
...தாய்ப் பாலுக்கு நிகரானது.
இலவசம்: 'ஆஸ்டர் மில்க் புத்தகம்' (ஆங்கிலப் பிரதி)...
...விரிவுமிக்க, குழந்தைப் பராமரிப்பு நூல் ...தபால் செலவுக்காக 50 ந. பைசாத் தபால் வில்லைகள் இணைத்து எழுதுக: 'ஆஸ்டர்மில்க்' தபால் பெட்டி எண் 2420, சென்னை-2.


8-351-M. TM


பண்பாடு தெரியாதவங்க ளுக்குப் பங்களா வாழ்க்கை வேறு....
ஐயா, கோபிக்காதீர்கள். தங்கள் செய்கைக்கு நான் நன்றி செலுத்து கிறேன்.
சந்திரனே சாட்சி
8
கதை: கௌசிகன்
சித்திரம்: விநு
நீங்கள் யார்? எதற்காக எனக்கு நன்றி...?
சற்று முன்பு ஒரு குழந்தையின் உயிரைக் காப்பாற்றினீர்களே, அதன் தாயார் நான்.
நீங்களா? அப்படியானால் அந்தப் பெண்?
அந்தக் குழந்தைக்கு உரிமையான செல்வத் தை அனுபவிக்க வந்தவள்.
உங்கள் குழந்தை அவளுடன் அந்தப் பங்களாவில் இருப்பானேன்?
விதி, என் குழந்தையை என்னிடமிருந்து பிரித்து அவர்களிடம் சேர்ப்பித்து விட்டது. அநாதையைப் போல அலட்சியமாக அவர்கள் என் செல்வத்தை வளர்ப்பதை எட்ட நின்று பார்த்துக் கண் ணீர் வடிப்பதைத் தவிர என் னால் வேறு எதுவும் செய்ய முடியவில்லை.
அப்போதே நினைத்தேன் அது அந்தப் புண்ணியவதியின் குழந்தை யாக இருக்காது என்று.
பாபுவின் தாயார் நீங்கள் தான் என்றால் சட்டப்படி...
சட்டம்...ம்! அது அநியாயக் காரர்களுக்காகவே வகுக்கப் பட்டதாகு சதித் திட்டமல்லவா? உணர்ச்சிவசப்பட்டு உங்களிடம் ஏதேதோ பேசி விட்டேன். நான் வருகிறேன்


சட்டென்று போய் விட்டாளே அந்தப் பெண் - தன் பெயரைக்கூடச் சொல்லாமல்
பாளையூரில் நமக்கு விநோதமான அநுபவங்களெல்லாம் ஏற்படுகின்றன. ம் இனி மேலே? கிளம்பு ஹோட்டலுக்கு!
நாளெல்லாம் கண்ணீர் வடித்துக் கொண்டிருக்க இன்னைக்கு எந்தக் காட்சியைப் பார்க்கப் போயிருந்தாய்?
அம்மா, நீ என்ன சொன்னாலும் என் பாபுவைப் பார்க்காமல் என்னால் இருக்கவே முடியாது.
அடி பெண்ணே, இப்படி நீ பெற்ற குழந்தையை அள்ளி அணைத்து மகிழ முடியாமல் எட்ட இருந்து பார்த்து மருகிக் கொண்டிருந்தால் உன் உடம்பு என்ன ஆகும்!
இந்த உடம்பு இனி எதற்காக, யாருக்காக அம்மா? எப்படியோ போகட்டும் போ.
நூறு லட்ச ரூபாய் சொத்துக்குரியவனை என் பாபு இன்று நடுவீதியில் காரில் அலைபட இருந்தானம்மா
சந்துரு இந்தக் குரல்..?
அந்தப் பெண்ணின் உடையது தான்
யாரது....?
ஐயா, ராஜா அவர்களின் வீடு இது தானே?
ஆமாம் அவர் இறந்துட்டாரு. அவர் சம்சாரமும் மகனும் தான் இருக்காங்க.
நீங்களா? அம்மா நான் சொன்னேனே, அது இவர்கள் தானம்மா.
உங்கள் பெயர் கனிதானே?
ரகுநாதனின் சகோதரர் கமலா...
நான்தான். எங்களைத் தெரிந்து கொண்டுள்ள உங்களை எனக்குத் தெரியவில்லையே?


உங்களுக்கு ரொம்பவும் நெருங்கியவர்கள்தான் நாங்கள்.
உங்களைப் பார்க்கத்தான் வந்து கொண்டிருந்தோம். வழியில் உங்கள் பெண்ணைச் சந்தித்தோம்....
வாருங்களேன்... இப்படி உள்ளே வந்து உட்கார்ந்து பேசலாமே...
ராஜு அவர்கள் எப்போது காலமானார்!
இரண்டு வருஷமாகப் போகிறது. தன் ஒரே பெண்ணின் வாழ்வு இப்படி அவலமாகி விட்டதே என்ற வேதனையே அவரைக் கொன்று விட்டது.
ராஜுவைப் பலி கொண்டவனுக்கு நளினிக்கு இழைக்கப்பட்ட அநீதி என்ன!
புதிர் போடுவது போல ஏதோ சில விஷயங்களை நளினி கூறி வந்து விட்டாள். ஆனால் நாங்கள் இங்குதான் வர இருக்கிறோம் என்பது அப்போது அவளுக்குத் தெரியாது.
தாலி கட்டின மனைவியின் மீது கணவனுக்குச் சந்தேகத்தை உண்டாக்கி, அவள் பெற்ற குழந்தையையும் பிடுங்கிக் கொண்டு, இவள் வாழ வேண்டிய சுக போகத்தில் அந்தப் பாவி ஜனபால வாழுகிறான்.
ஜனபாலா? யார்...? உங்கள் அண்ணா ராஜுவின் வாழ்க்கை..
...வாழ்க்கையை நாசமாக்கிய அந்தக் கெடு கெட்டவனே தான். நளினியை மணந்து கொண்டவனுக்கு அந்தப் பாவி மாமன் முறை. இவள் அப்பாவும் நானும் இந்தச் சம்பந்தம் வேண்டவே வேண்டாமென்று மன்றாடினோம். காதல்தான் பெரிதென்று அன்று பேசினாள். இன்று கண்ணீரோடு கலங்கி நிற்கிறாள்.
அம்மா, உன் புலம்பலை நிறுத்தாதவரை எனக்கு நிம்மதி கிடையாது. என்னை இப்படிக் குத்திக் காட்டுவதால் நடந்ததை மாற்றி விட முடியுமா சொல்?
தான் தேடிக் கொண்ட வாழ்க்கையின் கோலங்களைத் தானே உணர்ந்து வருந்தும் நிலையில் இருக்கும் அதைக் குத்திக் காட்டும் போது நளினியின் புண்பட்ட உள்ளம் பொங்கி வெடித்தது. தன்னையை நாடி மாடிக்கு ஓடினாள். ஆனால்....


ஹமாம்
ஸ்நானத்திலே
அதிகப்படி
புதுமலர்ச்சியை
அடைகிறேன்
HAMĀM
the family soap
ஹமாம்
தாவர எண்ணெய்களின் விசேஷக் கலவை ஹமாமைக் கடைசி வரையில் உறுதியாகவும் நறுமணத்தோடும் இருக்கச் செய்கிறது. ஹமாம் வில்லை ஒவ்வொன்றும் நெடுநாள்— உழைக்கிறது என்பது ஞாபகமிருக்கட்டும்.
டாடா தயாரிப்பு
என் குடும்பத்
தினர் அனைவ
ரும் விரும்பு
வது ஹமாம
அதில் மறை
ந்திருக்கும்
குணம் * என
க்குமிச்சப்படு
த்த உத
வுகிறது
ஹமாமின்
அளவு
கடந்த நுரை
எனக்குப்
பிடித்திருக்கிறது.
இன்ப
நறுமண முள்ள
ஹமாம் என்
சருமத்துக்கு
இதமளிக்கிறது.
THY-20-TAM




ஐந்தாவது அத்தியாயம்

அந்த நிலையில் தான் என்ன செய்வது?' என்பதைச் சத்தியமூர்த்தி இன்னும் ஒருகணம் சிந்தித்திருந்தானானால் அவள் வையையாற்றில் பாய்ந்திருப்பாள். சிந்தித்துத் தயங்கிக் கொண்டிருப்பதை விடச் செயல்பட்டுக் காப்பாற்ற வேண்டிய அவசரத்தையும், அவசியத்தையும் உணர்ந்தவனாகக் கீழே தாவி இறங்கிக் கைக்கு இசைவாக இருந்த அவள் வலது கையைப் பற்றிப் பின்னுக்கு இழுத்தான் சத்தியமூர்த்தி. அவன் அவசரமாகப் பாய்ந்து பற்றிய வேகத்தில் அந்தப் பூப்போன்ற கையை அழகு செய்து கொண்டிருந்த கண்ணாடி வளையல்களில் சில நொறுங்கின. பூக்களின் மென்மையைவிட அதிகமான மென்மையும் சந்தனத்தின் குளிர்ச்சியைவிட அதிகமான குளிர்ச்சியும் பொருந்திய அந்தக் கையில் உடைந்த வளைச்சில்லுகள் அழுத்தப் பெற்ற இடங்களில் கோடு கீறினாற் போலக் குருதி கொப்புளித்தது.

வாழ்க்கையின் எல்லா விதமான தொல்லைகளிலிருந்தும் விடுபட்டுப் போவதற்குத் துணிந்து விட்ட அந்தப் பெண் கடைசி விநாடியில் தன் துணிவையும், விருப்பத்தையும் பாழாக்கி விட்ட அவனைத் திரும்பி நிமிர்ந்து பார்த்தாள். பிரத்யட்ச உலகில் ஓர் அபூர்வமாய்க் கவிகளின் கனவுகளிலே மிதக்கும் எல்லாவிதமான எழில்களும் ஒன்றுசேர்ந்த இல்லாப் பேரழகைப் போன்ற அந்தக் கண்களில் நீர் மல்கிற்று. புயல் காற்றில் அறுந்து விழுவதற்கு இருந்த பூங்கொடி தற்செயலாய்ப் பக்கத்துக் கிளையில் படர விட்டிருந்த ஏதோ ஒரு சிறிய நுனியின் பிணைப்பால் தப்பி இருந்ததைப்போல் அவள் அவன் பிடியில் இருந்தாள். உலகத்திலுள்ள நறுமணங்களில் மனத்தை மயக்கும் சக்தி வாய்ந்த மணங்கள் எவை எவை எல்லாம் உண்டோ அவை அவை எல்லாம் ஒன்றாகி மணப்பது போல் மணங்களின் உருவகமாகத் தன் பிடியில் சிக்கி நிற்கும் அவள் காதருகே குனிந்து சொன்னான் சத்தியமூர்த்தி.

''நல்ல வேளையாக நீங்கள் காப்பாற்றப்பட்டு விட்டீர்கள்! இனி இப்படி நினைப்பு உங்களுக்கு வரக் கூடாது.''

''வாழ விரும்பாத அபலைகளையும் அநாதைகளையும் வலிந்து காப்பாற்றுகிறவர்கள் பெருமைப்பட்டுக் கொள்வதற்கு ஒன்றுமே இல்லை'' என்று வெறுப்போடு பதில் சொல்லிய போது எந்த விதமான ஆசைகளின் சாயலும் இல்லாமல் வறட்சியாகச் சிரித்தாள் அவள். அந்தச் சிரிப்பைப் பார்த்த மறுகணமே அதன் உடனிகழ்ச்சியாகத் 'தின்பதற்கு மட்டுமல்லாது தின்னப் படுவதற்கென்றே அமைந்தாற் போன்ற பற்கள்' என்று கவியரசர் பாரதி ஞான ரதத்தில் எங்கோ எழுதியிருக்கும் ஓர் அழகிய வாக்கியம் சத்தியமூர்த்திக்கு நினைவு வந்தது. வெறுப்பிலும் நிராசையிலும் தோய்ந்து மரண



வாயிலுக்கு அருகே அடியெடுத்துவைத்து விட்டுத் திரும்புகிற போதே இவள் சிரிப்பு இவ்வளவு அழகாயிருக்குமானல் தானே சிரிக்க விரும்பி இவள் சிரிப்பது இன்னும் எவ்வளவு அழகாயிருக்கும் என்று கற்பனை செய்ய முயன்முன் சத்தியமூர்த்தி.

இதற்குள் இரயில் வைகைப் பாலத்தைக் கடந்து பொன்னகரம் என்ற உழைப்பாளிகளின் சுவர்க்கத்தையும், பிரம்மாண்டமான பஞ்சாலைக் கட்டடங்களையும் ஊடுருவிக் கொண்டு மதுரை நகருக்குள் செல்லத் தொடங்கியிருந்தது.

''ஊர் வந்து விட்டது. இரயிலிலிருந்து இறங்கும் போது இனி எப்போதும் இப்படி அசட்டுக் காரியம் செய்யலாகாது என்ற திடமான நம்பிக்கையோடு மதுரை மண்ணில் இறங்கி நடக்க வேண்டும் நீங்கள்'' என்முன் சத்திய மூர்த்தி.

''என்னைப் போன்றவர்கள் வாழ்வதும் வாழ நினைப்பதும்தான் அசட்டுக் காரியம். சாவுதான் எனக்குப் புகலிடம். சாமர்த்தியசாலிகளும் சந்தர்ப்பங்களை எதிர்பார்த்துக் காத்திருப்பவர்களும் வாழ வேண்டிய உலகம் இது. பேதைகளும் அப்பாவிகளும் என்போன்ற அபலைகளும் வாழ்வதற்கு இங்கு இடமில்லை.''

''நம்பிக்கைகளை அடைய வேண்டிய வயதில் இப்படி விரக்திகளை நினைக்கவோ பேசவோ கூடாது.''

''என்ன செய்யலாம்? இதைத் தவிர வேறு எதையும் பேச வலிமையற்றவளா யிருக்கிறேன் நான்.''

அந்தப் பெண்ணுக்கு ஆறுதலாக இன்னும் ஏதேதோ சொல்ல வேண்டும் என்று நினைத்தான் சத்தியமூர்த்தி. ஆனல் அதற்குள் இரயில் பிளாட்பாரத்தில் புகுந்து நின்று விட்டது. அந்தப் பெண்ணின் தாயும் விழித்துக் கொண்டு விட்டாள். கூட்டமோ, பரபரப்போ இல்லாமல் பிளாட்பாரம் அழுது வடிந்தது. அந்த இரண்டுங் கெட்ட நேரத்தில் கவனிப்பாரற்று நுழையும் சாதாரணமான பிரயாணிகள் இரயிலின் பக்கமாய்ப் போர்ட்டர்கள்கூட அதிகமாக வந்து எட்டிப் பார்க்கவில்லை.

''ஊர் வந்து விட்டாற் போல் இருக்கிறதே....?'' என்று அந்த அம்மாள் தூக்கம் கலந்த விழிப்பும், ஊர் வந்த விழிப்பும் போட்டி போட இரட்டை விழிப்புடனே எழுந்தபோது அவளிடம் ஏதாவது சொல்ல வேண்டும் என்று நினைத்து அந்தக் கடுமையான முகத்தைப் பார்த்த பின் ஒன்றுமே சொல்லத் தோன்முமல் தயங்கினுன் சத்தியமூர்த்தி. அந்த அம்மாளின் முகத்தைப்பார்த்தால் அப்போது அவளிடம் தான் ஒன்றும் பேசாமல் விடை பெற்றுக் கொண்டு போய் விடுவதே நல்லது என்றும் தோன்றியது அவனுக்கு.

''உங்கள் பெண்ணிடம் நீங்கள் இன்னும் அதிகமான பாசத்தோடும், கருணையோடும் நடந்து கொள்ள வேண்டும் அம்மா! இப்படிக் கொடுமையாகவும், பரிவு இல்லாமலும் நடந்து கொள்வீர்களானல் என்றாவது ஒரு நாள் உங்கள் பெண்ணை நீங்களே உயிரோடு பார்க்க முடியாமல் போய் விடும்....'' என்று தொடங்கிக் கண்டிப்பாகவும் அந்த நேரத்தில் அதற்காகவே எடுத்துக் கொண்டாற் போன்ற ஒருவிதமான உரிமையுடனும் பேச எண்ணியிருந்தும் பேசப்பட வேண்டியவளுடைய முகத்தைப் பார்த்ததும் அவன் அதைச் செய்ய இயலாமல் போயிற்று. கண்ணீர் பெருகும் விழிகளால் சூட்கேஸைக் கையில் எடுத்துக் கொண்டு புறப்படத் தயாராகி விட்ட அவனையே இமையாமல் பார்த்துக் கொண்டிருந்தாள் அந்தப் பெண். பச்சையும் சிவப்புமாக நிறங்கள் கோடு கோடாகச் சிதறிக் கிடப்பது போல் உடைந்த வளைச் சில்லுகள் காலில் இடறின. போகும் போது இருவரில் யாரிடம் சொல்லிக் கொள்வதென்று ஒருகணம் சிந்தித்தபின் இருவருக்கும் பொதுவாக 'வருகிறேன்' என்ற ஒரு வார்த்தையைச் சொல்லி விட்டுப் புறப்பட்டான் சத்தியமூர்த்தி. அந்த ஒரு வார்த்தையைக் கூடச் சொல்லி யிருக்க வேண்டாமோ என்றும் தோன்றியது. ஆனல் 'வருகிறேன்' என்ற அந்த ஒரு வார்த்தைக்குப் பதிலும் சொல்ல முடியாமல், பதில் சொல்லாமலும் இருக்க முடியாமல் கண்ணில் பெருகும் நீரே தன் அந்தரங்கத்துக்குச் சாட்சியாக மெல்லத் தலையை அசைத்துவிடை கொடுத்தாளே; அந்த ஒருத்திக்காக அதைச் செய்தது சரிதான் என்ற திருப்தியோடு பிளாட்பாரத்தில் இறங்கி நடந்தான் சத்தியமூர்த்தி.

இரயில் சந்திப்புக்களுக்கு வரவேற்பும் கிடையாது, விடை பெறுதலும் கிடையாது — இருக்கவும் கூடாது. ஆனல் சில சந்திப்புக்கள் மனத்தில் பதிந்து கொள்கின்றனவே! அப்படிப் பதிவாகிற சந்திப்புக்கள் நம்மையும் அறியாமலே நாம் ஏதோ ஓர் உறவைக் கற்பித்துக் கொள்ளும்படி செய்து விடுகின்றன. தன்னைப் பொறுத்தவரை தானும் இன்று அப்படி யார்மேலோ ஏதோ ஓர் உறவைக் கற்பித்துக் கொண்டு விட்டதைச் சத்தியமூர்த்தி உணர்ந்தான்.

அவன் பிளாட்பாரத்தில் இறங்கிச் சிறிது தொலைவு தான் நடந்திருப்பான். அதற்குள் அவன் முற்றிலும் எதிர்பாராத கேள்வியோடு எதிர்பாராத மனிதர் ஒருவர் அவனைச் சந்தித்தார். அந்தக் கேள்வியைக் கேட்ட விதமும் கேட்டு விட்டு அவர் அவனைப் பார்த்த பார்வையும் சிரித்த சிரிப்பும், சத்திய மூர்த்தியை என்னவோ செய்தன.

''என்னடா சத்தியம்? இவர்களை உனக்கு எவ்வளவு நாட்களாகத் தெரியும்? ரொம்ப நாட்களாகப் பழக்கம் போலிருக்கிறது....?''

'' இவர்களை என்றால் எவர்களை?''

''அதுதான் ரயிலில் கூட வந்தார்களே; அவர்களைத்தான் சொல்கிறேன். இரயில் பிளாட்பாரத்தில் நுழையும் போதே உன்னை நான் பார்த்தேன். நான் நின்று கொண்டிருந்த இடத்துக்கு நேராகச் சொல்லி வைத்தது போல் உங்கள் வண்டி வந்தது.... அது சரி... பாதி ராத்திரிக்கு மேல் இப்படி எங்கேயிருந்து பயணம் புறப்பட்டு வருகிறாய் இவர்களோடு....?''

இதைக் கேட்டுச் சத்தியமூர்த்திக்குச் சினமும் திகைப்பும் மாறி மாறி ஏற்பட்டன. அந்த மனிதரை எரித்து விடுவது போல் பார்த்தான் அவன். 'மூன் லைட் அட்வர்டைஸிங் ஏஜன்ஸீஸ்' என்று சொன்னால் அதன் உரிமையாளர் கண்ணாயிரத்தை எல்லாருமே தயங்காமல் ஞாபகப்படுத்திக் கொள்ள முடியும். சத்தியமூர்த்தியின் வீட்டுக்கு நாலாவது வீட்டிலோ ஐந்தாவது வீட்டிலோ குடியிருந்தார் அவர். வெற்றிலைபாக்கை மென்று அசை போடுவதற்கும் அடுத்தபடி வம்புகளையும் வதந்திகளையும் அசை போடுவதில் மன்னன். சத்தியமூர்த்தி சாதாரண நாட்களில் இந்த மனிதரைத் தெருவில் எங்காவது சந்திப்பதற்கு நேர்ந்தால்கூட ''பக்கத்தில் வராதே – விலகிப் போய்விடு......'' என்ற பாவனையில் நீளமாக ஒரு கும்பிடு போட்டு அனுப்பிய பின்பே நிம்மதியாக மூச்சு விடுவான். திருவாளர் கண்ணாயிரம் 'பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கி' வாழ்கிறவர். நெப்போலியனுடைய அகராதியில் 'முடியாது' என்ற வார்த்தை இல்லாதது போலத் திருவாளர் கண்ணாயிரம் அவர்களுடைய அகராதியில் பல நல்ல வார்த்தைகளுக்கு இடமே இல்லை. நியாயம், தர்மம், ஈவு, இரக்கம்.... இப்படி எத்தனையோ வார்த்தைகள் அவருடைய அகராதியில் இருக்க முடியாது. இந்த வகையில் நெப்போலியனை விடப் பெரியவர் அவர். கர்ணன் பிறக்கும்போதே காதில் மகர குண்டலங்களோடு பிறந்த மாதிரி அற்பத்தனத்தையும், வஞ்சத்தையுமே பிறவி அணிகலன்களாகக்கொண்டு பிறந்தவர் கண்ணாயிரம். அவர் இந்த உலகில் பிறக்கும் போதே மேற்படி 'கல்யாண(?) குணங்களும்' அவரோடு உடன் பிறந்து விட்டன. இதெல்லாம் சத்தியமூர்த்திக்கு நன்றாகத் தெரிந்திருந்த காரணத்தினால்தான் திருவாளர் கண்ணாயிரத்தையும் அவருடைய அற்பத்தனத்தையும் அந்த அகாலத்தில் இரயில் நிலயத்துப் பிளாட்பாரத்தில் சந்தித்த போது அவன் மிகவும் வருந்தினான். பாமரர்களும், சராசரி மனிதர்களும் இந்த உலகத்துக்குத் தொடர்ந்து செய்து கொண்டிருக்கிற பெரிய தியாகம் தங்களைவிடப் பாமரர்களாகவும், சராசரியானவர்களாகவும் இருக்கிறவர்களைப் பிரமுகர்களாக இருக்கும்படி அனுமதித்து அவர்களைத் தொடர்ந்து மன்னித்துக் கொண்டிருப்பது தான். மீனாட்சி பட்டணத்துப் பெருமக்களால் இப்படி நிரந்தரமாக மன்னிக்கப்பட்டு விட்ட பிரமுகர்தான் திருவாளர் கண்ணா

பொன் மொழி

உலகத்துக்கு அழகாகத் தோன்றுகிற பலர் உள்ளத்தால் வெந்து அழிந்து கொண்டிருப்பது வெளியே தெரிவதில்லை. அவர்களுடைய அழகு ஒரு தடையாக இருந்து அந்த ரங்கத்தில் அவர்கள் படுகிற கவலைகளைப் பிறர் காண முடியாமல் மறைத்து விடுகிறது.

யிரம். 'மூன் லைட் அட்வர்டைஸிங் ஏஜன்ஸீஸ்' என்ற மாபெரும் விளம்பர ஏற்பாட்டுக் கம்பெனி ஒரு சிறிய மூன்றே முக்காலடி அறைக்குள் இரு நாற்காலிகளிலும் ஒரு மேஜையிலும் அடங்கிப் போய் விட்டாலும் அந்தப் பேரை வைத்துக் கண்ணாயிரம் பிரமாதப் படுத்திக் கொண்டிருந்தார். அவருக்காக நல்லவர்கள் பயப்பட்டார்கள்; விட்டுக் கொடுத்தார்கள் — பொல்லாதவர்கள் துணையிருந்தார்கள்; ஒத்துழைத்தார்கள். பிரமுகராக வாழ்வதற்கு இந்த இரண்டு வசதிகளைவிட வேறு என்ன வேண்டும்? ஆகவே அவர் சகல விதமான ஆதரவும் உள்ள நகரப் பிரமுகர்களில் ஒருவராக இருந்தார்.

''என்னப்பா, திருட்டு விழி விழிக்கிறாய்? என்னிடம் பதில் சொல்வதற்கு என்ன கூச்சம்? சும்மா.... சொல் அப்பனே....?'' என்று மீண்டும் கண்ணாயிரம் சத்தியமூர்த்தியை மடக்கிக்கேள்வி கேட்கவே அவன் ஆத்திரமடைந்தான்.

''திருவாளர் கண்ணாயிரம் அவர்களே! இரயில்வேக்காரர்கள் இந்த இரயிலே நான் பயணம் செய்வதற்காக மட்டும் விட்டிருந்தால் என்னோடு கூட யாரும் ஏறிக் கொண்டு வர விடாமல் நானே தடுத்திருப்பேன். அது முடியாமல் போனதற்காகத் தயை கூர்ந்து என்னை மன்னித்து விடுங்கள்.......'' என்று சொல்லி விட்டுக் கண்ணாயிரத்தைக் கடந்து வேகமாக விலகி முன்னால் நடந்தான் சத்தியமூர்த்தி.

''கோபித்துக் கொள்ளாதே, அப்பனே! நாட்டியக்காரி மோகினியை உனக்கு எப்படித் தெரிந்திருக்க முடியும் என்று எனக்கு ஆச்சரியமாயிருந்தது. அதனால்தான் கேட்டேன்'' என்று சொல்லிச் சிரித்தார் கண்ணாயிரம். இந்த வார்த்தைகளை அவர் சொல்லி முடிப்பதற்குள் சத்தியமூர்த்தி முன்னால் சிறிது தொலைவு நடந்து போயிருந்தாலும் 'நாட்டியக்காரி மோகினி' என்ற சொற்கள் அவனுக்குத் தெளிவாகக் கேட்டிருந்தன. அந்தப் பெயர் அவனால் காப்பாற்றப் பட்டவளுடையதா யிருந்தால் அதை விடப் பொருத்தமான வேறொரு பெயரை அவனுக்கு வைத்திருக்க முடியாது என்று தோன்றியது அவனுக்கு. உலகத்துக்கு அழகாகத் தோன்றுகிற பலர் உள்ளத்தால் வெந்து அழிந்து கொண்டிருப்பது வெளியே தெரிவதில்லை. அவர்களுடைய அழகு ஒரு தடையாக இருந்து அந்தரங்கத்தில் அவர்கள் படுகிற கவலைகளைப் பிறர் காண முடியாமல் மறைத்து விடுகிறது. ஒரு சீராய் முத்துக் கோவை போல் மின்னிய அந்தக் கட்டழகுப் பல் வரிசையையும் சிரிப்பையும் ஞாபகத்தில் கொண்டுவர முயன்று தோற்றான் சத்தியமூர்த்தி. தாங்கள் எந்தக் கலைகளை நம்பி வாழ முடியுமோ அந்தக் கலைகளாலும் முழுமையாகக் காப்பாற்றப்படாமல் மனிதர்களாலும் தூய்மையாகக் காப்பாற்றப்படாமல் இரண்டுங் கெட்ட நிலைக்கு வந்து விட்ட இத்தகைய கலைக் குடும்பங்களைப்பற்றி நினைத்தான் சத்தியமூர்த்தி. அப்படி நினைத்தபோது எந்தக் காலத்திலும் நிச்சயமான தீர்மானத்துடன் பரிகாரம் காண முடியாதபடி சில பிரச்னைகள் இந்த நாட்டில் நிரந்தரமாகவே அரைகுறையாய் இருந்து வருவதை அவனால் உணர முடிந்தது.



இரயில் நிலையத்துக்கு வெளியே வந்ததும் வலது பக்கம் ஓரமாக நிறுத்தியிருந்த ரிக்ஷாக்காரர்கள் ஓடி வந்து அவனைச் சூழ்ந்து கொண்டார்கள். விடிவதற்கு இன்னும் சில நாழிகை நேரமே இருந்தது. அந்த அமைதியான நேரத்தில் மதுரையின் வீதிகளில் நடப்பதே ஓர் இன்பகரமான அனுபவமாயிருக்கும். ரிக்ஷாக்காரர்களிடமிருந்து விடுபட்டு சூட்கேஸும் கையுமாக நடந்தான் அவன். பயனை எதிர்பாராமல் பழைய காலத்து மனிதர்கள் செய்து வைத்து விட்டுப் போகும் பல தருமங்களுக்கு ஒரு ஞாபகம் போல் எதிரே மங்கம்மாள் சத்திரம் தெரிந்தது. தருமம், தானம் போன்ற பல பெரிய காரியங்கள் இந்த நூற்றாண்டில் ஒரு நல்ல ஞாபகம் என்ற அளவிலாவது நிலைத்திருக்கின்றன என்று எண்ணியபோது அந்த எண்ணத்தை அடுத்துக் கண்ணாயிரமும் சேர்ந்து ஞாபகத்துக்கு வரவே சத்தியமூர்த்தி தனக்குத் தானே சிரித்துக் கொண்டான். வீடு நெருங்க நெருங்கத் தன்னை எதிர் கொள்ளப் போகிற தந்தைக்குத் தான் சொல்லியாக வேண்டிய மறுமொழியைப் பற்றிச் சிந்திக்கலானான் அவன்.

'வெளியூருக்குப் போய் விட்டுத் திரும்புகிறேன். வீட்டில் இரண்டு தங்கைகளும், வயதான பெற்றோரும் இருக்கிறார்களே; அவர்களுக்காக நான் என்ன வாங்கிக் கொண்டு போகிறேன்?' என்று எண்ணியபோதுதான் வெறும் கையோடு ஊர் திரும்புவதை அவன் தானாகவே உணர்ந்து வருந்த வேண்டியிருந்தது. எப்போதுமே அவன் அப்படித்தான்! அனுபவபூர்வமாக உலகத்துக்கேற்ப வாழும் சில பழக்கங்கள் அவனிடம் படியாமலே போய் விட்டது. அப்பாவும் அம்மாவும் பல முறை அவனிடமுள்ள இந்தக் குறையைச் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். கல்லூரி நாட்களில் அவன் விடுமுறைக்கு ஊர் திரும்பும் போது, ''ஊரிலிருந்து வீடு தேடி வருகிறவனுக்கு ஏதாவது வாங்கிக் கொண்டு வர வேண்டுமென்று தோன்றாதோ? உலகத்து வழக்கமே பிடிபடாத பிள்ளை

யாக இருக்கிறாயே, அப்பா!'' என்று அம்மா வழக்கமாகக் குறைப்பட்டுக் கொள்வது உண்டு. இன்றும் அப்படிக் குறைப்பட்டுக் கொள்வதற்கேற்ற சூழ்நிலையில் தான் வீடு திரும்புவது அவனுக்கே புரிந்தது.

'பசையைப் போல் அநுபவத்தில் ஒட்டிக் கொண்டுவிட வேண்டிய சிலவிதமான வாழ்க்கை ஆர்வங்கள் என்னிடம் இல்லை. உறவினர்களைக் கண்டால் நான் அதிகமாகக் கலந்துபேசிப் பழகுவதில்லை' என்று அப்பா குறைப்படுகிறார். தங்கைகளுக்கு அடிக்கடி ஏதாவது வாங்கிக் கொடுத்து வெளிப்படையான பிரியத்தை என்னால் காண்பிக்க முடியவில்லையே என்று அம்மா என் மேல் வருத்தப்படுகிறாள். 'தெருவில் சந்தித்தால் நின்று பேசிக் கலகலப்பாகப் பழகத் தெரிவதில்லை. முரட்டு ஆளாக இருக்கிறான்' என்று கண்ணாயிரத்தைப் போல் உள்ளவர்கள் என்னைப் பற்றிக் குறை சொல்கிறார்கள். மொத்தத்தில் பலர் எதிர்பார்க்கிற சில குணங்கள் என்னிடம் இல்லை. நான் எதிர்பார்க்கிற சில குணங்கள் பலரிடம் இல்லை. இதில் மாறுதல் விளைய வேண்டியது என்னிடமா, மற்றவர்களிடமா என்பதுதான் முடிவாகத் தீர்மானமாக வேண்டிய காரியம்.


'நீங்கள் உங்களைக் காட்டிலும் வயது மூத்தவர்களிடம் இன்னும் நிதானமாகவும் விநயமாகவும் பேசுவதற்குப் பழகிக் கொள்ள வேண்டும்' என்று வேறொரு விதமாக அவனிடம் குறைப்பட்டுக் கொண்டிருக்கிறார் மல்லிகைப் பந்தல் கல்லூரி அதிபர் பூபதி. அதையும் இப்போது நினைத்தான் அவன்.

எல்லாவற்றையும் மொத்தமான அபிப்பிராயத் தொகுப்பாக ஒன்று சேர்த்துப் பார்த்தால் தான் எப்படி எப்படியோ மாற வேண்டுமென்று ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதத்தில் எதிர்பார்ப்பது அவனுக்குப் புரிந்தது. ஆனால் என்ன விளைவை எதிர்பார்த்து அப்படி மாற வேண்டும் என்றுதான் புரியவில்லை. பிறருடைய சௌகரியங்களை உத்தேசித்துத்தானே தன்னை அடிக்கடி மாற்றிக் கொள்ளும் கோழையாக வாழப் பழகவில்லை அவன். பிறரை மாற்றுகிற தீரர்களில் ஒருவனாக வாழ ஆசைப்படுகிறவனின் ஆரம்பம் இப்படித்தான் இருக்க முடியும் என்பது போல இருந்தன அவனுடைய அநுபவங்கள். அவன் படித்திருந்த புத்தகங்களும் பழகி யிருந்த நல்லவர்களும் ஒவ்வொரு துறையிலும் 'இங்கு இப்படித்தான் நடந்து கொள்ள வேண்டும்' என்பது போல் திட்டமான அபிப்பிராயங்களை ஆழமாக எண்ணித் தீர்மானம் செய்ய அவனுக்குக் கற்பித்திருந்தாலும் சராசரி உலகில் பல இடங்களில் அவன் தயங்கி நிற்க நேர்ந்தது. பிறர் தன்னை எப்படி எதிர்பார்க்கிறார்களோ, அப்படித் தான் வாழ முடியாமலிருப்பது தனக்கு ஒரு குறையானால் சமூகத்தில் ஒவ்வொரு மனிதனுக்கும் அந்தக் குறை ஏதாவது ஒரு வகையில் இருந்தே தீருமென்று சத்தியமூர்த்தி நினைத்தான். ஏனென்றால் அடுத்தவன் தன்னிடம் எப்படி இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிற தன்மை இல்லாத அப்பட்டமான தியாகிகள் உலகின் எந்த மூலையிலும் இல்லை. அன்பின் மிகுதியாலும் அப்படி எதிர்பார்க்கிறவர்கள் இருக்கிறார்கள். வெறுப்பின் மிகுதியாலும் அப்படி எதிர்பார்க்கிறவர்கள் இருக்கிறார்கள். அப்படி எதிர் பார்ப்பது தான் வாழ்க்கை போலிருக்கிறது' என்று பலவிதமான சிந்தனைகளின் வேகத்தோடு நடந்து சென்றதில் நடையே தெரியவில்லை. எதிரே வருகிற சந்தில் திரும்பி அடுத்த வீதிக்குள் சிறிது தொலைவு நடந்தால் வீடுதான். எங்கோ கோவிலில் திருவனந்தல் வழிபாட்டுக்கு முன்பாக வைகறையில் வாசிக்கப்படும் மேளமும் நாகஸ்வரமும் அதிகாலையின் இனிய ஞாபகமாய் ஒலித்துக் கொண்டிருந்தன. சில வீடுகளில் அப்போதே வாசல் தெளிக்கத் தொடங்கி யிருந்தார்கள். கிழக்கு வெளுக்க இன்னும் சிறிது நேரமே இருந்தது.


வாயில் படியேறிக் கதவைத் தட்டினான் சத்தியமூர்த்தி. இருமிக் கொண்டே அப்பா எழுந்து வந்து கதவைத் திறந்தார்.

''சாயங்கால இரயிலிலேயே உன்னை எதிர்பார்த்தேன்'' என்றார் அப்பா.

''முடியவில்லை! முதல் நாள் மல்லிகைப் பந்தலுக்குப் போகிற பஸ் தவறி விட்டது. மறுநாள் இண்டர்வ்யூவுக்குத் தாமதமாகி விட்டது'' என்று சொல்லிக் கொண்டே சூட்கேஸுடன் உள்ளே நுழைந்து கூடத்துப் பெஞ்சியில் உட்கார்ந்தான் சத்தியமூர்த்தி. அப்பா ஊஞ்சல் பலகையில் உட்கார்ந்து கொண்டார். கிணற்றடியிலிருந்து வந்த அம்மா ''இராத்திரி இரயிலில் தூக்கத்தைக் கெடுத்துக் கொண்டு எதற்காக வருகிறாய்? சாயங்கால வண்டியிலேயே வந்திருக்கலாமே?'' என்று விசாரித்துக் கொண்டே வந்து அவனுக்கு எதிர்ப்புறம் ஆவலோடு நின்று கொண்டாள். கூடத்தை மெழுகுவதற்கு வாளிநிறைய நீரோடு வந்த ஆண்டாள், அண்ணனின் வரவினால் ஏற்பட்ட ஆர்வத்தைக் காட்



சுத்தமான
வைரங்கள்
பாபாலால் அண்டு கோ
பொன் வெள்ளி நகை வியாபாரிகள்
ரட்டன் பஜார் சென்னை.3



அருணகிரி விலாஸ்
சீயக்காய்
பவுடர்
REGD
BS
ARUNAGIRI VILAS SOAP NUT POWDER, KARAIKUDI.

டும் முகத்தோடு அப்பாவுக்கு அருகே வந்து ஊஞ்சல் சங்கிலியைப் பிடித்துக் கொண்டு நின்றாள். படுக்கையிலிருந்து அப்போது தான் கண்ணைக் கசக்கிக் கொண்டே பாதித் தூக்கமும் பாதி விழிப்புமாக எழுந்திருந்து வந்த கல்யாணியும் இன்னொரு பக்கமாக நின்று கொண்டாள். 'இண்டர்வ்யூ'வின் முடிவு என்ன ஆயிற்று என்பதை அவனைச் சொல்ல வேண்டும் என்று எதிர்பார்ப்பவர்களைப்போல் எல்லாரும் ஆவலடங்கிய நிலையில் மௌனமாயிருந்தார்கள். வீட்டுக்குள் நுழைந்ததும் இப்படி ஒரு காட்சியை அல்லது நிகழ்ச்சியைச் சத்தியமூர்த்தியும் எதிர்பார்த்திருந்தான். எல்லாருடைய கண்களின் பார்வையும் தன் முகத்தையே நோக்கியிருப்பது அவனுக்குப் புரிந்தது. ஒருகணம் எல்லா வேதனைகளையும் மறந்தவனாக நன்றாய் வாய் விட்டுச் சிரிக்க வேண்டும் போலவும் தோன்றியது. அடுத்தகணம் அப்படிச் செய்வதால் 'குடும்பப் பொறுப்புத் தெரியாத பிள்ளை' என்று கெட்ட பெயரைத் தாங்க நேரிடுமோ என்ற தயக்கமும் ஏற்பட்டது.

''என்ன ஆண்டாள்? உன் வலது கண் வீங்கினாற் போல் தெரிகிறதே?



உள்ளே ஏதாவது வெடித்திருக்கிறதா?'' என்று அப்போது அந்த நிலையில் அதிக சிரத்தை எடுத்துக்கொண்டு விசாரிக்கத் தேவையில்லாத ஒன்றைத் தங்கையிடம் விசாரித்தான் சத்தியமூர்த்தி.

''ஒன்றுமில்லையே அண்ணா!'' என்று ஆண்டாள் சிரித்தாள். அப்புறமும் சிறிது நேரம் அவன் ஏதோ சொல்லப் போகிறான் என்று அவர்கள் எதிர்

பார்த்திருக்க அவன் ஒன்றும் சொல்லாமலே நேரம் மௌனத்தில் கழிந்தது. அப்பா பொறுமை யிழந்தார்.

''நீ போன காரியம் என்ன ஆயிற்று?''

''இண்டர்வ்யூ ஆயிற்று. முடிவு ஒன்றும் சொல்லவில்லை. விவரம் தெரிவிப்பதாகச் சொல்லி யிருக்கிறார்கள்.''

''இண்டர்வ்யூவின் போது நீ சரியாக நடந்து கொண்டாயோ இல்லையோ?'' — தந்தையின் இந்தக் கேள்விக்குச் சத்தியமூர்த்தி பதில் ஒன்றும் சொல்லவில்லை. கடந்த சில மாதங்களில் தொடர்ந்து நாலைந்து இண்டர்வ்யூவுக்குப் போய்விட்டு ஒரு விளைவும் இல்லாமல் திரும்பி வந்ததிலிருந்து அப்பாவுக்குத் தன்மேல் இப்படி ஒரு சந்தேகம் ஏற்பட்டிருப்பது அவனுக்குத் தெரியும். போகிற இடங்களில் தான் அகம்பாவத் துடனே, அலட்சியமாகவோ நடந்து கொள்வதனால் தான் வேலைகள் கிடைக்காமல் தட்டிப் போய்க் கொண்டிருக்



கின்றனவோ என்று அவர் சந்தேகப்படுவதைக் கண்டு அவனுக்கு அவர் மேல் கோபமோ, மனத்தாங்கலோ உண்டாகவில்லை. அவரைப் போல் வாழ்க்கையில் கஷ்டப்பட்டு நைந்தவர்கள் அப்படித் தான்நினைக்கமுடியும்என்பதைஉணர்ந்து பொறுமையா யிருந்தான் அவன்.

''நான் அப்போதே படித்துப் படித்துச் சொன்னேன். நீ கேட்டால்தானே? தமிழ் ஆனர்ஸைத் தவிர வேறு எந்தப் பிரிவில் சேர்ந்திருந்தாலும் இதற்குள் நல்ல உத்தியோகத்தைத் தேடிக் கொண்டு போயிருக்கலாம். இந்த வீட்டு நிலைமை நான் சொல்லித்தான் உனக்குத் தெரிய வேண்டுமென்பதில்லை. மாடியிலும் கீழே முன் பக்கத்து அறையிலுமாக ஒண்டுக் குடித்தனம் இருக்கிற இரண்டு பேருமாக நூறு ரூபாய் வாடகை தருகிறார்கள். இந்தத் தள்ளாத வயதிலும் நான் 'டியூஷன்' சொல்லிக் கொடுப்பதற்கு அலைந்துநூறு ரூபாய்க்குத் தேற்றுகிறேன். மாடியில் மழைக்கு ஒழுகுகிறது. இப்போது இருக்கிறவர் காலி செய்து விட்டால் மாடியும் காலியாகி விடும். மாடியில் கொஞ்சம் இடித்துக் கட்டினாலொழியத் தொடர்ந்து யாரையும் குடியிருப்புக்கு வைக்க முடியாது. எல்லாவற்றுக்கும் பணம் வேணுமடா; பணம். சும்மா... வறட்டு இலட்சியம் பேசி ஆகப் போவது ஒன்றுமில்லை. திருமணத்துக்கு நிற்கிற இந்தப் பெண்களையும் விட்டுக் கவலைகளையும் நினைத்து இராப் பகலாக நான் தூக்கமின்றி மாய்வது உனக்குத் தெரியுமோ? எத்தனை நாட்களுக்கு இப்படி இருக்கப் போகிறாய் நீ?''

அப்பா இப்படி ஆத்திரப்பட்டுப் பேசியதையும் சத்தியமூர்த்தி பொறுமையாகக் கேட்டுக் கொண்டான். நினைப்புக்களாலும், பாவனைகளாலும், ஒரு தலைமுறைக்கு முந்திய மனப்பான்மை கொண்டவர் அவர். அவரிடம் எதிர்த்துப் பேச விரும்பவில்லை அவன். பதில் பேசாமல் பல் விளக்கி முகம் கழுவிக் கொண்டு வருவதற்காகப் பின்பக்கம் எழுந்து சென்றான். அவனுடன் கூடவே பின்புறம் நடந்து வந்த தங்கை ஆண்டாள், ''அப்பா பேசியதை ஒன்றும் மனத்தில் வைத்துக் கொள்ளாதே அண்ணா. ஏதோ கவலையில் ஆத்திரமாகச் சொல்லி விட்டார்....'' என்று ஆறுதலாகக் கூறிய வார்த்தைகளுக்கும் அவன் மறுமொழி கூறவில்லை. அப்போது தன் மேலேயே வெறுப்பாக இருந்தது அவனுக்கு.

முகம் கழுவிக் கொண்டு வாசல் பக்கம் வந்தால் மாடியில் குடியிருக்கிற பத்திரிகை நிருபர் பரமசிவம் கீழே இறங்கி வருகிறபோது எதிர்ப்பட்டார்.

''என்ன மிஸ்டர் சத்தியமூர்த்தி? மல்லிகைப் பந்தலில் 'இண்டர்வ்யூ' என்ன ஆயிற்று? முதல் வகுப்பில் தேறியிருக்கிறீர்கள். போட்டி ஒன்றும் இருக்காது.... தானே கிடைத்து விடும்....'' என்று பரமசிவமும் அதே பேச்சைஆரம்பித்தார். எந்தப் பேச்சை எதிராளி நம்மிடம் பேசாமலிருந்தால் மனம் நிம்மதியாயிருக்குமென்று சில சமயங்களில் நமக்குத் தோன்றுகிறதோ அந்தப் பேச்சைத்தான் அந்தச் சமயங்களில் திரும்பத் திரும்ப நாம் கேட்கும்படி நேரிடுவது வழக்கம். ஒரு மனிதனுடைய பிரச்னைகளை — சுகமோ துக்கமோ அவனைச் சுற்றியிருக்கிற எல்லாரும் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படிக் கவனித்துக் கொண்டிருப்பதையும்அதன் விளைவுகளையும் அதற்கு ஆளானவனே வெறுப்போடு பார்க்கும் சந்தர்ப்பங்களும் வருகின்றன.

அப்போது மற்றவர்களின் கேள்வியே அழையா விருந்தாக வாய்த்துத் தொல்லை தருவதுண்டு. இதை நினைக்கும் போது மனத்துக்குள் சிரிக்கத் தோன்றியது சத்தியமூர்த்திக்கு. நினைப்புக்குள் அந்தரங்கமாக இருப்பவற்றைத் தவிர வேறு எவற்றிலும் மனிதன் இரகசியமாக வாழ முடியாது போலிருக்கிறதே என்று நினைத்த போது பரமசிவத்துக்கும் பரமசிவத்தைத் தவிர இன்னும் தன்னை எதிரே பார்த்து மல்லிகைப் பந்தல் இண்டர்வ்யூவைப் பற்றித் தன்னிடம் விசாரிக்கப் போகிற ஒவ்வொருவருக்கும் தான் எதற்காகவோ பயந்து வாழ வேண்டும் போல் பிரமையாயிருந்தது.

ஏதோ பதில் பேசிப் பரமசிவத்துக்கு விடை கொடுத்து அனுப்பினான். அவரை மாடிக்கு அனுப்பி விட்டு வீட்டுக்குள்ளே போவதற்காகத் திரும்பியவன், ''மிஸ்டர் சத்தியமூர்த்தி இருக்கிறாரா?'' என்று கீழே தெருவிலிருந்து அட்டகாசமாக ஒலித்த குரலைக் கேட்டு ஆச்சரியமடைந்தான். திருவாளர் கண்ணாயிரத்தின் குரல் அல்லவா அது? 'அவர் எதற்காக இப்போது இங்கே தன்னைத் தேடி வந்தார்?' என்று சந்தேகத்தோடு தெருக்கதவைத் திறந்து கொண்டு கீழே இறங்கி வந்த சத்தியமூர்த்திக்குத் தெருவில் இன்னும் பெரிய ஆச்சரியம் காத்திருந்தது. தெருவில் நின்றிருந்த கண்ணாயிரத்தின் காரிலிருந்து அந்தப் பெண் கீழே இறங்கி அவனை நோக்கி வந்து கொண்டிருந்தாள். கண்ணாயிரம் அப்போது அவனைத் தன் வீட்டுக்கு எதற்காக அழைத்து வந்தார் என்று புரியாமல் சத்தியமூர்த்தி திகைத்துக் கொண்டிருந்த போது அவள் தன் நறுமணங்கள் புடைசூழ அவனுக்கு மிக அருகே வந்து தயங்கி நின்றாள். (தொடரும்)

கிளியர்டோன்...

Kleertone




உங்களுக்கு உகந்த உன்னதமான வீட்டுவேலை சாமான்கள்

கிளியர்டோன் எலக்டிரிக் சாதனங்களை உபயோகித்து செலவைக் குறையுங்கள். அவை உங்கள் வீட்டை எடுப்பாகவும், சுகாதாரத் துடனும் வைக்க உதவும். இந்தியா பூராவும் முக்கிய எலக்டிரிக் சாமான்கள் கடைகளிலும், ரேடியோ வியாபாரிகளிடமும் கிடைக்கின்றன.

கிளியர்டோன்
'இம்பீரியல்' ஆட்டோமாடிக்
இஸ்திரிப்பெட்டி






கிளியர்டோன்
இஸ்திரி மேஜை



கிளியர்டோன்
கெட்டில்




கிளியர்டோன்
எலக்டிரிக்
சுவர்க் கடிகாரம்



கிளியர்டோன்
மடக்கக்கூடிய
ஸ்டீல் நாற்காலி
மற்றும் மேஜை

கிளியர்டோன்
பிளாஸ்டிக்
சாமான்கள்



வடிதட்டு



பழம், காய்கறிப்
பாத்திரம்

JWT/GRA 4087 (8)

எல்லா அதிகாரம் பெற்ற கிளியர்டோன் வியாபாரிகளிடமும், நேஷனல்-எக்கோ ரேடியோ வியாபாரிகளிடமும், மற்றும் பெரிய ஸ்டோர்களிலும் கிடைக்கும். நேராக ஜி. ஆர். ஏ. விடமிருந்தும் கிடைக்கும்.

ஜெனரல் ரேடியோ & அப்ளையன்ஸஸ் லிமிடெட்

GRA பம்பாய் . கல்கத்தா . மதராஸ் . டில்லி
பெங்களூர் . பாட்னு . ஸெகந்திராபாத்


அதிசயம் ஆனால் உண்மை!



✲ இது ஒரு மூக்குப் பொடி வைக்கும் கண்ணாடி சீசா. இதில் தெரிகிறதே, ஒரு சித்திரம். அது இதன் உட்புறத்தில் வரையப் பட்டிருக்கிறது. எப்படி என்பதை எண்ணிப் பார்க்கவே வியப் பாக இருக்கிறதல்லவா? கண்ணாடியின் மீது அதுவும் வெளிப் பக்கத்தில் படம் வரைவதென்றாலே நம்மால் முடியாது. இதன் சிறிய வாய்ப் பக்கத்தின் வழியாக மெல்லிய தூரிகையை நுழைத் துக் கண்ணாடி சீசாவின் உட்பக்கமாக, நீங்கள் பார்ப்பதற்கு நேர் எதிர்முகமாக — இந்தச் சித்திரத்தை வரைந்திருக்கிறார் சித்திரக்காரர். அவர் ஒரு சீனக்காரர்.




✲ இந்த வழுக்கைத் தலையர், ரோம சாம்ராஜ்யத்தின் மேற்குப் பகுதியின் பாதியை 829லிருந்து 842 வரை ஆட்சி செலுத்தியவர். இயோபில் என்பது இவர் பெயர். 840-ல் இவரது தலை முழுமையும் வழுக்கையாகி விட்டது. இந்த வழுக் கைத் தலையர் உடனே தம் நாட்டிலுள்ள ஆண் பெண் குழந்தை அத்தனை பேரும் தம்மைப் போலவே இருக்க வேண்டும் என்று கட்டளை இட்டார். முடி எடுக்காதவர்களுக்கு மரண தண்டனை என்றும் சட்டமிட்டாராம். தம் நாட்டிலுள்ள அத்தனை பேரும் மொட்டைத் தலையர்களாக இருப்பதைக் கண்டு ஆனந்தித்தாராம்.



✲ இந்த உருவங்களுக்குத் தருமாப் பொம்மை என்று பெயர். நாம் மாரியம்மன் கோவிலில் உருவாரம் வாங்கி வைப்பதில்லையா? அதுபோல ஜப்பானில் உள்ள கிராம மக்கள் தருமா என்ற இந்தப் பொம்மைக் கண்களின் விழிகளுக்கு வர்ணம் பூசினால் எண்ணியது ஈடேறும் என்ற நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள். கிராமத்தில் அங்கங்கே இது போன்ற உருவாரங்கள் வைக்கப்பட்டிருக்கும். ஏதாவது காரியம் கைகூட வேண்டுமானால் இந்தப் பொம்மை களின் கண்களுக்கு வர்ணம் தீட்டி வேண்டிக் கொள்ளுவார்கள். அந்தப் பொம்மை இவர்கள் மீது கருணை கொண்டு இவர்களைக் கண் திறந்து பார்க்குமாம்.



✲ இந்த அழகிய மான் குட்டியைப் பார்த்தீர்களா? சின்னஞ்சிறிய இந்த மானினத்துக்குக் கோசிங்கா என்று பெயர். இந்தியாவிலும் பர்மாவிலும் இத்தகைய மான்கள் காணப்படு கின்றன. மான் வகைகளில் சிலவற்றுக்குக் கொம்புகள் இருக்கும். சிலவற்றுக்கு இருக்காது. கலைமானுக்கு இரண்டு கொம்புகளிலும் பல கிளைகள் உண்டு. ஆனால் கோசிங்கா மானுக்கு மட்டும் நான்கு கொம்புகள். உலகிலேயே நான்கு கொம்புகளை உடைய விலங்கு இந்த இனத்து மான்கள்தானாம்.




வீடும் வாழ்வும்-3

மத்திய அமெரிக்கக் கிராமம்

மத்திய அமெரிக்காவில் அநேக அழகிய நகரங்கள் இருந்தாலும் ஏராளமான குடியானவர்கள் நகரங்களை அடுத்த கிராமங்களில்தான் வாழுகிறார்கள். சோளம், பீன்ஸ், காய்கறிகள் ஆகியவற்றைத் தங்கள் சிறிய நிலத்தில் விளைவித்தும் ஆடுமாடு குதிரை ஆகியவற்றை மேய்த் தும் வாழ்க்கை நடத்துகிறார்கள். மிக வெப்பமான சீதோஷ்ணத்தை உடைய நாடாதலால் இவர்களுக்கு வீட்டைப் பற்றிய அக்கறை கிடை யாது. கடும் வெயில் மழை இவைகளிலிருந்து தப்ப அழுத்தமாக வேய்ந்த கூரைகளோடுகூடிய குடிசைகளை அமைத்துக் கொள்ளுகிறார்கள். இந்தக் குடிசைகளுக்குக் கதவுகள் வேண்டும் என்பதில்லை. அதிகமான மரச் சாமான்களும் கிடையாது. குடிசையின் சுவர்கள் முடைந்த தட்டிகளால் ஆனவை. தரை களிமண் கொண்டு கெட்டியாக்கப் பட்டது. வெயிலின் உக்கிரத்திலிருந்து காத்துக் கொள்ள அவர்கள் அணிந்துள்ள அகலமான குல்லாய்களையும் உடைகளையும் பாருங்கள். கள்ளி சப்பாத்தி போன்ற மரங்கள் செழிப்பற்ற பூமி என்பதைத் தெரிவிக்கின்றன இல்லையா?

காகிதமும் கத்திரிக்கோலும்

கங்காரு



இங்குள்ள மாதிரியைப் போலவே வெள்ளை காட்ரிட்ஜ் காகிதத்தில் பெரிதாகக் கட்டான் வரைந்து காப்பி செய்து கொள்ளுங்கள். அரை அங்குலக் கட்டான்களுக்கு ஆறரை அங்குல உயரமுள்ள கங்காரு பொம்மையை உருவாக்க லாம். காகிதத்தை இரண்டாக மடித்து மடிப்புப் பக்கத்தில் முதுகு வரும்படி (AB) கங்காருவின் உடலை வரைந்து கொண்டு கத்திரித்து எடுங்கள். B. என்ற இடத்தில் ஒரு வெட்டு வாயை ஏற் படுத்திக் கொள்ளுங்கள். புள்ளியிட்ட பகுதி களில் பேனாக் கத்தியின் கூரற்ற முனையினால் அழுத்திக் கிழித்து மடிப்பு உண்டாக்கிக் கொள் ளுங்கள். X.Y. என்று குறிப்பிட்ட இடங்களில் உடலின் உட்பக்கமாகக் கிறிக் கொள்ளுங்கள். உடலின் இரண்டு பகுதியிலும் இதே போலச் செய்து கொள்ள வேண்டும். உடல் பகுதியை ரூல் தடியின் கீழே வைத்து அழுத்திக் கொண்டு மெல்ல இழுத்து உருட்சியாக்கிக் கொள்ளுங்கள். இனி கீறிய பகுதிகளை மடித்துக் கால்களை உருட்சியாக்கிக் கொள்ள வேண்டும். X. Y. என்ற இடத்தில் கீறல் ஒன்று உள்ளும் மற்றது வெளியு மாக இருக்கும். இவைகளை அதனதன் போக்கில் மடித்துப் பசைக் காகிதத் தினால் பிரியாமல் ஒட்டிவிட வேண்டும். கண் பகுதியின் துவாரத்தில் கருப்புக் காகிதத்தை வைத்து ஒட்டி விடுங்கள்.

அடுத்து விளுதமான உருவமுடைய வால், காது, பை இவைகளைக் கொண்ட பகுதி. இதையும் உடல் பகுதியைப் போலவே C,D. என்ற மடிப்பின் ஓரமாக வரைந்து வெட்டிக் கொள்ளுங்கள். E என்ற இடத்தில் ஒரு வெட்டு வாயைச் செய்து கொள்ளுங்கள்.

இனி புத்தகத்தைப் பிரிப்பது போல உடல் பகுதியைப் பிரித்து அதனுள் காதும் வாலும் வெளியே நீண்டிருக்கும்படி வைத்து (வெட்டு வாய் Bயோடு Eயைச் சேர்த்துச் செருகவும்) மூடி விடுங்கள். முகத்தின் இரு பக்கத்தையும் வாலின் இரு நுனிகளையும் பசையினால் ஒட்டி ஒன்று சேர்த்து விடுங்கள். கங்காரு அடி வயிற்றில் அழகானதொரு பையோடு காட்சியளிப்பதைக் காணலாம்.



உங்களால் முடியுமா ?

✿ கீழே வரிசையாகச் சில எண்கள் கொடுக் கப்பட்டிருக்கின்றன. அவைகளின் இடையே இரண்டு கூட்டல் அடையாளங்களையும் இரண்டு கழித்தல் அடையாளங்களையும் போடவேண்டும். அப்படி நீங்கள் போட்டபின் அதன்படி அதைக் கூட்டினால் அந்த எண்களின் கூட்டுத் தொகை அதன் முடிவில் குறிப்பிட்டபடி வர வேண்டும். கூட்டல் கழித்தல் குறிகளை எங்கே இடவேண்டும் என்று சொல்லுங்கள் பார்க்கலாம்.


987654321=621


விடை: தொண்ணூற்றி எட்டு+ஏழு—ஆறு+ஐநூற்றி நாற்பத்தி மூன்று—இருபத்தி ஒன்று.

✿ ரமணிக்கும் உஷாவுக்கும் அவர்கள் அப்பா ஒரே மாதிரியானதொரு கதைப் புத்தகத்தை வாங்கிக் கொடுத்தார். ரமணி அந்தப் புத்த கத்தை 80 நிமிஷங்களில் படித்து முடித்து விட் டான். ஆனால் அவன் தங்கை உஷாவுக்கோ அதைப் படித்து முடிக்க ஒரு மணியும் பத்து நிமிஷங்களும் ஆயின. அப்படியானால் புத்தகத் தைச் சீக்கிரம் படித்து முடித்தது யார்?

விடை: உஷாதான்! எழுபது நிமிஷங்களில் படித்து முடித்து விட்டாளே!

✿ உலகத்தின் கூரை என்று கூறப்படும் இமயத்தின் முடியான எவரெஸ்ட் சிகரத்தில் ஏற முடியுமா உங்களால்? எல்லையைக் காக்க நீங்கள் எல்லாருமே இமயத்தின் அடிக்குப் போக வேண்டி வந்தாலும் வரலாம். ஆகவே இமயத் தின் முடிக்கு ஏறும் சுலபமான வழியை நீங்க ளெல்லாம் அறிந்திருக்க வேண்டியது அவசியம். இங்குள்ள படத்தின் அடியில் அந்த வழியின் ஆரம்பம் அம்புக் குறியிட்டுக் காட்டப்பட்டுள் ளது. பென்சிலைக் கூராக்கிக் கொண்டு இமயத் தின் முடியைக் காணப் புறப்படுங்கள். முடி பார்க் கலாம். யார் முடிக்கு முதலில் போகிறீர்களோ அவர்களுக்குத்தான் சீனக்காரனை விரட்டியடித்த விருது கிடைக்கும் !




நீங்க பெரிய அதிர்ஷ்டசாலி! என்னைக் கண்டபடி திட்டினீங்க' ஒரு கோழையைப் பார்த்து அப்படித் திட்டியதால் நீங்க இன்னிக்குப் பிழைத்தீங்க!
டேய்! மூட்டையில் என்ன? தங்கமா?
ஆமாங்க! மிருதங்கமுங்க!
ஊரில் குளம் வெட்டப் போகிறோம்! அதற்கு உங்கள் உதவி ஏதேனும்..!
கொஞ்சம் இருங்க!
ஏதோ என்னால் முடிந்தது! இந்தாங்க!
உங்க இரண்டு பேருக்கும் சம ராசி ஜாதகம். அடுத்த ஜன்மத்திலேயும் நீங்கள் இரண்டு பேரும் கணவன் மனைவியாகவே இருப்பீர்கள்!
அதுக்கு ஏதேனும் பரிஹாரம் உண்டா?
சாமா

படித்துப்  பாருங்கள்

மலாயாவில் தமிழ்க் கவிதைகள்

தமிழ் கடல் கடந்த நாடுகளிலும் இலக்கிய ரீதியாக ஆக்கம் பெற்று வளர்கிறது என்பதற்கு இந்தக் கவிதை நூலும் ஒரு சாட்சி. மலாயாவில் உள்ள ஆர்வம் மிக்க தமிழ்க் கவிஞர்கள் பலர் எழுதியிருக்கும் கவிதைகளை ஒரு கோவையாகத் தொகுத்துள்ளார் 'பரிதா மணாளன்' என்பவர். ஒவ்வொரு கவிதையின் முகப்பிலும் அதனை இயற்றிய கவிஞரின் புகைப் படமும் அவரைப் பற்றிய சுருக்கமான வாழ்க்கைக் குறிப்புகளும் இடம் பெற்றிருக்கின்றன. கவிதைகளில் தமிழுணர்ச்சி, இயற்கை வர்ணனை போன்ற அம்சங்கள் அங்கங்கே பொருந்தி யிருக்கின்றன. 'கார்த்திகையின் காதல்' என்ற கவிதைகளில் தமிழ் மாதங்கள் பன்னிரண்டின் பெயரும் நயமாகப் பொருந்தி வருமாறு அமைக்கப் பட்டிருக்கிறது. 'யாது தவம் செய்தனே?' என்ற பாட்டில் வாக்கு நயம் நன்றாயிருக்கிறது. உயிர்க் கவிதை, 'கேள்விக்கு விழித்தேன்! விடைக்குச் சிரித்தேன்' போன்று பலப் பல நல்ல கவிதைகள் இத் தொகுதியில் உள்ளன. மலாயாத் தமிழன்பர்களின் இந்த முயற்சி போற்றுதற்குரியது.

தொகுத்தவர்: பரிதா மணாளன், வெளியீடு: அறிவு மலரகம், 18, அராப் ஸ்திரீட், சிங்கப்பூர்—7; விலை: ஒரு வெள்ளி.

தொல்காப்பிய ஆராய்ச்சி

தமிழ் மொழிக்கு முழு முதல் இலக்கணமாகிய தொல்காப்பியத்தைச் சார்ந்தும், தழுவியும், எத்தனையோ ஆராய்ச்சி நூல்களும், திறனாய்வு நூல்களும் வெளிவந்துள்ளன. ஆயினும் தொல்காப்பியம் என்னும் பேரிலக்கணக் கடல் இன்னும் அநேக ஆராய்ச்சி நூல்களைத் தனக்கு எதிர்பார்த்து நிற்கிறது.

இப்போது ஆழ்ந்த புலமையும், நிறைந்த அனுபவமும் கொண்டு பேராசிரியர் சி. இலக்குவனார் அவர்கள் எழுதி யுள்ள 'தொல்காப்பிய ஆராய்ச்சி' என்ற நூலும் வெளி வந்திருக்கிறது. தொல்காப்பியப் பெரு நூலின் மூன்று பெரும் பகுதிகளாகிய எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் ஆகியவற்றைச் சுருக்கமாகவும் ஆழ்ந்த புலமையுடனும் ஆராய்ந்துள்ளார் பேராசிரியர். தொல்காப்பியருடைய காலவரையறையைப் பற்றிய ஆராய்ச்சியோடு நூல் தொடங்குகிறது. எழுத்து, சொல் பகுதிகளைப் பற்றிய ஆய்வைக் காட்டிலும், பொருளதிகாரத்தைப் பற்றிய ஆராய்ச்சியே சற்று விரிவாக அமைந்திருக்கிறது. நூலினுள்ளும் பொருளதிகாரம் தானே பெரிது. அகத்திணையியலைப் பற்றிய ஆராய்ச்சித் தோற்றுவாய் சிறப்பா யிருக்கிறது. நூலின் எல்லாப் பகுதிகளுக்குள்ளும் சாதி வேறுபாடுகளைப் பற்றிய பிரச்னைகளைத் தவிர்த்திருக்கலாம். எந்தக் குழப்பம் இந் நாட்டிலிருந்து நீங்க வேண்டும் என்று நினைக்கிறோமோ, அதைப் பற்றியே மீண்டும் மீண்டும் கவலைப் படுவது அவசியமா? உவமை இயல் பற்றியும் செய்யுளியல் பற்றியும் மிக நன்றாகவும், புலமை நயம் தோன்றவும் எழுதியிருப்பதைப் படித்து மகிழ்கிறோம். பிற்காலத்துத் தோன்றிய பல வகையான யாப்பிலக்கண நூல்களுக்கும் தொல்காப்பியர் காலத்து யாப்பிலக்கண விதிகளுக்கும் வேறுபாடுகள் உண்டு. செய்யுளியல் பற்றிய பகுதியில் ஆசிரியர் தொல்காப்பியர் காலத்துச் செய்யுளிலக்கணம் நன்கு விளக்கப்பட்டுள்ளது. தொல்காப்பியம் முழுமைக்கும் சாரமாகவும், சுருங்கிய கருத்து விளக்கமாகவும் இந்த நூல் அமைந்திருக்கிறது.

ஆசிரியர்: சி. இலக்குவனார், எம்.ஏ., எம்.ஓ.எல்.; வெளியீடு: வள்ளுவர் பதிப்பகம், புதுக்கோட்டை, விலை: ரூ. 5.00

இலக்கிய மேடை

இக் கட்டுரைத் தொகுதியில் சுவை நிரம்பிய இலக்கியக் கட்டுரைகள் ஒன்பது இணைந்திருக்கின்றன. இலக்கிய விமரிசகர்கள், விமரிசனம் கண்ட பயன் என்ற முதல் இரண்டு கட்டுரைகள் விமரிசனத்தின் வழி, துறை, பயன், பண்பு ஆகியவற்றை நன்கு விளக்கியுள்ளன. விமரிசனத் துறையில் தமிழ் நாட்டின் இன்றைய நிலை என்ன என்பதைப் பற்றியும் குறிப்பாகச் சொல்லி யிருக்கிறார். 'அறிஞர்களும் வாழ்க்கை வரலாறும்' என்ற தலைப்பில் ஒரு கட்டுரையும், ருஷ்ய ஞானி டால்ஸ்டாயைப் பற்றி ஒரு கட்டுரையும், சிறுகதை ஆசிரியர் மாப்பஸான்பற்றி இருகட்டுரைகளும் ஆஸ்கார் ஒயில்டைப் பற்றி சுவாரஸ்யமான செய்திகள் அடங்கிய மூன்று கட்டுரைகளும் நூலின் சுவையைக் குறைவில்லாமல் செய்திருக்கின்றன. இலக்கியத்தில் சீர்திருத்தம், இலக்கியத்தில் காதல் ஆகிய மற்ற இரு கட்டுரைகளும் உள்ளன. சுவை நிரம்பிய இந்தக் கட்டுரைத் தொகுதியை எல்லோரும் விரும்பி வரவேற்பார்கள்.

ஆசிரியர்: மு. அண்ணாமலை, எம்.ஏ., வெளியீடு: தொல்காப்பியர் நூலகம், 202, ஜானி ஜான் தெரு, சென்னை—14; விலை: ரூ. 2.50.

பக்தி ஸுதா

ஸுதா என்றால் அமுதம். அமுதம் இனிமையைக் குறிப்பது; இறவாமையைக் குறிப்பது. இரு விதத்திலும் அமுதமாகிய ஆண்டவனில் கரைந்து நாமும் அமுதமாவதற்கு வழி வகுப்பது பக்தி. பக்தியை அமுதமாகிய வடமொழியில் வகுத்துத் தந்துள்ள மகான்கள் பலப்பலர். அந்த அமுத பிந்துக்களைத் திரட்டி இந்த நூலாகத் தருகிறார் ஆசிரியர். முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன் வெளி

யான முதல் பதிப்பு இப்போது பல மாறுதல்களுடன் புதுப்பிக்கப்பட்டு வெளியாகியிருக்கிறது. வேத வாக்கியங்களும், புராண சுலோகங்களும், ஆதிசங்கரர், காளிதாஸர், வேதாந்த தேசிகர், அப்பய்ய தீக்ஷிதர், நீலகண்ட தீக்ஷிதர், நாராயண பட்டத்ரி, மூககவி முதலிய பல பக்தசிரோமணிகளின் துதிகளுமாக நானாவித நன்மலர்கள்கொண்ட செண்டாக விளங்கும் நூலில் பக்தித் தேன் ஊறத்தானே செய்யும்? எல்லாத் தேவதைகளைப் பற்றிய துதிகளும் காணப்படுவது விசேஷம். சுலோகங்களை நாகரத்திலும், தமிழ் எழுத்திலும் காண்கிறோம். கூடிய வரையில் தெளிவான தமிழில் ஒவ்வொரு சுலோகத்தின் பொருளும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்னின்ன துதிகளைச் சொல்வதால் இன்னின்ன பலன் கிடைக்கும் என்பதும் அநுபந்தத்தில் கூறப்படுகிறது. பக்திப் பொறியைக் கனலாக்கிக் கொள்ளும் பெரும் பயனை நூல் அளிக்கும் என்பது நிச்சயம்.

சில சுலோகங்களுக்கு முன்னும் கர்நாடக சங்கீத ராகங்களின் பெயர்கள் காணப்படுகின்றன. அதைப் பற்றிக் கவலை வேண்டாம்.

தொகுப்பாசிரியர்: அனந்தராம அய்யர்; வெளியீடு: கலைமகள், சென்னை-4; விலை ரூ.4

கருத்தும் கற்பனையும்

நம் தமிழ் மொழியில் கவிதைகளுக்கும் கற்பனைக்கும் பஞ்சமே இல்லை. கற்பனைக் கருவூலங்கள் என்று கூறத்தக்க பல முழுக் காவியங்களும் ஏராளமான தனிக் கவிதைகளும் இருக்கின்றன. சொல் நயமும், பொருள் நயமும் கொண்ட அக் கவிதைகளில் காணக் கிடக்கும் கருத்துக்களும், போதுனும் கற்பனைத் திறனும்உய்த்துணர்ந்து அனுபவிக்கத் தக்கவை என்பதோடு துய்த்துப் பயன்படுத்திக் கொள்ளவும் தக்கவை.

கவிதைகளைப் படித்துச் சுவைப்பது ஒன்று: தான் அனுபவித்த இன்பத்தைப் பிறரும் அனுபவிக்கும் வண்ணம் விரித்துரைப்பது மற்றொன்று. இவ்விரண்டு இயல்புகளையும் ஒருசேரப் பெற்றிருப்பது இவ்வாசிரியரின் தனித் திறன் என்றே கூற வேண்டும். 'கருத்தும் கற்பனையும்' என்ற முதல் கட்டுரை தரத்திலும் முதல் கட்டுரையாகத் திகழ்கிறது. ஆசிரியரின் தமிழ் நடை பயில்வாரை ஈர்க்க வல்லதாய் இருப்பது இந் நூலின் சிறப்பு அம்சம். ''மாலை யழகு'' சிறப்புக் கட்டுரையாக மிளிர்கிறது. ''வஞ்சினமும் வரலாறும்'' என்ற கட்டுரை சிறந்த திறனாய்வுக் கட்டுரை. ''ஞான சம்பந்தரின் புலமை நயம்'' ஒவ்வொரு தமிழன்பரும் படித்து அனுபவிக்க வேண்டிய கட்டுரை. ''பாலும் தேனும்'' என்ற கட்டுரையைப் படிக்கும்போது பாலும் தேனும் போலவே இனிக்கிறது. மற்றக் கட்டுரைகளும் சுவையில் பின்தங்கிவிடவில்லை. இந் நூல் ஒரு நல்ல முயற்சி.

ஆசிரியர்: வித்துவான் பூ. அமிர்தலிங்கன்; பிரசுரம் செல்வி பதிப்பகம், காரைக்குடி; விலை: ரூ. 2.25.

பாடும் பாப்பா

கவிதை இயற்றுவது எவ்வளவு கடினமான காரியம் என்பது ஒரு கவிதை இயற்றிப் பார்த்தால் தான் தெரியும். அதிலும் குழந்தைகளுக்கான கவிதைகள் இயற்றுவது மிக மிகச் சிரமம்.. சொல்லழகு, பொருள் அழகு இவை யாவும் கொண்டு எளிய பதங்களைக் கொண்டதாகவும் இருக்க வேண்டும். பாடிச் சுவைக்க ஏற்றதாகவும் இருக்க வேண்டும்.

''பசி எடுத்தது'', பொன்னனும் குருவிகளும்'', என்ற கதைப் பாடல்களில் கதையும் இருக்கிறது; கவிதையும் இருக்கிறது. சிரிப்புப் பாடல்கள் என்ற தலைப்பில் காணப்படும் பாடல்கள் வேடிக்கையா யிருக்கின்றன. புத்தகமும் பல படங்களுடன் அழகாக அச்சிடப்பட்டிருக்கிறது.

இத்தகைய குழந்தைகளுக்கான கவிதை நூல்கள் நிறைய வர வேண்டும். ஆசிரியரின் முயற்சி பாராட்டுக் குரியது.


ஆசிரியர்: தணிகை உலக நாதன்; பிரசுரம்: சாந்தி நூலகம், 2 — 122, பிராட்வே, சென்னை—1. விலை: ரூ. 2.00

வாழ்க்கை அனுபவங்கள்

எழுத்தாளன் படைக்கும் பாத்திரங்களின் கதையை அறிந்து அவர்களின் சுக துக்கங்களில் பங்கு கொள்ளும் நமக்கு அந்தப் பாத்திரங்களைப் படைத்த எழுத்தாளனின் கதையையும் அறிய ஓர் ஆவல் எழுகிறதல்லவா? மேனாட்டு இலக்கிய கர்த்தர்கள் பலரைக் குறித்து நமக்கு எழும் இந்த ஆவலைப் பூர்த்தி செய்கிறது 'வாழ்க்கை அநுபவங்கள்'. புத்தகத்தின் பெயரைக் கண்டால் ஒவ்வொரு இலக்கிய கர்த்தரின் வாழ்வில் நிகழ்ந்த முக்கியமான அநுபவங்களின் தொகுப்போ இந்தப் புத்தகம் எனத் தோன்றும். அல்ல; பதினெட்டு மேனாட்டு ஆசிரியர்களின் முழு வரலாற்றையுமே சுருக்கமாக, ஆனால் சுவை படக் கூறுகிறார் ஆசிரியர். அவர்களுடைய இலக்கியங்களிலிருந்தும் சில 'சாம்பிள்'கள் காட்டியிருந்தால் சுவை கூடியிருக்கும். ஒவ்வொரு கட்டுரைக்கும் தலைப்பில் அந்தக் கட்டுரை சம்பந்தப்பட்ட ஆசிரியரின் எழுத்திலிருந்து ஒரு மேற்கோள் கொடுத்திருக்கிறார். இதுவே அந்தந்த ஆசிரியரின் லட்சிய வாசகமோ என்றெண்ணி விட்டால் ஆழ்ந்த சமய உணர்வு பெற்ற மில்டன், 'நியோ கிளாஸிகல்' இலக்கியத்தில் சாமானிய மக்களைப் புகழ்ந்து துணிவுடன் பாடிய கோல்ட்ஸ்மித், நகைச்சுவையால் உலகெலாம் தழுவும் அன்பு கொண்ட ஓ ஹென்ரி ஆகியோரைப் பற்றித் தவறான கருத்தும்கூட உண்டாகி விடும்.

கொட்டை எழுத்தில் பிரசுரமாகி யிருக்கும் தலைப்புக்களிலேயே கோல்ட்ஸ்மித் என்பது கோல்ட்மிஸ்த் என்றும் ஸ்காட் என்பது காட் என்றும் அச்சாகியிருப்பதை என்ன சொல்ல?

ஆசிரியர்: ரா. பாலகிருஷ்ணன்; வெளியீடு: கலைஞன் பதிப்பகம், சென்னை—17; விலை: ரூ. 1—50.



கேட்காதவர்களிடம் எல்லாம் கேட்டு, கெஞ்சாதவர்களிடம் எல்லாம் கெஞ்சிப் பணத்தை ஐந்தும் பத்துமாகச் சேர்ப்பதற்குள் என் ஆவி பாதி தீர்ந்து விட்டது. அப்படியாவது தேவையான ஐம்பது ரூபாய் சேர்ந்ததா என்றால் அதுவும் இல்லை. முப்பது ரூபாய் தான் கிடைத்தது. தேவையான பணத்துக்கு இருபது குறைவாகத்தான் சேர்ந்தது. அந்தக் குறைவை நிவர்த்தி செய்ய ராஜா ராவிடம் தான் கேட்க வேண்டும். அவன் ஒருவனிடம் தான் நான் இன்னமும் கேட்கவில்லை.

மணியார்டர் பாரத்தின் கூப்பனில் நாலு வரி கிறுக்கி அதை அனுப்ப நான் போஸ்டாபீஸ் சென்ற போது மணியார்டர் எடுக்கும் நேரம் காலாவதியாகி விட்டது. இனி நாளை தான் மணியார்டர் வாங்குவார்கள் என்பது தெரிந்ததும் எனக்குக் கைகால் ஓடவில்லை. என் மனைவி லட்சுமிக்கு அந்தப் பணத்தை அனுப்ப நான் என்ன பாடுபட்டேன்! இப்போதோ அப்போதோ என்று புதிய உயிர் ஒன்றை இந்தப் பூமிக்குக் கொண்டு வர—தாய்க்குலம் தழைக்க—பிறந்தகம் சென்றிருக்கும் அவளுக்குப் பிரசவம் கஷ்டமாயிருக்குமாம்! தலைச்சன் பிரசவமாயிற்றே!

அவள் எழுதியிருந்தாள்.

“லட்சியம், லட்சியம் என்று இரண்டு நாளைக்கு நிம்மதியாக உட்கார்ந்து சாப்பிடக் கூட அருகதையற்ற மாமனார் வீட்டில் பெண்ணை எடுத்து ஏழையான என்னை மணம் செய்து கொண்டீர்களே, உங்கள் செலவிலேயே! என்னால் உங்களுக்கு எவ்வளவு துயரங்கள்! எவ்வளவு துன்பங்கள்!

முதல் பிரசவத்துக்குத் தாயார் வீட்டுக்குப் போவதுதானே எந்தப் பெண்ணுக்கும் வழக்கம்? ஆனால் என்னை அழைத்துச் சென்று பிரசவம் பார்த்துத் தாயாகவும் சேயாகவும் என்னை அனுப்புகிற நிலையிலா என் பெற்றோர்கள் இருந்தார்கள்? அன்றாடங் காய்ச்சியான அவர்களுக்குப் பிரசவம் என்றால் ஏற்படும் செலவுக்குப் பணம் ஏது?

நீங்கள் மாதா மாதம் வீட்டுச் செலவுக்குக் கொடுத்த பணத்தில் ஐந்தாறு ரூபாயாகச் சேர்த்து ஐம்பது ரூபாய் நீங்கள் அறியாது வைத்திருந்தேன். அந்தப் பணத்தைக் கொண்டு என் வீட்டின் கௌரவத்தைக் காப்பாற்ற முயன்றேன். பிரசவத்துக்கு என் பெற்றோர்கள் என்னை அழைத்துச் செல்வது போலவும், அந்தப் பணத்தைக் கொண்டு அவர்களுக்கு எந்தவிதமான கஷ்டமுமின்றிப் பிரசவத்தை நடத்திக் கொள்வது என்றும் எண்ணினேன். நாம் ஒன்று எண்ணத்தான் தெய்வம் ஒன்று நினைக்குமே!

ஊதாரியான என் தம்பி அந்தப் பணத்தை எப்படியோ எடுத்துக் கொண்டு ஓடிவிட்டான். அந்த அதிர்ச்சியும் ஏமாற்றமும் என்னைக் கலக்கி விட்டன. நான் உங்களை ஏமாற்றிப் பணம் சேர்த்ததால்தான் தெய்வம் என்னை ஏமாற்றி விட்டதோ என்று எண்ணிக் கலங்குகிறேன். எதிர்பாராத அதிர்ச்சியும்,ஏமாற்றமும் என் உடல் நிலையைப் பெரிதும் பாதித்து விட்டன. என்னைப் பரிசோதித்த லேடி டாக்டர் பிரசவம் கஷ்டமாகத்தான் இருக்கும் என்று கூறி விட்டாள். சுகமான பிரசவம் என்றால் கூட அதைச் சமாளிக்கத் திராணியற்ற என் பெற்றோர்கள் கஷ்டமான பிரசவம் என்றால் என்ன செய்வார்கள்?

பிரசவத்தை நினைத்தால் எனக்குப் பயமாயிருக்கிறது. ஆண் குழந்தை பெற்று அதை உங்கள் கையில் தர வேண்டும் என்கிற பொற்கனவு வெறும் பகற்கனவாகி விடுமோ என்ற அச்சம் என்னை நிலைகுலையச் செய்து விட்டது. நல்லது கெட்டது எது ஆனாலும் நான் உங்கள் அருகிலேயே பிரசவ சமயத்தில் இருக்கவிரும்புகிறேன். அந்தச் சமயத்தில் உங்கள் அருகில் இருந்தால் எனக்கு எவ்வளவோ தைரியமாக இருக்கும். ரயில் சார்ஜுக்குக்கூட என் தந்தையிடம் பணமில்லை. நீங்கள் அனுப்பினால் நான் உடனே....”

லக்ஷ்மியின் உருக்கமான அந்தக் கடிதத்தை நான் ஆயிரம் முறை படித்திருப்பேன். பணமில்லாததால் கஷ்டமான பிரசவம் அவளுக்கு ஆகும் பொழுது டாக்டரின் உதவி வேண்டாமா? மருந்து வேண்டாமா? நெய் வேண்டாமா? பத்தியமான உணவு வேண்டாமா?

இப்போது முப்பது ரூபாய் அனுப்புவதாகவும், நாளையோ, நாளை மறுநாளோ ராஜா ராவிடம் கேட்டு இருபது ரூபாய் வாங்கி அனுப்புவதாகவும் அந்த மணியார்டர் கூப்ப

வில் எழுதியிருந்தேன். அதை அனுப்ப முடியாமல்தான் போய் விட்டதே!

லக்ஷ்மியின் கடிதம், மூன்று பத்து ரூபாய் பணம், மணியார்டர் பாரம் முதலியவற்றைச் சட்டைப் பையில் போட்டுக் கொண்டு சோர்ந்த மனத்துடன் போஸ்டாபீஸிலிருந்து நடந்தேன்.

''ஸார் !'' என்று பின்னாலிருந்து யாரோ என்னை அழைப்பது கேட்டது:

திரும்பிப் பார்த்தேன். ஒரு பெண்தான் என்னை அப்படி அழைத்தவள். நான் பார்த்ததும் அவள் தலையைக் குனிந்து கொண்டாள். தலை உச்சி வரை போயிருந்த வகிடின் வெண்ணிறப் பாதையின் இருபுறமும் கேசம் அலை அலையாக, நெளி நெளியாக வாரி விடப்பட்டிருந்தது. ஏழைப் பெண்போல் இருக்கிறது! எந்த விதமான செயற்கை அலங்காரம் இல்லாமலேயே அவள் 'பளிச்'சென்றிருந்தாள்!

''நீங்கள் ஓர் உதவி செய்ய வேண்டும் சார்!'' என்றாள் அவள் என்னிடம்.

இந்தப் பட்டணத்தில் பத்து வருடங்களுக்கும் மேலாகக் குப்பை கொட்டிக் கொண்டிருக்கிறவன் நான். 'உதவி' என்ற பெயரில் தங்கள் வயிற்றுப் பிழைப்பை நடத்தும் எத்தனையோ பேர்களை நான் இங்கே பார்த்திருக்கிறேன். பள்ளிக்கூடச் சம்பளம் என்று கேட்டு வரும் மழைக்குக் கூடப் பள்ளிக்கூடத்தில் ஒதுங்கியிராத வயதுப் பெண் ஒருத்தி. அடிவயிற்றில் நிறைய துணியைச் சுற்றிக் கொண்டு கர்ப்பவதி போல் நடிக்கும் பெண் பிள்ளை, அம்மன் கோவில் திருவிழா அது இது என்று வெள்ளை வேஷ்டியும் சட்டையும் போட்டுக் கையில் ஒரு நாற்பது பக்க நோட்புக்கும் பென்ஸிலுமாக வரும் 'அடியார்கள்'-இப்படி எத்தனையோ பேர்களை நான் பார்த்திருக்கிறேனே!

''காசில்லை! வேறு ஆளைப் பார்!'' என்றேன்.

பணம் காசை எதிர்பாராதவள் போல் சிரித்தாள் அவள். ''எனக்குக் காசு தேவையாக இருந்திருந்தால் நீங்கள் கூறியதுபோல் வேறே ஆளைப் பார்த்திருப்பேன்! ஆனால் ராஜாராவை அதிகமாகத் தெரிந்தவர்கள் உங்களை விட யாரும் இல்லாததால்தான் உங்களிடம் உதவி கேட்கிறேன் சார்!'' என்றாள் அவள். அப்போது அவள் கண்கள் கலங்கின.

''எந்த ராஜாராவ்? சிவப்பாய், குண்டாய், ஜிப்பா போட்டிருப்பாரே....''

''இல்லை! கறுப்பாய், ஒல்லியாய் சைதாபேட்டையிலிருந்து வருகிறாரே, அவர்!'' என்றாள் அவள்.

அப்போதுதான் அவளைக் கூர்ந்து பார்த்தேன். ராஜாராவுக்கு ஒரு காதலி இருக்கிறாள் என்பது எனக்குத் தெரியும். ஆனால் அவளைப் பற்றி அவனிடம் தூண்டித் துருவி நான் எதையும் கேட்டதில்லை. கேட்டாலும் சொல்ல மாட்டான் அவன். எதையும் வாய் திறந்து பேச விருப்பமில்லாதவனிடம் நானே எதையும் கேட்க ஆசைப்பட்டதில்லை. ஆனாலும் அவனிடம் எனக்கு ஓர் ஆழ்ந்த நட்பும் அன்பும் உண்டு.

''நீதான் அவனுடைய.....'' என்று இழுத்தேன்.

நான் சொல்ல வந்ததைப் புரிந்து கொண்டதும் அவள் முகம் குங்குமத்தைக் கொட்டியது மாதிரி சிவந்துபோனது. நாணத்தினால் உடல் பூங்கொடியாக வளைய அவள் கடைக்கண்ணால் பார்த்தாள். அழகு கொள்ளை போய்க் கொண்டிருந்தது அவளிடம். ஒல்லியான, கறுப்பான தாடை ஒட்டிய அந்த ராஜாராவை இந்த எழில் பிம்பம் எப்படிக் காதலித்தாள் என்ற வியப்பு உண்டாயிற்று எனக்கு. காதலுக்குக் கண் கிடையாது என்று முதன் முதலில் சொன்னவன் சிறந்த அனுபவசாலியாகத்தான் இருக்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டேன்.

''என்றால் உனக்கு என்ன உதவியாக வேண்டும்?'' என்றேன்.

''அவருக்குக் கலியாணம்...!'' என்றாள் அவள்.

''கேள்விப்பட்டேன்! என் வாழ்த்துக்கள்! கலியாணப் பெண் நீதானே?''

பதிலுக்கு ஒரு விம்மல் அவள் கண்டத்திலிருந்து வெடித்தது. ''நான் கலியாணப் பெண்ணாயிருந்திருந்தால் உதவி கேட்டு உங்களிடம் வந்திருக்க மாட்டேன்! கலியாண அழைப்பிதழையே அல்லவா கொண்டு வந்திருப்பேன்!'' என்று கூறிய போது அவ

னுடைய குரல் கம்மியது. ஏமாந்து போய் விட்ட ஏக்கமும், நம்பியது மோசம் போய் விட்ட தவிப்பும் அவனுடைய முகத்தில் தெரிந்தன.

''உன்னை மணந்து கொள்ள வில்லையா அவன்?''

''இல்லை! என்னை ஏமாற்றி விட்டார் அவர்! இப்போது ஒரு பணக்காரப் பெண்ணை அவர் மணக்கப் போகிறாராம்! நான் எங்காவது ஓடிப் போய்விட வேண்டுமாம்! அவர் வழியில் வரக் கூடாதாம்!'' என்று கூறுவதற்குள் அவள் அழுதே விட்டாள்.

''ராஜாராமா இப்படிச் செய்கிறவன்? என்னால் நம்ப முடியவில்லையே?''

''என்னாலும்தான் அவரை இப்போது நம்ப முடிய வில்லை. என்னிடம் அவர் தம் அன்பையும் ஆசையையும் வைத்திருந்ததைக் கூற வார்த்தையே இல்லை. 'சீதா, சீதா' என்று உயிரையே விடுவார். என்னைத் தவிர வேறு எந்தப் பெண்ணையும் மனத்தால்கூட நினைக்க மாட்டேன் என்றவர் இன்று நிறையப் பணம் கொண்டு வருகிறாள் ஒரு பெண் என்றதும் மனம் மாறி விட்டார். நான் அனாதையாம்! அப்பா, அம்மா இல்லாதவளாம்! நான் எப்படியோ எதுவோவாம்! நாக்கில் நரம்பில்லாமல் வாயில் வந்தபடி பேசுகிறார்! எனக்கு என்று பரிந்து பேச எவருமே இல்லாது போய் விட்டதால் என் வாழ்வே நாசமாகிக்கொண்டு வருகிறது....!'' என்று கண்ணீரும் கம்பலையுமாகக் கூறினாள் அவள்.

இந்தப் பூனையும் அந்தப் பாலைக் குடிக்குமா என்பது போல் இருக்கும் ராஜாராம் இப்படி ஒரு பெண்ணை மோசம் செய்வான் என்பதை நம்பவே தயக்கமாயிருந்தது எனக்கு. ஆனாலும் எந்தப் புற்றில் என்ன பாம்பு இருக்குமோ, யார் கண்டது? 'ஊமை ஊரைக் கெடுக்கும்' என்பது போல் அவன் ஏதேதோ செய்து கொண்டுதான் இருக்கிறானோ?

சீதாவைக் கண் கொண்டு பார்க்கவே முடியவில்லை என்னால்; வாழ்க்கை பறிபோய் விட்ட போது ஒரு பெண் மீண்டு வராத அதை எண்ணி அழுவது போல் அழுது கொண்டிருந்தாள். தாய் தந்தையில்லாத ஓர் அபலைப் பெண்ணை மோசம் செய்து விட்டு வேறொரு பெண்ணைக் கலியாணம் செய்து கொள்ளப் போகிறானே அந்த ராஜாராம், சுகப்படுவானா? அவனிடம் எனக்குக் கோபம் கோபமாக வந்தது.

சீதாவை அழைத்துக் கொண்டு என் வீட்டுக்கு வந்தேன். என்னால் தனக்கு விடிவு காலம் வரப் போவது போன்ற நம்பிக்கையுடன் அவள் வித்தியாசமில்லாமல் என் பின்னால் வந்தது எனக்கு ஆச்சரியத்தைத் தந்தது. ''நீ இங்கேயே இரு, சீதா! நான் ராஜாராமைப் பார்த்துப் பேசி அழைத்து வருகிறேன்!'' என்றேன் அவளிடம்.

''அவரிடம் ஜாக்கிரதையாகப் பேசுங்கள்! சீக்கிரத்தில் கோபம் வந்து விடும் அவருக்கு!'' என்றாள் சீதா.

ராஜாராம் முன்கோபக்காரன் என்பதை எப்படி அறிந்துவைத்திருக்கிறாள் இந்தச் சீதா!

புறப்பட்டேன்.

''அவர் இப்போது தன் அறைக்கு வந்திருக்க மாட்டாரே! குறைந்தது ஏழு மணியாவது ஆகுமே!'' என்றாள் சீதா.

அந்த உண்மையும் சீதாவுக்கு எப்படித்தான் தெரிந்திருந்ததோ! ஒரு நாளாவது ஆபீஸ் விட்டதும், 'ரூமு'க்கு வந்தோம் என்கிற வழக்கம் அவனிடம் கிடையாது!

''நீங்கள் ஆபீஸிலிருந்து அலுப்பாக வந்திருக்கிறீர்கள்! கை கால், முகம் கழுவிக் கொண்டு போங்களேன்! நீங்கள் போகவும் அவர் வரவும் சரியாயிருக்கும்!'' என்றாள் சீதா.

பிறகு, ''அவரும் வந்து சிறிது ஓய்வு எடுத்துக் கொண்டபின் நீங்கள் சென்று பேசினால் அதன் பலன் நல்லதாயிருக்குமல்லவா?'' என்றாள் அவள் தொடர்ந்து.

ராஜாராமை அணு அணுவாகத் தெரிந்து வைத்துக் கொண்டிருக்கும் சீதாவிடம் பெருமளவில் எனக்கு அனுதாபம் பிறந்தது. சட்டையைக் கழற்றிக் 'கோட் ஸ்டாண்டி'ல் மாட்டி விட்டுக் கை, கால், முகம் கழுவிக் கொண்டேன். மீண்டும் கோட் ஸ்டாண்டில் மாட்டிய சட்டையையே அணிந்து கொள்ளக் கையில் எடுத்தேன்.

''நீங்கள் அவருடைய நண்பர் என்பது சரியாகத்தான் இருக்கிறது!'' என்றாள் சீதா சிரித்தபடியே.

''ஏன்?''

''அவரும் இப்படித்தான்! ஆபீஸ் போவதற்கும் சரி, வீட்டில் இருக்கும்போதும் சரி, வெளியில் போகும் பொழுதும் சரி ஒரே சட்டையைத்தான் அணிவார். கடைசியில் பார்த்தால் எப்போதும் எதற்கும் ஒரே சட்டையை அணிவதால் அது வியர்வையில் ஊறி அழுக்கேறி ஆளின் கரத்தையும் தோற்றத்தையும் மதிப்புக் குறைவாகவே காட்டும்! ஆள் பாதி ஆடை பாதியல்லவா?'' என்றாள்.

சீதாவின் பேச்சு என்னைப் பெரிதும் கவர்ந்தது. எவ்வளவு விஷயங்கள் தெரிந்து வைத்திருக்கிறாள் இந்தச் சீதா! எப்படி மெய்ப்பட வாழ வேண்டும் என்பதை நன்கு தெரிந்து வைத்திருக்கும் இவளை ஏன் ராஜாராம் ஒதுக்கித் தள்ள வேண்டும்? கண்ணாடியில் தலை வாரித் திரும்பும்பொழுது எனது கை அவளது தோளின் மீது பட்டதும் நெருப்புத் துண்டத்தை மிதித்தவள் போல் துள்ளி விலகி ஓரமாக நின்றாள் அவள்! இவளையா நாக்கில் நரம்பில்லாமல் ராஜாராம் பேசினான்?

வேறு சட்டை அணிந்து கொண்டு கிளம்பினேன்.

''எடுத்த எடுப்பிலேயே என்னைப் பற்றிப் பேசத் தொடங்கி விடாதீர்கள்!'' என்றாள் சீதா.

''ஏனாம்?''

''முதலிலேயே வெறுப்பைக் காட்டத் தொடங்கி விட்டார் என்றால் பிறகு நீங்கள் சொல்லும் எதுவும் அவர் செவிகளில் ஏறாது போய் விடும்!''

படியிறங்கினேன்.

''நான் இங்கே உங்கள் வீட்டில் இருப்பதாகவும் கூற வேண்டாம்!'' என்றாள் சீதா.

''கூறினால்?''

''இன்னொரு வாலிபரின் வீட்டில் அவரை நேசிக்கிற ஒரு பெண் இருக்கிறாளென்றால்

அவர் அவளை உதறித் தள்ள அதையே ஒரு காரணமாகக் கொள்ளலாமல்லவா?'' என்று கேட்டாள் சீதா.

உண்மைதானே அவள் சொல்வது? 'என்னமோ ஏதோ' என்று அவளைப் பற்றி அவதூறாகப் பேசுகிறவன் இதையும் ஒரு 'சாக்காக' உபயோகித்துக் கொள்ள மாட்டான் என்பது என்ன நிச்சயம்?

என் முகத்தில் எதைக் கண்டானோ ராஜாராம், என் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தவன் சிறிது நேரம் கழித்து இலேசாகச் சிரித்தபடி ''நீ என்னைத் தேடி வருவாய் என்பது தெரியும்!'' என்றான்.

எல்லாவற்றையும் எதிர்பார்த்துக்கொண்டு அவைகளை எப்படிச் சமாளிக்க வேண்டும் என்று முன்கூட்டியே திட்டமிட்டுக் கொண்டு அவன் இருப்பது போலிருந்தது, அவனைப் பார்க்கும் பொழுது.

''எப்படித் தெரியும்?'' என்றேன்.

''எனக்குக் கலியாணம் என்று கேள்விப்பட்டிருப்பாய்! ஓடோடி வந்திருக்கிறாய்!'' என்று ஆழ்கடலுக்கே உரிய அமைதியுடன் எந்த விதமான பரபரப்போ வேதனையோ இல்லாமல் அவன் கூறியதும் என்னுள் கனன்றுகொண்டிருந்த அவனுடைய மோசம் வெடித்தது வார்த்தைகளாக.

''அதாவது ஒரு அபலைப் பெண்ணின் நெஞ்சில் ஆயிரமாயிரம் இன்பக் கோட்டைகளை எந்தக் கைகளால் எழுப்பினாயோ, அதே கைகளால் அவைகளை அழித்து விட்டு, அதே கைகளால் வேறொரு பணக்காரப் பெண்ணின் கழுத்தில் மூன்று முடிச்சுக்கள் போடப் போகிறாய் இல்லையா?''. என்று சீறினேன். என் பேச்சிலிருந்த சீற்றத்தைக் கண்டு 'வெலவெலத்து'ப் போய் விட்டான் ராஜாராம்.

''நீ என்ன சொல்கிறாய் ரமணி?'' என்று கிணற்றுக்குள்ளிருந்து பேசுவதுபோல் கேட்டான் ராஜாராம்.

''தாய் தந்தையில்லாத ஒரு பெண்ணை நீ காதலித்தாயல்லவா?'' என்று கேட்டேன்.

''ஆமாம்!'' என்றான் ராஜாராம்.

''அவளையே கலியாணம் செய்துகொள்ளப் போவதாக நீ அவளிடம் வாக்குக் கொடுத்தது உண்டா?''

''உண்டு!''

''அவள் உன்னை முழுக்க முழுக்க நம்பும் அளவுக்கு நீ அவளுடைய அன்புக்குப் பாத்திரமானாயல்லவா ?''

''ஆனேன்!'' என்றான் ராஜாராம்.

''அப்படி ஒரு பெண்ணை ஆசை ஆசையாக நேசித்து விட்டு இப்போது ஒரு பெண் நிறையப் பணத்துடன் வருகிறாள் என்றதும் அவளைக் கைவிடலாமா?''

''நான் அவளைக் கைவிட்டேனா? கைத்தலமல்லவா பற்றப் போகிறேன்!'' என்று பதறினான் ராஜாராம்.

''ஆமாம், அவளைக் கைவிட்டு விடத் தீர்மானித்து விட்டாய். அவள் அப்பா, அம்மா இல்லாதவளாம்! அனாதையாம்! அவளுடைய நடத்தையையே சந்தேகித்து நாக்கில் நரம்பில்லாமல் பேசி நூறோ இருநூறோ கொடுத்து ஓட்டிவிடப்போகிறாயாம்! அவள் எங்கேயாவது ஓடிப்போய்விட வேண்டுமாம்! இதற்கா ஒரு பெண்ணைக் காதலித்தாய்? அவள் உன்னை நம்பும்படி செய்தாய்?'' என்று இரைந்தேன்.

''இதை உன்னிடம் யார் சொன்னார்கள் ரமணி?'' என்று கேட்டான் ராஜாராம்.

''அவளே சொன்னாள்!'' என்றேன்.

''அவள் என்றால் எவள்?''

''உன் காதலிதான்.''

''கௌரியா?''

''இல்லை! சீதா!'' என்றேன்.

''சீதாவா?'' என்று கேட்டவன் ஒரு கணம் ஏதோ நினைவைத் தேடி இழுத்து வருபவன் போலக் காணப்பட்டான். பிறகு ''அவள் பெயர் என்னவென்று சொன்னாய்?'' என்று கேட்டான்.

''சீதா!'' என்றேன்.

''சீதாவா?'' என்று கேட்டுவிட்டுக் 'கடகட'வெனச் சிரித்தான் அவன். ''டேய் ரமணி! அந்தச் சீதா எப்படியடா இருந்தாள்?''

''சிவப்பாயிருந்தாள்!''

''குண்டாயிருந்தாளா?''

''சற்றுப் பருமன்தான்'' என்றேன்.

''கூந்தல் அலை அலையாக இருந்ததா?''

''இருந்தது!''

''ஸிமெண்ட் கலர்ப் புடவையில் கையகலத்துக்குச் சிவப்பு கலரில் பார்டர் போட்ட புடவை உடுத்தி யிருந்தாளா?''

''உடுத்தியிருந்தாள்!''

''சட்டைகூட வெள்ளையும் கறுப்புமாகப் பூப்போட்ட சிக்கன் வாயில்!'' என்றான் ராஜாராம்.

''கரெக்ட்!''

''இடது கன்னத்தில்......'' என்று அவன் கேட்கத் தொடங்கு முன்பே, ''மிளகத்தனை அளவுக்கு ஒரு கறுப்பு மச்சம் இருந்தது'' என்றேன் நான்.

''அடப் பாவி! ஏமாந்து விட்டாயே!'' என்று என்னைக் கட்டிக் கொண்டான் அவன்.

நான் ஏமாந்தேனா? சீதாவை ஏமாற்றியவன் அவன் அல்லவா?

''இரண்டு ஆண்டுகளுக்கு முந்தி என்னிடம் ஒரு உதவி என்று வந்தாள். இன்று உன்னிடம் வந்திருக்கும் சீதா. நீ அவளைக் காதலித்ததாகவும் அவள் உன்னை நம்பியதாகவும், கடைசியில் அவளைத் தவிக்க விட்டு விட்டு நீ வேறு ஒருத்தியை மணக்கப் போவதாகவும், நான் உன்னுடைய நெருங்கிய நண்பனானதலால் உன்னுடன் பேசித் தனக்கு வாழ்வளிக்கும்படி என்னிடம் கேட்டுக் கொண்டாள். அவளுடைய பேச்சும், நடிப்பும் கண்ணீரும் தத்ரூபமாக இருந்தன. உண்மையாகவே தோன்றி என்னை நம்பும்படி செய்தன. அவைகளை நம்பிக் கொண்டு உன்னிடம் பேச வந்தேன். உன் அறை பூட்டிக் கிடந்தது. நீ இல்லை. சினிமாவுக்குப் போயிருந்தாய். அதனால் திரும்பி என் அறைக்கு வந்தேன். என் அறையில் அவள்— சீதா — இல்லை. மேஜை டிராயரில் மணிபர்ஸில் நான் வைத்திருந்த இருபது ரூபாயுடன் அவள் எப்போதோ கம்பி நீட்டிவிட்டிருந்தாள்....'' என்று ராஜாராம் கூறுவதற்கு முன்பே, ''ஐயோ லட்சுமியின் பிரசவத்துக்கு அனுப்புவதற்காக நான் படாத பாடு பட்டுச் சம்பாதித்த பணத்தைச் சட்டைப் பையில் வைத்திருக்கிறேனே ராஜா ராம்!'' என்று அலறினேன் நான்.

''அந்த வெட்கக்கேட்டை — ஒரு பெண்ணிடம் ஏமாந்துவிட்ட கேவலத்தை — வெளியில் சொல்ல வெட்கப்பட்டு உன்னிடம் கூறு திருந்துவிட்டேன் ரமணி!''

ராஜா ராவின் பேச்சு எதுவும் என் காதில் விழவில்லை. லட்சுமிக்காக நான் கடன் பட்டுச் சேர்த்து வைத்திருந்த பணம் இந்நேரம் பறிபோகாதிருக்க வேண்டுமே என்று ஊரில் உள்ள தெய்வங்களை யெல்லாம் வேண்டிக் கொண்டு வீட்டை நோக்கி ஓடினேன்.

வீட்டின் கதவு மூடியிருந்ததைக் கண்டதும் 'பகீ'ரென்றது எனக்கு. பூட்டு வேறு பூட்டப் படாமல் கதவு தாழ்ப்பாளில் தொங்கிக் கொண்டிருந்தது. அதை அகற்றி விட்டு உள்ளே சென்றவன் கோட் ஸ்டாண்டிலிருந்த சட்டைப் பைக்குள் கையை விட்டேன். காலியாக இருந்த அந்தப் பை என்னைக் கதற அடித்துவிட்டது. கை, கால், முகம் கழுவிக் கொண்டு நான் உடை மாற்றிச் செல்வதில் என்ன அக்கறை காட்டினுள் அந்த மோசக் காரி சீதா!

பின்னுலேயே ஓடிவந்த ராஜாராவ் பேயறையப்பட்டவன் மாதிரி உட்கார்ந்திருக்கும் என்னை இரக்கமாகப் பார்த்தான்.

''பணம் பறிபோய்விட்டது ராஜா ராவ், பறி போய்விட்டது!'' என்று அரற்றினேன்.

''இதோ!'' என்றுன் ராஜா ராவ். அவன் காட்டிய இடத்தைப் பார்த்தேன். மேஜையின் மீது ஐந்து பத்து ரூபாய் நோட்டுகள் ஒரு கடிதத்தின் மீது வைக்கப்பட்டு அவை பறந்து போகா வண்ணம் 'டேபின் லைட்'டை இழுத்து அவைகளின் மீது வைக்கப்பட்டிருந்தது. பணத்தைக் கண்டதும் போன உயிர் திரும்பி வந்தது எனக்கு. முப்பது ரூபாய் ஐம்பது ரூபாயாக மாறிவிட்டிருந்த அதிசயத்தை அறியும் ஆவலில் அதன் அடியில் இருந்த கடிதத்தை எடுத்துப் படித்தேன்.

'ஐயா! நான் பிறர் நம்பும்படி ஏதேனும் கதைகளைக் கூறிவிட்டு அவர்களிடமுள்ள பணத்தையோ, பொருளையோ அபகரித்துச் சென்று விடுவேன். கடந்த ஆண்டுக்குமுன்பு ஒருமுறை இதேபோல் உங்கள் நண்பர் ராஜாராவை மோசடி செய்திருக்கிறேன். இப்போது உங்களை ஏமாற்றி, உங்களிடமுள்ள பணத்தைத் திருடிச் செல்லும் எண்ணத்துடன்தான் வந்தேன். நீங்கள் நம்பும்படி ஒரு கதையைக் கூறி, ராஜா ராவிடம் உங்களைச் செல்லும்படி செய்துவிட்டுச் சட்டைப் பையிலிருந்த ரூபாய் முப்பதையும் அபகரித்தேன். அப்போது உங்கள் மனைவி எழுதியிருந்த கடிதத்தை நான் காணும்படி நேர்ந்தது. அந்தக் கடிதத்தைப் படித்தேன். அது என் உள்ளத்தை உருக்கி, என் எண்ணத்தையே மாற்றி விட்டது.

பிரசவம் என்பது ஒரு பெண்ணுக்கு மறு ஜென்மம்தான். அதுவும் கஷ்டமான பிரசவம் என்றுல் கேட்கவே வேண்டாம். உயிர் பிழைப்பது என்பது தெய்வம் போடும் பிச்சைதான். பணமில்லாததால் பயந்து போய்விட்ட உங்கள் மனைவி நல்லது கெட்டது எதானுலும் அந்தச் சமயத்தில் உங்கள் அருகிலேயே இருக்க விரும்பி எழுதியிருந்த இடம் என்னை நெகிழச் செய்துவிட்டது.

நான் திருட்டுக்குணம் படைத்தவள் தான். மோசக்காரிதான். ஆனுலும் எனக்கும் ஓர் உள்ளம் இருக்கிறது. அதற்கு மற்ெறாரு பெண்ணின் துயரக் குரல் கேட்கிற சக்தி இருப்பதால் என் பங்காக நான் எப்போதோ ராஜா ராவிடம் பறித்த ரூபாய் இருபதையும் உங்கள் பணத்துடன் விட்டுச் செல்கிறேன். நீங்கள் ராஜாராவிடம் கேட்கவிருந்த பணம்தான் இது.

உங்களுக்கு ஆண் குழந்தை பிறக்கட்டும்!'

கையெழுத்துப் போடப்படாமல் முற்றுப் பெற்றிருந்த அந்தக் கடிதத்தைச் சீதாதான் எழுதியிருந்தாள். பணத்தைப் பத்திரமாக வைத்துவிட்டுப் போன அவளே கதவை மூடி வைத்துவிட்டும் போயிருக்கிறுள். ராஜா ராவிடம் நான் கேட்கவிருந்த பணத்தைச் சீதாவின் மூலம் அடைந்தபோது மனித மனத்தின் விசித்திரத்தைப் பற்றிச் சொல்லமுடியாத ஒரு பெருமை உணர்ச்சியே ஏற்பட்டது.

பத்தினிக் கோட்டம்

அத்தியாயம் நாற்பத்தேழு

மோகன அஸ்திரம்

"அங்கெங்கெனாதபடி எங்கும் நிறைந்திருக்கும் அத்தியந்தகாமரின் ஓவிய மோனத்தைக் கலைத்தமைக்காகப் பெரிதும் வருந்துகிறேன்; மன்னிப்பும் கோருகிறேன்!'' — கந்தர்வ நங்கை யாரே கண்டு பொறுமை கொள்ளும்படியான அத்தனை அழகார்ந்த அழகுப் புன்முறுவலுடன் மயிலைப் பழிக்கும் ஒயிலாக ஒல்கி நின்ற உத்தம சீலி, அவனது திண்ணிய கழுத்தில் தவழ்ந்து கொண்டிருந்த சவுக்கைக் காய் மாலையைக் கடைக்கண்ணால் கவனித்தவாறு கன்னல் ரசக் குரலில் இப்படிக் கூறினாள்.

அரைத்துக் குழைத்த சந்தனத்தை மார்பிலே பூசி, அழித்துப் பிழிந்த பசுந்தேனைச் செவிகளிலே நிறைத்து, பொடித்த நிலாச் சூரணத்தை விழிகளிலே நிமிர்த்து, இமயப் பனிவரையின் முகட்டிலே கொண்டு போய் நிறுத்தி வைத்தாற் போன்றதொரு விசித்திரானந்த உணர்ச்சியால் திக்கு முக்காடி நின்ற பரமேசுவர வர்மன் இமைக்கும் தொழிலை மறந்து அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

அவனது ஒளி பொருந்திய கண்களின் பனிப் பிலிற்றும் பார்வையை நேரிடமாட்டாமல் உடல் சிலிர்த்துக் குன்றிய



ஜெகசிற்பியன்

உத்தமசீலி, ஆத்தி மரக் கிளையில் ஒடுங்கிச் சாய்ந்தவாறு, "நேற்றைக்கு முன்தினமே பெருவளநல்லூருக்குப் புறப்பட்ட ஓவியக் கலைஞர் இந்தப் பல்லவபுரம் 'எல்லையைக்கூட இன்னும் கடக்கவில்லைபோல் இருக்கிறதே? காட்சிகளின் கலா ரசனையில் கண்ணையும் கருத்தையும் செலுத்தி விட்டதால், கால்கள் வந்த வழியை மறந்து விட்டனவா? அல்லது போக வேண்டிய இடத்துக்கு இனிப்போவதில்லை என்னும் முடிவு ஏற்பட்டுவிட்டதா?" என்று குறும்பாக வினவினாள்.


சாலிமாலிகா பூம்பஞ்சணையி லிருந்து உருண்டு கீழே விழுந்தவன் போல் அதிர்ந்து நிமிர்ந்த பரமேசுவரவர்மன் அவளைப் பரபரப்புடன் கூர்ந்து நோக்கினான். அவன் மனத்தைக் கவ்விக் கிறக்கி வைத்திருந்த உணர்ச்சிப் படலங்கள் பனிரென விலகி மறைந்தன. "அப்படி யெல்லாம் ஒன்றுமில்லை இளவரசி! வருகிற வழியில், இங்கே அருகிலுள்ள சமண சங்கத் தலைவரைக் காண வேண்டிய ஓர் அவசியம் ஏற்பட்டது. அவரைப் பார்த்த பின் அந்தப் பள்ளியிலேயே ஓரிரவு தங்கிவிட்டு, இதோ மீண்டும் என் பயணத்தைத் தொடங்கி யிருக்கிறேன்" என்று தனக்கேற்பட்ட அதிர்ச்சியைப் புன்னகையால் மறைத்துக் கொண்டு அமைதியாகக் கூறினான்.



உல்லாச மோகினியாய் நின்றுகொண்டிருந்த உத்தமசீலி, அவன் சொன்னதைக் கேட்டு அவனை விட அதிகமாக அதிர்ச்சியுற்றவன்போல் திரும்பி, ஆச்சரியத்துடன் அவனை உற்று நோக்கினாள். "சமந்த பத்திரரைப் பார்த்துவிட்டா வருகிறீர்கள்? சமண சங்கப் பள்ளியில் தங்கியிருந்து விட்டா வருகிறீர்கள்?"

இந்த விஷயத்தை இவள் ஏன் இத்தனை அக்கறையாக விசாரிக்கிறாள் என்று உள்ளூறக் குழம்பிய பரமேசுவரவர்மன், 'ஆமாம்' என்று மெல்லத் தலையசைத்தான்.

உத்தமசீலியின் பிறைநிலா நுதலில் சிந்தனை வரிகள் கோலம் பின்னின. 'சமண சங்கத் தலைவரைக் காணவேண்டிய அவசியம் ஏற்பட்டது' என்று அவன் சொன்னதை வைத்து எதை யெதையோ அதனுடன் தொடர்புபடுத்தித் துருவிப் பார்க்க முயன்றாள். பல்லவ புரத்துக்கு வரும் வழியில் அகளங்க அடிகளுக்கு ஏற்பட்ட ஆபத்து, அவர் இப்போது ஆதுரசாலையில் சிகிச்சை பெற்று வருவது, திரமிள சங்கத் தலைவர் சமந்த பத்திரர் தெரிவித்த கருத்துக்கள் முதலானவை



யெல்லாம் அவளது சிந்தனையில் மின்னற் கொடிகளாக தெளிந்து மறைந்தன. ஆனால், எதையும் எதனுடனும் இணைத்து எவ்வித ஊகத்துக்கும் அவளால் வரமுடியவில்லை. சமணப் பள்ளியின் ஆதுரசாலைக்கு அவள் போனபோது அங்கே பரமேசுவரவர்மனும் இருந்தான் என்ற விவரத்தையோ, பெருவளநல்லூர்ச் சாலையிலே யாரோ சிலரால் தாக்கப்பட்டுக் குற்றுயிராய்க் கிடந்த அகளங்க அடிகளை அவன்தான் ஆதுரசாலையில் கொண்டு வந்து சேர்த்தான் என்ற விவரத்தையோ சமந்தபத்திரர் அவளிடம் தெரிவிக்காததாலேயே அப்படிக் குழம்பித் தவித்தாள். ஆயினும் தன்னை உடனே நிதானப்படுத்திக்கொண்ட அவள் அவனை இதமாகப் பார்த்தவாறு, ''எதற்காகக் கேட்டேனென்றால், நானும் இப்போது அந்தச் சமண சங்கப் பள்ளியிலிருந்துதான் புறப்பட்டு வந்திருக்கிறேன்...'' என்று கூறினாள் தணிந்த குரலில்.

பரமேசுவரவர்மன் இதைக் கேட்டு மேலும் திகிலுற்றான். தன்னுடனிருந்த சமந்தபத்திரர் திடீரென்று வெளியே போய்த் திரும்பி வந்த காரணத்தையும் இப்போது புரிந்து கொண்டான்.

'இவள் ஏன் அந்தச் சமணப் பள்ளிக்குப் போனாள்? திரமிள சங்கத் தலைவரான சமந்தபத்திரருக்குத் தன் அஞ்சலிகளைச் செலுத்தப் போயிருப்பாளா? அல்லது என்னைப் பற்றிய உண்மைகளை அறிவதற்காக அங்கு சென்றிருப்பாளா? அந்த விவரங்களைத் தெரிந்து கொண்டுதான் எனக்கு முன்னேயே இவ்விடம் வந்து

காத்திருக்கிறானோ? அப்படியானால் இங்கே இவள் வந்திருப்பதன் காரணம் என்னவாயிருக்கும்? முதலில் என்னை ஒரு ஓவியன் என்றே எண்ணியிருப்பாள்; 'பல்லவ மன்னனை'க் காட்டிக்கொடுக்க விரும்பாததால் என்னுடைய உருவத்தைத் தான் வரைந்து கொடுத்து விட்டதாக நினைத்து என்மீது அனுதாபம் கொண்டு என்னை அந்த இக்கட்டிலிருந்து விடுவித்து அனுப்பி விட்டிருப்பாள். பிறகு வில்வேலி வந்ததும் அவ்வோவியத்தைப் பார்த்துச் சந்தேகப் பட்டிருப்பான். உடனே என்னைப் பிடித்து வரக் கட்டளையும் இட்டிருப்பான். தான் செய்த தவற்றுக்கு வருந்தி, என்னைப் பிடிக்கும் முயற்சியில் இவளும் முனைந்து இங்கே வந்திருப்பாள் — இந்த விவரங்களையெல்லாம் அறிந்துதான் சமந்தபத்திரர் எனக்குப் பாதுகாப்பு அளிக்க எண்ணித் தம்முடன் சில தினங்கள் தங்கியிருக்குமாறு வேண்டிக் கொண்டாரோ? அதனால்தான் இவள் அங்கு வந்ததையும் அவர் என்னிடம் தெரிவிக்கவில்லையோ?'

வெளிறிய முகத்துடன் அவளைப் பரிதாபமாகப் பார்த்தான் பரமேசுவரவர்மன். 'தன்னை அறியாமலே தான் எதிரிகளிடம் சிக்கிக் கொள்ளும்படியான சூழ்நிலை உருவாகி விட்டதைப் பற்றிக்கூட அவன்' அவ்வளவாகக் கவலைப்படவில்லை; தன் மனத்தை ஏதோ ஒரு வகையில் சலனப்படுத்திவிட்ட இந்தப் பெண்ணின் மூலமாகத் தான் அகப்படும்படியாகிவிடுமோ என்பதற்காகத் தான் பெரிதும் வேதனையடைந்தான்.

சஞ்சலம் சூழ்ந்த அவன் முகத்தையே விழியசைக்காமல் பார்த்துக் கொண்டிருந்த உத்தமசீலி, அவனுடைய மனத்தின் எண்ணச் சோடிப்புக்களைப் புரிந்து கொண்டவள்போல் மெல்லத் தலையசைத்தவாறு தான் சாய்ந்திருந்த மரக்கிளையின் மறு பக்கம் போய் நின்று கொண்டு, ''என்னை இங்கே சந்திக்க நேர்ந்தது பற்றி ஓவியக் கலைஞர் மிகவும் வருத்தப்படுகிறார் என்று நினைக்கிறேன். அது என் தவறல்ல. ஆதுர சாலையில் சிகிச்சை பெற்று வரும் எனது பணியாள் ஒருவனைப் பார்க்கும் பொருட்டுச் சமணப் பள்ளிக்குப் போன நான்; இதோ இங்குள்ள ஜினாலயத்தில் காலை வழிபாடு செய்துவிட்டுப் புறப்படலாம் என்று இந்தப்பக்கம் வந்தேன். மற்றப்படி ஓவியக் கலைஞர் இங்கு இருப்பார் என்பதை அறிந்தோ, அவரை மடக்கிச் சந்திக்க வேண்டும் என்பதற்காகவோ நான் வரவில்லை. அப்படி அவர் நினைத்தால் அது என் துரதிர்ஷ்டமே'' என்றாள் மிடுக்கான குரலில்.

வெய்துயிர்த்து நின்ற பரமேசுவரவர்மன் அவளை வியப்புடன் ஏறிட்டு



கணவன் : எங்கே அவசரம்?
மனைவி : வாசலில் ஈசியோடு ஒரு பிச்சைக்காரன் நிற்கிறான் நான் செய்த அடையைக் கொடுக்கலாம் என்று!...
கணவன் : நீ அவனிடம் அதைச் சொன்னாயோ?
மனைவி : சொன்னேன்!
கணவன் : இன்னுமா அவன் அங்கே நிற்கிறான்!

நோக்கினான். அவனது மிரட்சியுற்ற மனத்தில் பரவிப் படர்ந்திருந்த கற்பனைப் புழுதிகள் அக்கணமே பறந்து மறைந்தன. ஆதுர சாலையில் தான் பார்த்த இன்னொரு நோயாளியைத் தான் இவள் தன் பணியாள் என்று குறிப்பிடுகிறாள் என்பதைப் புரிந்து கொண்ட அவன், அவளைப் பற்றி ஒரு நொடியில் ஏதேதோ எண்ணிக் குழம்பி விட்டோமே என்று தன்னையே நொந்து கொண்டான்.

''சரி; கலைஞரின் பொன்னான தனிமையில் இனியும் நான் குறுக்கிட்டுக் கொண்டிருக்க விரும்பவில்லை. போய் வருகிறேன்'' என்று விறைப்பாகக் கூறியவாறு குளத்துப் படிகளின் மேல் விரைந்து ஏறினாள் உத்தமசீலி.

''இளவரசி!''.

அவள் சட்டென்று நின்றாள். அவனைத் திரும்பிப் பார்க்காமலே தலை குனிந்து நின்றாள் அவள்.

''என் பொருட்டு இளவரசியார் இங்கிருந்து போக வேண்டியதில்லை. அவரது உல்லாசத் தனிமையில் குறுக்கிட்ட நானே முதலில் புறப்பட்டாக வேண்டும். போய் வருகிறேன்.''

விருட்டென்று திரும்பிய உத்தமசீலி அவனை எரித்து விடுபவள்போல விழித்துப் பார்த்துக் கொண்டே குளத்துக் கரை மேட்டிலிருந்து மளமளவெனக் கீழிறங்கி ஓடி, நீர்ப்பரப்பின் விளிப்

போரப் படியில் பொத்தென்று உட்கார்ந்து கொண்டாள்.

பரமேசுவர வர்மனுக்கு ஒன்றும் புரியவில்லை. வியப்பும் திகைப்புமாக அவளைத் திருதிருவெனப் பார்த்துக் கொண்டு நின்றான். அவன் மனம் வேகமாக அடித்துக் கொண்டது. உடலோ நிலை கொள்ளாமல் பதறித் துடித்தது. அங்கிருந்து போய்விட எண்ணி அவசரமாக இரண்டொரு படிகளில் ஏறினான். அவனையறியாமலே அவனுடைய கால்கள் மறுக்களித்துக் கொண்டன. அவன் அவளைத் திரும்பிப் பார்த்தான்.

நீலப் படுதாவாக விரிந்திருந்த நீர்ப் பரப்பின் ஓரம் தண்டு வளைந்த தாமரை மொக்குப்போல் தலை குனிந்து அமர்ந்திருந்தாள் உத்தமசீலி. அந்த நிலையிலே அவள்தான் என்ன அழகாகக் காட்சி அளிக்கிறாள்!

பிரமித்து விட்டான் பரமேசுவர வர்மன். அவளை ஒரு மானிடப் பெண்ணாகவே அவனால் நம்ப முடியவில்லை. வானுலகின் சௌந்தர்யங்களை யெல்லாம் வாரிச் சுமந்து கொண்டு வந்து அவற்றைப் பூவுலகில் கவிதைகளாகப் பாடித் தீர்த்துவிட உட்கார்ந்திருக்கும் ஒரு தேவ கலை மங்கையாகவே அவனுக்குத் தோற்றமளித்தாள். அழகின் எல்லையைத் தரிசித்த ஆனந்தம் அவன் கண்களின் ஒளியை மழுக்கியது. உடலின் பளுவைக் குறைத்தது. அவனை உணர்ச்சிப் பிழம்பாகவே ஆக்கிவிட்டது.

அவன் தன்னை மறந்தான். சுற்றுப்புறச் சூழலையையும் மறந்தான். கரையில் பிடித்துப் போட்ட கெண்டை மீன் துள்ளித் தாவி நீரில் குதிக்க முயல்வது போல் ஒவ்வொரு படியாகக் கீழே இறங்கினான். வில்லாக வளைந்து தாழ்ந்திருந்த ஆத்தி மரக் கிளையை அணைத்துப் பற்றிக் கொண்டே நித்திரையில் நடப்பவன் போல் நடந்தான். அவனுக்கு முன்னால் அவனுடைய நிழல் இறங்கிச் சென்றது. படிப் படியாக மடிந்து தவழ்ந்து கொண்டு போன அந்த நீண்ட நிழல், அங்கே கந்தர்வப் பதுமைபோல் அமர்ந்திருந்த உத்தமசீலியின் முதுகுப் புறத்தை மெல்லத் தொட்டது. அப்படி அவளைத் தொட்டதிலே அந்த நிழலுக்கும் ஏதோ ஓர் இன்பக் கிறக்கம் ஏற்பட்டிருக்க வேண்டும் — அவளது பூப்போன்ற புற முதுகில் ஒரு கணம் அயர்ந்து கிடந்த பின் மெல்ல உயிர்ப்படைந்து அவளைக் கடந்து சென்று, பளிங்குப் பாளமாக விரிந்திருந்த நீர்ப் பரப்பில் தலை சாய்த்துப் படுத்துக் கொண்டது.

மலர்ந்த இரு செந்தாமரை மலர்களுக்கு நடுவிலே குவிந்த குமுதப் பூவொன்று குவிந்து நிற்பதுபோல் துக்கத்தால் வெளுத்திருந்த தன் முகத்தைச் சிவந்த கைத் தலங்களிலே ஏந்திக் கொண்டு ஓவியப் பாவையாய் அமர்ந்திருந்த உத்தமசீலி, நீர்ப் பரப்பில் வந்து சாய்ந்த அந்த நிழலைக் கண்டு திடுக்குற்று நிமிர்ந்தாள்.

''இளவரசி!''

அவள் அப்படி இப்படித் திரும்பவில்லை. நீரிலே கிடந்து மிதக்கும் அந்த நிழலையே இமைக்காமல் நோக்கினாள்.

''இளவரசியார் என்மீது கோபமாக இருக்கிறார் என்று நினைக்கிறேன். தவறாக ஏதேனும் சொல்லியிருந்தால் மன்னிக்க வேண்டுகிறேன்.''

அவள் உடல் சிலிர்த்தது. பின்னாலிருந்து ஒரு நீண்ட பெருமூச்சொலி எழுந்தது. அவ்வொலியை உள்வாங்கிக் கொண்ட அவளது அழகிய சிறு செவிகள் நாகலிங்க மலரிதழ் போல் சிவந்தன.

''பிறரின் மனங்களை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால் என் மனத்தைப் பிறருக்குப் புரிய வைக்க மட்டும் எனக்குத் தெரிவதில்லை. என்னுடைய தோல்விகளுக்கும் துயரங்களுக்கும் இதுவே காரணம்.''

அவள் உறைந்த பனிச் சிலையாக உட்கார்ந்திருந்தாள். அவளது பூவுடல் மட்டும் அடங்கி யொடுங்கிக் குறுகிப் போய்க் கொண்டே இருந்தது.

ஆழ்ந்த அமைதியில் சில விநாடிகள் அமிழ்ந்து மறைந்தன.

''இலவந்திகைப் பள்ளியிலிருந்து வெளியே வரும்போது என் இதயம் ஒரு பொற் சிறையில் போய்ப் புகுந்து கொண்டது. அதுமுதல் இதுவரை நான் வெறும் மனிதனாகவே இருக்கிறேன். இனியும் இப்படியே இருப்பேன். இதைச் சொல்லிவிட்டுப் போகவே இங்கு வந்தேன்.''

நீர்ப் பரப்பில் நீண்டு கிடந்த நிழல் மெல்லப் பின்னால் நழுவத் தொடங்கியது. உருக்கி வார்த்த ஒண்பொற் சிலை போல் உட்கார்ந்திருந்த உத்தமசீலி பதறித் துடித்து எழுந்தாள். அதே சமயம், அவனுக்குப் பின்னால் ஆத்தி மரக் கிளையைப் பற்றிக் கொண்டு நின்ற பரமேசுவர வர்மன் அமைதியாகத் திரும்பி ஒவ்வொரு படியாகக் கடந்து மேலேறிக் கொண்டிருந்தான்.

அவளுக்கு எங்கிருந்துதான் அத்தனை உற்சாக வீறு வந்ததோ தெரியவில்லை. புள்ளி மானெனத் துள்ளிக் குதித்துத் தாவியோடிய அவள், அவனை வழி மறித்து நிறுத்துவது போல் எதிரே சென்று நின்றாள்.

அண்ணாந்த நிலையில் நின்ற பரமேசுவரவர்மன் அவளை மென்மையாக ஏறிட்டு நோக்கினான். அவளும் தன்

அன்னை பாரதம் குலையாதிருக்க ஆயுதம் வாங்க ஆபரணம் தாரீர்



ஹ்யூலெட்ஸ் மிக்சர்



அஜீரணத்தை விரைவில் அகற்றுகிறது

உங்கள் உழைப்பு சிரமமிக்கது. குடும்பப் பொறுப்புகள் ஒரு பக்கம்; குழந்தைகளின் பராமரிப்பு ஒரு பக்கம். உங்கள் அலுவல்கள் மிகவும் சிரமமானதுதான். இவ்வாறிருக்க, அஜீரணத்தினால் அடிக்கடி தொந்தரவேற்பட்டால் மிகவும் கஷ்டமல்லவா? ஆனால் நீங்கள் அவ்வாறு கஷ்டப்பட வேண்டியதில்லை. ஹ்யூலெட்ஸ் மிக்சர் வயிற்று உபாதையை விரைவில் போக்கி, நிரந்தரமாக குணமளிக்கிறது; வயிறுண்டாகும் அமிலங்களை அகற்றி, ஜீரணகோசத்திற்கு அதன் வேலையை சரிவர செய்வதற்கேற்ப பாதுகாப்பளிக்கிறது.

ஹ்யூலெட்ஸ் மிக்சர் குழந்தைகளின் வயிற்றுக் கோளாறுகளுக்கும் கூட உத்தமமானது. வயிற்றுப் போக்குக்கு அபின் சேர்த்த ஹ்யூலெட்ஸ் மிக்சர் குணமளிக்கும்.

ஹ்யூலெட்ஸ் மிக்சர் ஜீரணத்திற்கு சிறந்தது

C. J. ஹ்யூலெட் & ஸன் (இந்தியா) பிரைவேட் லிமிடெட்

86/A, அங்கப்ப நாயக் தெரு, மதராஸ்-3

JWT/CJH/1930

கவிதை மழை பொழியும் கண் மலர்களை உயர்த்தி அவனைப் பார்த்தாள்.

இன்பச் சங்கமமிட்ட ஈரிரு விழிகள் அங்கே ஒரு கிருத யுகத்தை எழுப்பித் தூக்கின!

ஒய்யார ஒயிலுடன் ஒசிந்து நின்ற உத்தமசீலி கையிரண்டையும் துவளத் தொங்கப்போட்டு விரல்களைப் புறமாகப் பின்னிக் கொண்டு மையல் ரசம் வழிய அவனைப் பார்த்து மந்தகாசப் புன்முறுவல் பூத்தாள். இளமை கொழிக்கும் அவளது மலர் மேனி குங்குமம் பொதிந்த பளிங்குபோல் சிவப்பேறிப் பளபளத்தது.

அவள் மெல்லச் சிரித்தாள்; வேய்ங்குழலின் இன்னொலி! அவள் மீண்டும் சிரித்தாள்; மகர யாழின் தேனோசை! அவள் மேலும் சிரித்தாள்; கந்தர்வ வீணையின் தேவ கானம்!

சட்டென்று தன் சிரிப்பை நிறுத்திய அவள் இன்னும் ஒரு படி மேலேறி நின்று அவனைக் குறும்பாகக் கூர்ந்து நோக்கினாள்.

''ஓவியக் கலைஞரிடம் ஒரு விஷயத்தைக் கூற விரும்புகிறேன்.''

பரவச நிலையிலே நின்று கொண்டிருந்த பரமேசுவரவர்மன் மெல்லக் கண் திறந்தான்.

''குகையிலிருந்து வெளிப்படும் புலியைப் போல, கட்டவிழ்த்துக் கொண்டு பாயும் காளையைப் போல, மதர்ப்படைந்து திமிறியோடும் காளையைப் போல, கூட்டை விட்டுப் பறந்து செல்லும் இராஜாளியைப் போல, ஓவியக் கலைஞராக ஒடுங்கி யிருக்கும் நீங்களும் விரைவிலே உண்மை வடிவெடுத்து என் முன் காட்சி யளிக்க வேண்டும்—இதுவே என் விருப்பம்!''—சடாரென்று திரும்பிய உத்தமசீலி, சாலையின் தொலைதூரத்தில் நிறுத்தி வைத்திருந்த சிவிகையை நோக்கிச் சரசரவென்று வேகமாக நடக்கலானாள்.

மின்னற் கொடிகளால் சுற்றி வளைக்கப்பட்டவன் போல் அதிர்ச்சியுற்று நிமிர்ந்தான் பரமேசுவரவர்மன்.

உத்தமசீலி எங்கே? அதோ, தோகை துவண்டு புரள நடந்து செல்லும் வெண் மயில் போல் வெகு தூரத்துக்கு அப்பால் போய்க் கொண்டிருக்கிறாள்!

அவள் மறையும் வரையில் அங்கேயே நின்று அவளையே பார்த்துக் கொண்டிருந்த பரமேசுவர வர்மன் ஓங்கிப் பெருமூச்சு விட்டவாறு திரும்பி ஜிநாலயத்துக்குப் பின்புறமாகச் சென்ற ஒரு கொடிப் பாதையில் இறங்கி நடந்தான்.

பழைமையான அந்த ஜிநாலயத்தின் வலப் பக்கவாட்டில் பரிவாரத் தெய்வங்களில் ஒன்றான பிரம்மயட்சன் (ஐயனார்) சிலையொன்று பாங்குற நிறுத்தப் பெற்றிருந்தது. யானையை வாகனமாகக் கொண்டு விளங்கிய அந்தச் சமண ஐயனார் சிலையைச் சமீபித்து வந்துகொண்டிருந்த பரமேசுவரவர்மன் ஏதோ பேச்சுக் குரல் கேட்டுச் சுற்றுமுற்றும் பார்த்தான். பிரம்மயட்சன் விக்கிரகத்துக்கு மறுபுறத்தில் யாரோ இருவர் உட்கார்ந்திருப்பது தெரிந்தது.

தயங்கி நின்ற அவன் ஓசையின்றி நடந்து போய் அந்தச் சிலையின் பின்புறம் மறைந்து நின்று கொண்டு யானை வாகனத்தின் காலிடுக்கு வழியே மறு பக்கம் எட்டிப் பார்த்தான்.

அங்கே, கண்ணீரும் கம்பலையுமாக வாடித் துவண்டு உட்கார்ந்திருந்தான் கோவிந்த வர்மன். அவனுக்குச் சற்று அப்பால், கவலையே உருவாகக் கறுத்துச் சோர்ந்து அமர்ந்திருந்தார் பெரும் பிடுகு முத்தரையர்.

அத்தியாயம் நாற்பத்தெட்டு

அவனுக்கு வந்த ஆவேசம்

நெடுந்தூரப் பயணம் செய்துவந்த களைப்புடன் ஒருக்களித்துக் காலை நீட்டி உட்கார்ந்திருந்த பெரும்பிடுகு முத்தரையர், ''எங்கே, இளங்காரி இன்னும் வரக் காணோம்? இதோ இருக்கும் ஆலம்பாக்கத்துக்குப் போய் வர இவ்வளவு நேரமா?'' என்று தமக்குள் மெல்ல முணுமுணுத்தார். பிறகு கோவிந்த வர்மனின் பக்கம் திரும்பி, ''இளவரசே! என்ன இது சிறு பிள்ளைத் தனம்? எத்தனை நாட்களுக்குத்தான் இப்படிக் கண்ணீர் விட்டுப் புலம்பிக் கொண்டிருப்பீர்கள்? நான் சொல்வதைக் கேளுங்கள்: அவள் எங்கேயும் போயிருக்க மாட்டாள். அவளுக்கு எத்தகைய இடர்ப்பாடும் நேர்ந்திருக்காது. அநந்தமதி அவளுடன் இருப்பதால்தான் இப்படிச் சொல்கிறேன். என் பேச்சை நம்புங்கள். இன்னும் கொஞ்ச நேரத்தில் நல்ல சேதியோடு வந்துவிடுவான் இளங்காரிக்குடையான். அது வரையிலுமாவது கண்ணீர் சொரியாமல் பொறுத்திருங்கள்'' என்றார் பரிவு கலந்த கண்டிப்புக் குரலில்.

குளிர் காய்பவன் போல் முட்டிக் கால்களைக் கட்டிக் கொண்டு முகத்தைப்

புதைத்தவாறு உட்கார்ந்திருந்த கோவிந்த வர்மன் உடல் குலுங்கப் பொருமினான்.

இதைக் கண்ட முத்தரையருக்குச் சினம் பொங்கிவிட்டது. "ஹூம்! வீர பல்லவ குலத்தில் பிறந்த அண்ணனும் தம்பியும் இத்தனை வடித்தெடுத்த கோழைகளாகவா இருக்க வேண்டும்? வெட்கம்! வெட்கம்!"

வெடுக்கென்று தலை தூக்கிய கோவிந்தவர்மன் "நான் இப்போது வருந்திக் கண் கலங்குவது அவனுக்காக இல்லை, ஐயா! எதிரிகளின் இருப்பிடமான இலவந்திகைப்பள்ளிக்குத் தன்னந் தனியே போன என் தமையனார் இன்னமும் திரும்பி வராமல் இருப்பதை எண்ணித்தான் மனம் பொருமிக் கொண்டிருக்கிறேன்!" என்றான்.

முத்தரையரின் முகம் கறுவடைந்து சிறுத்தது. ஓங்கிப் பெருமூச்சு விட்டுத் தலை குனிந்தார் அவர்.

"நான் அப்போதே சொன்னேன் அந்தச் சேதியக் கவிஞரை நம்ப வேண்டாம் என்று; கேட்டீர்களா? அந்த மனிதர் ஏதோ ஒரு துரோக எண்ணத்துடன்தான் பல்லவ மன்னரைத் தம் இல்லத்திலிருந்து வெளியேற்றிச் சளுக்கியத் தளபதியிடம் அனுப்பி வைத்திருக்கிறார். நீங்களும் அவர் பேச்சுக்கு உடன்பட்டு விட்டதுதான் எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது!" என்று ஆத்திரம் குமுறக் கூவினான் கோவிந்தவர்மன்.

"அவசரப்பட வேண்டாம், இளவரசே! நம் மன்னருக்கு ஆபத்து ஒன்றும் நேர்ந்திருக்காது என்று இன்னமும் நான் நிச்சயமாக நம்புகிறேன்" என்றார் முத்தரையர் தழுத்த குரலில்.

"இலவந்திகைப் பள்ளியிலிருந்து, அவர் வெளியே வந்துவிட்டார் என்று ஆபத்துதவி சம்புவராயன் சொன்னதைக் கேட்டு இப்படி மனப்பால் குடிக்கிறீர்களா? அவர் தான் தம்மையே ஓவியமாக வரைந்து கொடுத்துவிட்டு வந்தாராமே! அந்த ஓவியத்தைப் பார்க்கும் வில்வேலி, அவரைப் பின் தொடர்ந்து வந்து பிடித்துக் கொண்டு போக எவ்வளவு நேரம் ஆகும்? எல்லாம் நடந்தே முடிந்து விட்டிருக்கும்!"

முத்தரையர் இதற்குப் பதில் ஏதும் சொல்லாமல் மௌனமாயிருந்தார்.

கோவிந்த வர்மன் மீண்டும் கண் கலங்கிப் பொருமினான். சற்று நேரம் கழித்து முகத்தைத் துடைத்துக் கொண்டு நிமிர்ந்த அவன் சந்திரலேகைச் சிற்றரசரைத் தயக்கத்துடன் பார்த்து, "ஏனய்யா! என் இளங்கோப்பிச்சிக்கு ஆபத்து ஒன்றும் நேர்ந்திருக்காது என்று சொல்கிறீர்கள்? அதில் சந்தேகமில்லையே?" என்றான்.

முத்தரையரின் முகத்தில் அலைப் புன்னகையொன்று தெளிந்து மறைந்தது. "பழையாறைச் சோழர் என்னிடம் பேசிய பேச்சுக்களிலிருந்து அப்படித்தான் ஊகிக்கிறேன்" என்றார்.

"சளுக்கிய மன்னனிடம் தாம் சேர்ந்து கொள்ளப் போவதாகத் தானே அவர் சொன்னார்? அதற்கும் இதற்கும் என்ன சம்பந்தம்?"

"நிறைய இருக்கிறது இளவரசே! பழையாறைச் சோழரின் அரசியல் முடிவுகளை மட்டும்தான் உங்களிடம் சொல்லியிருக்கிறேன். அவருடைய குடும்ப சம்பந்தமான இன்னொரு முக்கிய விஷயத்தை நான் இன்னமும் சொல்லவில்லை. அதைச் சொன்னால்?.."

"சொல்லுங்கள், ஐயா! அது என்ன அவருடைய குடும்ப விஷயம்?"

முத்தரையர் வாயை இறுக மூடிக் கொண்டு மௌனம் சாதித்தார்.

"ஏன் பேசாமல் இருக்கிறீர்கள்? சொல்லுங்கள் ஐயா!" என்று ஆவலுடன் கேட்டுக்கொண்டே அவரருகில் நெருங்கி வந்தான் கோவிந்த வர்மன்.

"இளவரசே! இனி நீங்கள் அந்தச் சோழ இளவரசி இளங்கோப்பிச்சியை மறந்துவிட வேண்டும்; மறந்தே ஆக வேண்டும்" என்றார் முத்தரையர்.

கோவிந்த வர்மன் இதைக் கேட்டுக் கடகடவென நகைத்தான். "என்ன ஐயா! சமய சந்தர்ப்பம் பார்க்காமல் இல்வேரல் செய்கிறீர்கள்! யாரை யார் மறப்பது? உயிரை உயிர் மறக்குமா?"

"மறக்காது — மறக்க முடியாது—என்பது எனக்குத் தெரியும்; பழையாறைச் சோழருக்கு அது தெரியவில்லையே!"

அரக்கப் பரக்க விழித்த கோவிந்த வர்மன், "ஐயா! நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?" என்றான் நடுக்கத்துடன்.

முத்தரையரின் கண்கள் நசுங்கிய நாவல் பழம்போல் சிவந்து கலங்கின. அவர் அடித் தொண்டையில் வெகு நிதானமாகச் சொன்னார்: "இனத் துரோகியாகி விட்ட பழையாறைச் சோழர் தம் அருமைக் குமாரி இளங்கோப்பிச்சியைச் சளுக்கிய விக்கிரமாதித்தனின் மைந்தனான விநயாதித்தனுக்கு மணம் செய்து தருவதாகக் கூறி அதற்கு ஒப்புதல் ஓலையும் எழுதி அனுப்பிவிட்டார்."

"என் இளங்கோப் பிச்சி இன்னொருவனை மணப்பதா? அதை உங்கள் வாயால் என்னிடம் சொல்வதா?" என்று பயங்கர உறுமலுடன் துள்ளிக் குதித்தெழுந்த கோவிந்த வர்மன் தன் இடையில் தொங்கிய நீண்ட வாளைப் பளீரென உருவிக் கரகரவெனச் சுழற்றிக் கொண்டே முத்தரையரை நோக்கிப் பாய்ந்தான். (தொடரும்)

லிப்டன்

LAOJEE

லாவோஜி டீ


சிக்கனத்தின் சின்னம் சிறப்பின் சிகரம்



குளிர்காலத்திலே...

'கெப்ளர்'

'ஏ' 'டி' இணையற்றது





குளிர்காலத்தில் பரவும் தொத்துநோய்களுக்குக் குடும்பத்திலுள்ளோர் – குறிப்பாகக் குழந்தைகள் – ஆளாவது இயற்கை. நோயை எதிர்க்கும் திடமான சக்தியை அவர்களிடம் வளர்க்க அவர்களுக்கு அளியுங்கள் 'கெப்ளர்' – ஷார்க் லிவர் ஆயிலோடு கூடிய மால்ட்.

''கெப்ளர்'' – ஷார்க் லிவர் ஆயில் மற்றும் விடமின்கள் 'ஏ'யும் 'டி'யும் கலந்த ருசியான, சத்துச் செறிந்த டானிக். குடும்பத்தினர் அனைவருடைய தேவை அது! உடலைப் பலப்படுத்தி, நோய் எதிர்ப்புச் சக்தியைப் பெருக்குகிறது. பிணியாறும் நிலையிலுள்ளோருக்கு மிக உகந்தது.

ஒரு பர்ரோஸ் வெல்கம் தயாரிப்பு



8. '.......................ஒலியின் இடிமுழங்கும் பின்னே - மின்னலொளி பறிக்கும் முன்னே!

'யானை வரும் பின்னே; மணியோசை வரும் முன்னே' என்று ஒரு பழமொழியைக் கேட்டிருக்கிறோம். இது என்ன ஒரு புது மொழியாய்க் கட்டுரையின் தலைப்பு அமைந்திருக்கிறதே என்கிறீர்களா?

குறளுக்குப் போட்டியாகக் குறள் எழுதினாராம் ஒரு திவான்பகதூர். கூழுக்கு மாங்காய் தோற்குமா என்ற விருப்புடன் நானும் இந்தப் புதுமொழியை எழுதினேன், பழமொழிக்குப் போட்டியாக.

ஒலியின் மித்யா யோகத்தால் — இடிரென்று ஏற்படும் அதிர்ச்சி — அதையே தொடர்ந்து அனுபவிக்கும் காரணத்தால், ஏற்படும் இன்னல்களை ஒருவாறு சொல்லியாயிற்று. அவ்வித இன்னல்கள் மக்களுக்கு ஏற்படாதிருக்க மேல் நாடுகளில் எடுக்கப்படும் தடுப்பு முறைகளைப் பற்றியும் சொல்லியாயிற்று. நம் நாட்டிலும் அவ்வித தடுப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்படுவது இன்று மிகவும் அவசியம் என்பதை விளக்கியாயிற்று. விரைவில் இவ்வகை முயற்சிகளைச் சம்பந்தப்பட்டவர் எடுத்துக் கொள்வார்களா என்று எம்முள் எழும் ஆவலையும் தெரிவித்தாயிற்று.

அவ்விதமே ஒளியின் மித்யாயோகத்தாலும் மிகவும் பயங்கரமான இன்னல்கள் விளையும் என்பதை விளக்க விருப்பம்.

இப்போது 'மித்யா யோகம்' என்ற ஒரு சொல்லை உபயோகித்திருப்பதால் அச்சொல்லின் பொருள் என்ன என்று விளக்க வேண்டுமல்லவா? ஓர் இந்திரியம் அல்லது புலனுக்கும் அதன் அர்த்தம் அல்லது விஷயத்துக்கும் ஏற்படும் தொடர்பை 'யோகம்' என்பர். கண்ணினால் ஒரு ரூபத்தைக் காண்கிறோம். கண் என்பது இந்திரியம். ரூபம் என்பது அதன் விஷயம். இவ்விரண்டுக்கும் ஒரு தொடர்பு ஏற்பட்டால் தானே காணும் பொருளைப் பற்றிய அறிவு நமக்கு ஏற்படும்? கண்ணை மூடிக்கொண்டுவிடுகிறோம். கண் என்னும் இந்திரியத்துக்கும் அதன் விஷயமான ரூபத்துக்குமுள்ள தொடர்பு துண்டிக்கப்படுகிறது. அப்போது அந்தப் பொருளைக் காண முடிவதில்லை. ஆகவே அதன் அறிவும் ஏற்படுவதில்லை. ஆகவே ஓர் அறிவு ஏற்பட வேண்டுமாயின் அதற்குச் சம்பந்தப்பட்ட புலனுக்கும் அதன் விஷயத்துக்கும் தொடர்பு வேண்டும். இதைத்தான் யோகம் என்பர். இத்தொடர்பு நன்முறையிலும் அளவோடும் ஏற்படுமாயின், அதை சம்யக் யோகமென்பர். நன்முறையில் அமர்ந்த தொடர்பு எனலாம். இதனால் நல்லறிவு அளவோடும் ஏற்படுகிறது.

இவ்விதத் தொடர்பு அளவுக்கு மீறி மட்டும் ஏற்படுமாயின் அதை அதியோகம் என்பர். அளவுக்கு மிஞ்சினால் அமிருதமும் விஷமாகும் என்றபடி இந்த அதியோகத்தால் இன்னல்தான் விளையும்.

நல்லதைக் காணவே வாய்ப்பில்லாத நிலையில் என்ன ஏற்படும்? அந்தக் காட்சிக்கும் கண்ணுக்கும் தொடர்பே இல்லாத நிலைதான். இதை என்ன என்று அழைப்பது? அப்படி ஓர் இந்திரியத்துக்கும் அதன் விஷயத்துக்கும் தொடர்பு அறவே இல்லாமல் போவதையும், அவ்விதமே, மிக அபூர்வமாக என்றைக்காவது ஒரு நாள் அத்தி பூத்தாற்போல் தொடர்பு ஏற்படுமாயினும், அதை ஹீனயோகம் என்பர்.

''அம்மா!'' என்றான் ஸுதாமா. ஸாந்தீபனி மஹரிஷியிடம் குருகுல வாசத்தில் ஸ்ரீ கிருஷ்ணனுடன் சேர்ந்து படித்துக் கொண்டிருந்தான். அப்போது ஒரு நாள் நடந்த நிகழ்ச்சி இது. ''அம்மா! பாலும் சோறும் என்றால் என்னம்மா?'' என்று கேட்டான்.

''நாம் நமது வீட்டில் வெந்நீரும் சோறும் சாப்பிடுகிறோமல்லவா! அதுபோல் பாலும் சோறும் கலந்து சாப்பிட்டால் அதைப் பாலும் சோறும் என்பார்கள். இன்று ஏனப்பா அதைக் கேட்கிறாய்?'' என்றாள் அவ்வன்னை.

''இல்லேம்மா. என் தோழன் ஸ்ரீ கிருஷ்ணன் வீட்டில் தினந்தோறும் அவனுக்குப் பாலும் சோறுந்தான் கொடுக்கிறார்களாம். நான் அதை உண்டதே கிடையாதே? அது எப்படி இருக்கும் என்று அறிய வேண்டித் தான் கேட்டேன்'' என்றான் ஸுதாமா.

இதைக் கேட்ட அவ்வன்னைக்குத் தன் மகனுக்கு ஒரு பிடி பாலும் சோறும் கொடுக்கத் தனக்கு முடியாதே என்று உள்ளூற ஒரு மனக் குறைதான். ஆனால் அதைத் தன் மகனிடம் சொல்லி அவன் மனக் குறையை வளர்க்கக் கூடாதென்று தீர்மானித்தாள்.

''ஐயோ, பாவம்! உன் தோழன் ஸ்ரீ கிருஷ்ணனுக்கு எனது அனுதாபங்கள். உப்புச் சப்பில்லாத அந்தப் பாலுஞ் சோற்றை எத்தனை நாட்கள்தான் அவன் உண்பது! அவனுக்கு அலுப்புத் தட்டி விட்டது; நாக்குக்கு உப்பும் சத்துமான ஆகாரம் வேணுமென்று.''

''நமக்கு மட்டும் ஏன் இந்த வெந்நீருஞ் சோறும் தினந்தோறும் சாப்பிட்டும் அலுப்புத் தட்டவில்லை?''

''நாம் உண்பது உப்பும் சத்துமுள்ள உயர்ந்த ஆகாரம்....''

''அதெப்படியம்மா சொல்ல முடியும்?''

''நமக்கு இவ்வாகாரத்தில் அலுப்போ, வெறுப்போ தட்டுவதில்லையே! ஸ்ரீ கிருஷ்ணன் தனக்குத் தினமும் பாலுஞ் சோறுந்தான்



கிடைக்கிறதென்று குறைப்பட்டுக் கொள்வது போல் நமக்கு யாருக்காவது மனக் குறைவு ஏற்பட்டதுண்டா? இல்லையே! ஆகவேதான் நான் ஸ்ரீ கிருஷ்ணனுக்கு என் அனுதாபங்கள் என்றேன்'' என்றாள் அன்னை.

''அம்மா! அப்பா யாரால் நம்ம வீட்டு உப்பும் சத்துமான அலுப்பே தட்டாத, ஆகாரத்தை ஒரு நாள் கிருஷ்ணனுக்குப் படைப்போமா?''

அன்னைக்கு மனத்தில் 'திக்' என்றது. ஆனால் அதை வெளிக்குக் காட்டிக் கொள்ள வில்லை. ஆகவே அவள் ''அதென்ன பெரிய விஷயமப்பா? ஒரு நாளென்ன தினந்தோறும் படைக்கலாம்'' என்றாள். இதன் உட் பொருள் ஸுதாமாவுக்குப் புரியவில்லை.

''நாளைக்கு....'' இதற்குள் அன்னை இடை மறித்து, ''நாளைக்கு நான் கொஞ்சம் அவல் தருகிறேன். அதை நீ பள்ளிக்குப் போகும் போது எடுத்துச் செல். பள்ளியில் ஓழிவு உள்ள போது ஸ்ரீ கிருஷ்ணனுக்கும் அதில் கொடுத்து நீயும் சாப்பிடு'' என்றாள்.

மறுநாள் அவ்விதமே கொடுத்தனுப்பினாள். ஸ்ரீ கிருஷ்ணனும் இந்த அவலை ஸுதாமா வுக்குக்கூட உண்டோ இல்லையோ என்றபடி அவனுடன் ஏற்றுப் புசித்தான்; ருசித்தான்.

இப்படியொரு கதை. உண்மை ஏதோ எப்படியோ — ஹீனயோகம் என்றால் என்ன வென்பது இப்போது விளங்குகிறதல்லவா? ஸுதாமாவுக்குப் பாலுஞ் சோற்றுடன் ஏற் பட்டது ஹீனயோகம். ஸ்ரீகிருஷ்ணனுக்குப் பாலுஞ் சோற்றுடன் அதியோகம். அவனு டன் ஹீனயோகம். (உதாரணம் முற்றும் பொருத்தமானதல்ல. பெரியோர் பொறுத் தருளவும்) இவ்விரு வகை யோகங்களாலும் ஓரளவாவது குறைபாடுகள் உடலுக்கோ, மனத்துக்கோ, இரண்டுக்குமோ ஏற்படலாம்.

மித்யா யோகம் என்பது இதற்கெல்லாம் மாறுபட்டது. பழக்கமில்லாத வகையில் இந்திரியத்துக்கும் அதன் விஷயத்துக்கும் ஏற் படும் தொடர்பாகும். இதனால் மிக பயங்கர மான இன்னல்கள் விளையும். இது ஏற்படாம லிருக்கப் பெரு முயற்சி எடுத்தாக வேண்டும்.

ஃ கண்ணினால் மிக மிகச் சூட்சுமமான பொரு ளைப் பார்ப்பது.

[உடனே பார்வையையும் வேறுபுறம் திருப்பினாலும், தலையை நிமிர்ந்தாலும் கண் இருளும், தலை சுற்றும்.]

ஃ கண்ணைப் பறிக்குமளவு வெளிச்சத் தைக் காண்பது...

[நகரங்களில் இரவில் மோட்டார் களின் விளக்கொளியினால் நாம் தினந் தோறும் பல்வேறு முறை அனுபவித்து வரும் — ஆயினும் எப்படியோ தப்பி உயிர் பிழைத்திருக்கும் அனுபவத்தை எண்ணிப் பாருங்கள்! இந்த விளக் கொளியை இமைக்கும் நேரம் கண்டால் போதும். பிறகு கண்ணே தெரிவதில்லை. தலை சுற்றத் தொடங்கி விடுகிறது. தட் டுத் தடுமாறிக் கொண்டு — கால் போன போக்கில் ஒதுங்குகிறோம். இதில் ஒரு பரிதாபக் காட்சியும் ஹாஸ்யச் சுவை யும் கூடியிருக்கும்.]

ஃ பயங்கரமான காட்சியைக் காண்பது.

[பொழுது போக்குக்காகத் திரைப்படம் காணச் செல்லும் போது குழந்தைகளை யும் அழைத்துச் செல்கிறோம். பூதங்கள் வருவது — மர்மக் கொலை நடப்பது போன்ற காட்சிகள் வரும் போது—அதற் கான பின்னணி ஒலியும் சேர்ந்தால்— குழந்தைகள் பயந்து வீறிட்டு அழத் தொடங்கும். பயங்கரக் காட்சிக்கு இது உதாரணம். இன்னும் இதே விதமான பயங்கரமான காட்சிகளுண்டு. அவற் றைக் காணும்போது.........?]

ஃ மிகவும் அருகில் இருப்பதைக் கண்ணை இடுக்கிக் கொண்டும், முகத்தைச் சுளித்துக் கொண்டும் மிகச் சிரமத் துடன் பார்ப்பது.

[தலையில் உள்ள ஈர், பேன்களை எடுக் கிறேன் என்ற வியாஜ்யத்தில் நம்முள் சிலர் புரியும் செயலை இதற்கு உதாரண மாகச் சொல்லலாம். இதனால் கண்க ளுக்கு எத்தனையோ இன்னல் ஏற்படும்.]

ஃ தொலைதூரத்தில் உள்ளதைக் காண்பது.

[மேற் சொன்னது போலவே கண்ணை இடுக்கிக் கொண்டும், முகத்தைச் சுளித் துக் கொண்டும், கையைப் புருவத்தின் மேல் வைத்து ஒளியை ஓரளவு மறைத் துக் கொண்டும், நகர்ந்தும் குனிந்தும் நிமிர்ந்தும் படாதபாடுபட்டுப் பார்க்கும் போது கண்ணுக்கு எத்தனை இன்னல்!]

ஃ வெறுக்கத் தக்கதை அல்லது வெறுப்பூட் டும் காட்சியைக் காண்பது. இயல் புக்கு மாறான (விகிருதியான) காட்சி களைக் காண்பது.

[இதற்கு உதாரணம் சொல்லி முடியாது. நகைச்சுவை என்ற எண்ணத்துடன் சட்டியை ஒருவன் தலை மேல் போட்டு உடைப்பது. உடைந்த சட்டியின் விளிம்பு அவன் கழுத்தில் மாட்டிக் கொள்ள — சட்டியிலிருந்த தோசை மாவு அவன் தலை மேல் விழுந்து முக மெல்லாம் ஒழுக — இவ்வித 'விகிருதி' யான காட்சிகளைக் காண்பது.]

காணும் கண்ணுக்கும் காணப்படும் காட் சிக்கும் ஏற்படும் தொடர்பின் மித்யாயோகத் துக்கு உதாரணமாக சாஸ்திரம் சொல்கிறது.

ஒளியின் வகையாகவும் நமது நரம்புகள் தசைகள், கிரந்திகள் ஆகியவற்றுக்கு ஒரே அதிர்ச்சியும், எழுச்சியும் ஏற்படவும், அத னால் கிரந்திகளின் சுரப்புக்கள் இயற்கைக்கு மாறுபட்ட வகையில் சரீரத்தில் ஏற்படவும் [ஒலியினால் விளையும் இன்னல்களைப் போலவே ஒளியினாலும்] பலப்பல இன்னல்கள் தாற் காலிகமாகவும் நிரந்தரமாகவும்கூட ஏற்பட இன்றைய நாகரிக வாழ்க்கையின் போக்கு அமைந்துள்ளது. ரத்த அமுக்கம், அதனால் தலை சுற்றல், மயக்கம், மார்பு படபடப்பு — பால்பிடேஷன் என்றெல்லாம் இன்று மலிந்து கிடக்கும் நோய்க்குத் தடுப்பு முயற்சியாக என்ன செய்யலாம்? ஜெட் விமான வேகத்தில் பெருகிவரும் நாகரிகத்தின் முற்போக்கைக் கட்டுப்படுத்த முயற்சி செய்ய வேண்டும்.




பீனிக்ஸ்
ஆடைகள்
நவ நாகரீகக்
குறியீடுகளில்
முதலிடம் பெறுகின்றன
வாயில்கள்
பாப்லின்கள்
ஸூட்டிங்குகள்
பினிக்ஸ் மில்ஸ்

கவரிமான்

கிருஷ்ணா

"அம்மா...."

"என்னடா செய்யறது ராஜா!..."

"ஒண்ணுமில்லே...."

"அப்போ பேசாமல் படுத்துக்கோ. சும்மா அலட்டாதே!.... அலட்டினால் உடம்பு அதிக மாயிடும்..."

பாயில் கிடந்த சிறுவன் முகத்தைச் சுளித்துக்கொண்டான்.

சில நிமிஷங்களே மௌனப் பேய் விழுங்கு கையில் அந்தத் தாயின் இதயத் துடிப்பே பெரும் பறைபோல் முழங்கியது. பயங்கரமான எண்ணங்கள்! துடிப்புக்கள்!

"அம்மா....!"

"என்னடா மறுபடியும்?"

"பழையதைப் போட்டு, உப்புப் போட்டு நெறையத் தயிர் விட்டு நாரத்தங்காய் ஊறுகாயும் வச்சுச் சாப்பிட்டால் நன்னாயிருக்கும் இல்லியா அம்மா...."

ஆர்வமும் ஏக்கமும் பொங்கக் கூறினான் ராஜா திக்கித் திணறிக் கொண்டே.

"நன்னாத்தான் இருக்கும். எல்லாம் உடம்பு குணமாகட்டும். அப்புறம் சாப்பிடலாம்....."

ராஜா சிணுங்கினான்.

"அம்மா! சூடா ரசம் சாதம் கரைச்சு அப்பளாம் பொரிச்சு, பருப்புத் துவையல் அரைச்சு...."

சேச்சம்மாவுக்குச் சற்று எரிச்சல்தான் வந்தது.

"ராஜா! சும்மா இரு அப்பா. அம்மாவுக்காகச் சும்மா இரு. நீ இப்படியெல்லாம் கேட்டாயானால் நான் அழுது விடுவேன்!" என்ற சேச்சி வேதனையுடன் தன் மகனின் தலையை வருடினாள்.

ராஜா வெறுப்புடன் அந்தப்புறமாகத் திரும்பிப் படுத்துக் கொண்டான். உன் ஞறக் கொதிப்பு அவனுக்கு. உப்பு, காரமாய் வாயில் ஒன்று போட்டு எவ்வளவு நாளாகி விட்டது?


ராஜா நன்றாக வாரி வளையச் சாப்பிடும் சிறுவன். அம்மா கையில் உருட்டிப் போடுகையில் — அதுவும் எரித்த கீரையும் நெல்லிக்காய் ஊறுகாயுமாகத் தொட்டுக் கொண்டு சாப்பிட ஆரம்பித்தானானால் எழுந்திருக்கவே மனம் வராது அவனுக்கு. மகன் சாப்பிடுவதைக் காண்பதைவிடத் தாயன்புக்குத் திருப்தியளிப்பது வேறு ஏது? வயிறு நிறைந்து ராஜா எழுந்தவுடன் சேச்சியின் மனம் முழுதும் நிறைந்து விடும். மீதம் இருப்பதை இரண்டு உருண்டைகளாக உருட்டி வாயில் போட்டுக் கொண்டு எழுந்து விடுவாள் அவள். தனக்கென்று தனியாக அவள் என்றுமே சமைத்துக் கொண்டதில்லை. எல்லாமே அருமைப் பிள்ளை ராஜாவுக்காகத்தான் —

ராஜா ஜுரமாகப் படுத்து இன்றோடு பதினைந்து நாட்களாகின்றன. இந்தப் பதினைந்து நாட்களாக அவனுக்கும் வேறு ஆகாரம் கிடையாது. ராஜாவுக்கென்று போடும் புழுங்கலரிசிக் கஞ்சியில் மிஞ்சியதை உப்பைப் போட்டுக் குடிப்பதோடு சரி.

எந்த வகையில் பார்த்தாலும் ராஜாவின் மேலுள்ள அன்பினாலும் சரி, பொருளாதாரமானாலும் சரி, தனக்கென்று அவளால் சமையல் செய்து கொள்ள முடியாது. எப்படி முடியும்? தன்னுடைய பொருளாதாரத்தை உயர்த்தி வாழ்க்கை வசதிகளைப் பெருக்கிக் கொள்ள, அவள் பள்ளிப் படிப்போ இதரப் பயிற்சிகளோ ஏதும் பெற்றவளல்ல. அவளாலானது கையை உழைத்துச் சாப்பிடுவது தான். அப்படி அவள் உழைப்புக்காக மட்டும் அவளுக்கு ஆதரவு கொடுத்த தெய்வம் வக்கீல் வேதாந்தத்தின் மனைவி கோதைதான்.

விடியற்காலை நாலரை மணிக்கே எழுந்து கிணற்றில் நாலு வாளித் தண்ணீர் இறைத்துக்






தலை வழியக் கொட்டிக் கொண்டு, மடியுடுத்தி நெற்றியில் பளிச்சென்று குங்குமம் துலங்க வக்கீல் வீட்டுக்குப் போனாளானால், அங்கே அவர் கோர்ட்டுக்குப் புறப்படும் வரை ஒரு பம்பர ஆட்டம் ஆட வேண்டியிருக்கும். வக்கீலின் மனைவி கோதைக்கு ஒவ்வொரு நாளைக்கு உடம்பின் ஒவ்வொரு பாகத்தில் வலி, குத்து. அல்லது குடைச்சல் எடுத்துவிடும்! நரம்பு நரம்பாய் ஒரு நாள் பிய்த்துக்

கொண்டு போகும் மற்றொரு நாள் முதுகில் பூரான் ஊர்வதுபோல் வலி எடுக்கும்! அப்படி ஒரு வியாதிப் பிரகிருதி. 'தானாகப் பாதி, தம்பிரானாகப் பாதி' என்று வியாதியைப் பிரபலமாக்கிப் பிரகடனப்படுத்திக் கொள்வது அம்மையாரின் அந்தஸ்துக்கேற்ற குண விசேஷங்களில் ஒன்று! ஆகவே கோதை கூப்பிட்ட குரலுக்கு என்னவென்று கேட்டு, ஆடி ஓடி லேகியங்களும், தைலங்களும், களிம்புகளும் வியாதிக்கு ஏற்றபடி எடுத்துக் கொடுப்பதிலிருந்து, வக்கீலுக்கு மிகவும் பிடித்தமான 'எலுமிச்சம் பழச் சாத்தமுது' சூடு ஆறாமல் பார்த்துக் கொள்வது வரையிலும் சேச்சம்மாள் தான்! ஆசாரம் தவறாமல் கவனித்துக் கொள்ள வேண்டும். இடையே கல்லூரி போகும் பையன்கள், பெண்கள், பிரசவத்துக்கு வந்திருக்கும் புஷ்பவல்லி, பள்ளிக்கூடம் போகும் அரை டிக்கெட்டுகள், இத்யாதி, இத்யாதி.

இவையெல்லாம் சேச்சம்மாவுக்கு ஒரு பிரமாதமான காரியம் அல்ல. உழைத்து உழைத்துச் சலிக்காத உடம்பு அவளுடையது. தப்பித் தவறிச் சில நிமிஷங்கள் சும்மா இருக்க நேர்ந்தாலும் அதையும் வீணாக்காமல் எதையும் இழுத்துப் போட்டுக் கொண்டு செய்யும் சுபாவம் அவளுடையது.

மனித சுபாவங்களில் பல விசித்திரங்கள் உண்டு. தம்மின் மெலியாரைக் கண்டு இரங்கிக் கண்ணீர் சிந்தி, தனக்கில்லாவிட்டாலும் பரவாயில்லை என்று ஈந்து மகிழும் குணம். தனக்குப் போகத் தானம் இடும் காரியக்காரக் குணம் கண்டு வேடிக்கை பார்த்து வியந்து பழிக்கும் குணம். எள்ளுவதோடு மட்டுமின்றி மெலியாரை நோகச் செய்தும் களிக்கும் குணம். வேதாந்தம் இதில் முதல் வகையைச் சேர்ந்தவராதலால் சேச்சம்மா அந்த வீட்டில் சுதந்திரமாகவும் நிரந்தரமாகவும் இருக்க முடிந்தது.



* * *

ராஜா ஒரு முறை புரண்டு படுத்தான்.

"என்ன ராஜா! கொஞ்சம் கஞ்சி சாப்பிடுகிறாயா அப்பா!"

சேச்சம்மா மெதுவாக அவனைத் தூக்கி உட்கார்த்தினாள்.

"கஞ்சியா?" என்று பரிதாபமாகப் பார்த்தான் குழந்தை.

"டாக்டர் சொன்னபடி கேட்கா விட்டால் அப்புறம் உனக்கு உடம்பு அதிகமாகி விடுமே ராஜா!"

"சரி!" என்றான் ராஜா வேண்டா வெறுப்பாக.

சேச்சம்மா எழுந்து கஞ்சியைச் சூடாக எடுத்து வந்தாள்.

தம்ளரில் அதை விட்டுக் கொஞ்சம் கொஞ்சமாக ஆற்றிக் கொடுத்தாள்.

''ஏனம்மா, நீ இரண்டு நாட்களாக எங்கிட்டேயே இருக்கியே.... வக்கீல் வீட்டுக்குப் போக வேண்டாமா?'' என்று கஞ்சியைக் குடித்தவாறே கேட்டான் ராஜா.

''போகணும்டா, இரண்டு நாட்களா உனக்கு ஜுரம் அதிகமாக இருந்ததோல்லியோ.... அதனாலே லீவு வாங்கி யிருந்தேன். நாளைக்குக் காலையில் போவேன்.''

''நான்கூடப் பள்ளிக்கூடம் போகணும். எவ்வளவு பாடம் நடந்ததோ? கிச்சு எல்லாத்திலேயும் நிறைய 'மார்க்' வாங்கியிருப்பான். நான் இருந்தால் வாங்க மாட்டான்.....''

சேச்சி தனக்குள் சிரித்து மகிழ்ந்தாள்; தன் மகனின் பெருமையைக் கண்டு. அவன் சொல்லிக் கொண்டது வெறும் தற்பெருமையல்ல. உண்மையிலேயே அவன்தான் வகுப்பில் முதல். கடமையிலும் அப்படித்தான்.

காலையிலே எழுந்து குளித்து விட்டுப் பாடங்களைப் படித்துக் கொண்டு முதல் நாள் பழையதை எடுத்துப் போட்டுச் சாப்பிட்டு விட்டு, அதையே கொஞ்சம் இடை வேளைக்கும் கட்டிக் கொண்டபின், தானாகவே தலை வாரி உடை மாற்றிக் கொண்டு, கதவையும், அக்கறையாகப் பூட்டியபின் பள்ளிக்கூடத்துக்குப் போவான். மாலையில் வந்ததும் நேராக வக்கீல் வீட்டுக்குப் போவான். அங்கே ஒரு 'கப்' காப்பி கிடைக்கும். திரும்பி வீட்டுக்கு வந்து விளையாட்டிலும் படிப்பிலுமாகப் பொழுதைக் கழித்துக் கொண்டிருக்கையில் இரவுச் சமையலை முடித்து விட்டுச் சேச்சி வந்து சேருவாள்.

அம்மாவின் மேல் ராஜாவுக்குக் கொள்ளை அன்பு. அவள் தனக்காகப் படும் சிரமங்களை ராஜாவின் சின்ன உள்ளம் நன்கு தெரிந்து வைத்திருந்தது.

ஃ ஃ ஃ

மறு நாள் காலையில் ராஜாவுக்கு உடம்பு கொஞ்சம் தேவலை. எத்தனை நாளைக்கு வேலைக்குப் போகாமல் இருக்க முடியும்? ராஜாவுக்குக் கஞ்சியை மூடி வைத்து விட்டுச் சேச்சம்மா வக்கீல் வீட்டுக்குப் புறப்பட்டாள்.

வாசலில் நுழையும் பொழுதே ஏற்பட்ட உள்ளுணர்வு அங்கே ஏதோ விபரீதம் நிகழ்ந்திருந்ததைச் சேச்சம்மாவுக்கு உணர்த்தி விட்டது. வாசலில் தாறுமாறாக இழுக்கப்பட்டிருந்த கோலத்திலிருந்து சரியாகப் பொருந்தாமல் கலைந்து தொங்கிய ஜன்னல் திரைகள் வரை அவளுக்கு ஏதோ ஒரு வேதனை மிக்க அனுபவத்தைக் காட்டின. மெதுவாக உள்ளே போனாள் சேச்சி.

அப்பொழுதுதான் குளித்து விட்டு வந்த வேதாந்தம் சேச்சம்மாவைக் கண்டதும் தலையைத்தொங்கப்போட்டுக் கொண்டு எதையோ மறைப்பவர் போலச் சென்றார்.

சேச்சிக்குப் புதிராக இருந்தது. அவளை ஏன் இப்படி எல்லாரும் குற்றப் பார்வை பார்க்கிறார்கள்? கோதை இருந்த இடத்திலேயே முகத்தை ஒரு மாதிரியாக வைத்துக் கொண்டாள். குழந்தைகள் சேச்சியை, சினிமாவில் வரும் ராட்சஸியைப் பார்ப்பது போல் விசித்திரமாகப் பார்த்து ஒதுங்கின.

சேச்சிக்கு மனம் கொள்ள வில்லை. உள்ளே போய் அடுப்பைப் பற்ற வைக்கவே தோன்றவில்லை. சர்வ சக்தியையும் இழந்து மனமே இல்லாத நிலையில் வெறுமையாகிப் பிறர் பரிகாசத்துக் குட்பட்டவளாகி விட்ட மாதிரி துடித்தாள்.

கோதையம்மாளுக்கு அன்று பூட்டுக்கு பூட்டு வலியெடுத்திருந்த தினம். எனவே நகர முடியாமல் உட்கார்ந்திருந்தாள்.

''அம்மா....''

கூப்பிட்டது சேச்சியின் குரல்தான்.

''இன்னிக்கு எனக்குக் கண்டந்திப்பிலி ரசம் வச்சுடு. பூட்டுக்குப் பூட்டு கழன்று விடும் போல முறிகிறது வலி....'' என்றாள் கோதை முக்கி முனகிக் கொண்டே.

''ஆகட்டும், அம்மா! இங்கே வீட்டில் என்னவோ போல் இருக்கிறதே. எல்லோருடைய முகமும்.... எனக்குச் சரியாகச் சொல்லத் தெரிய வில்லையம்மா. ஏதோ விபரீதமாகப் படுகிறது....''

கோதை சேச்சியை உற்றுப் பார்த்தாள். சொல்லலாமா வேண்டாமா என்பது போல் சில விநாடிகள் இருந்தாள். உதடுகள் பிரிந்த வேகத்தில் மனத்தின் அழுத்தம். வார்த்தைகளாக வெடித்தன.

''உனக்குத் தெரியாது... முந்தா நாள் ராத்திரி இங்கே திருட்டு போய் விட்டது.''

''திருட்டா?'' சேச்சியின் இதயத்தில் முள் குத்தியது.

''ஆமாம்; பதினைந்தாயிரம் பெறும்......''

''ஆ!''

''என்னுடைய நாலு வடம் சங்கிலி.... விமலியின் நெக்லேஸ்.... வளையல்கள் எல்லாம் போச்சு. நேற்றுக் காலையில்தான் யுத்த நிதிக்கென்று மாமா ஆயிரத்துக்கு 'செக்' அனுப்பினார். அதோடு 'இது'களையும் சேர்த்துக் கொடுத்திருந்தாலாவது மனசுக்குத் திருப்தியாக இருந்திருக்கும்....''

''போலீஸில் சொன்னீர்களா?''

''உடனேயே சொல்லி விட்டோம். நேற்று ராத்திரி திருடன்கூட அகப்பட்டு விட்டான்.''

''திருடன் அகப்பட்டு விட்டானா?'' என்று கேட்ட சேச்சம்மாவின் மன அரங்கில் இருந்த உருவம் அதிர்ந்தது. கை தன்னையறியாமலே இதயத்தில் பதிந்தது.

''அகப்பட்டு விட்டான்'' என்று அழுத்தமாகச் சொன்ன கோதை சேச்சியை ஏற இறங்கப் பார்த்தாள்.

''சொல்லுங்கள், அம்மா! பயப்படாமல் சொல்லுங்கள். நீங்கள் என்னிடம் தயங்குவதைப் பார்த்தால் எனக்கு விபரீதமாகத்தான் படுகிறது. எவ்வளவோ தாங்கிக் கொண்டு விட்டேன். சொல்லி விடுங்கள். 'கள்ளன் பெண்டாட்டி என்றும்....' என்று ஏதோ பழமொழி சொல்லுவார்கள்.''

கோதை சேச்சம்மாவின் கரங்களைப் பிடித்துக் கொண்டாள்.

''கவலைப்படாதே, சேச்சி. அவன் இப்பொழுது லாக் – அப்பில்தான் இருக்கிறான். எல்லாவற்றையும் மாமா பார்த்துக் கொள்வார்'' என்றாள் கோதை.

''வேண்டாம் அம்மா! இப்படி நான் சொல்கிறேனே என்று என்னை நீங்கள் கல்நெஞ்சக்காரி என்று நினைத்துக் கொண்டாலும் பரவாயில்லை. அவரை விடுவிக்க நீங்கள்

ஏதும் பிரயாசைப்பட வேண்டாம். மிஞ்சி மிஞ்சிப் போனால் சில வருஷங்கள் உள்ளே இருக்கப் போகிறார். அவ்வளவுதானே! உள்ளே இருக்கிற வரையிலும் வெளியே நிலைமை குறைவாகத்தானே இருக்கும்?" என்ற சேச்சம்மா கண்ணீரை அழுந்தத் துடைத்துக் கொண்டாள்.

கோதை அவளை வியப்புடன் பார்த்தாள்.

ஃ ஃ ஃ

சேச்சம்மாவுக்கு இதைப் போன்ற அநுபவங்கள் ஒன்று இரண்டா? சந்தானத்தை என்று கைப்பிடித்தாளோ அன்றே ஆரம்பித்த வினை இது. வீட்டில் திடீரென்று காணும் சிறு சிறு 'பார்ஸல்'களைக் கண்டு அவள் வயிறு எரிந்த நாட்கள் எத்தனை எத்தனையோ! கொஞ்சும் சலங்கைகள், கொலுசுகள், வண்ண வண்ண வளையல்கள்! மின்னும் சங்கிலிகள் எல்லாம் அவளை எத்தனையோ முறை சிதையாக எரித்ததுண்டு.

திடீரென்று அவன் மறைவான். திடீரென்று முளைப்பான். அவனைத் தேடிக் கொண்டு யார் யாரோ வருவார்கள். வீடெல்லாம் புகையிலை நாற்றமும் சிகரெட்டுத் துண்டுகளுமாக அட்டகாசம் நடக்கும்.

சேச்சம்மா எல்லாவற்றையும் பொறுத்துக் கொண்டாள். அடியோ, உதையோ, திட்டோ அதனால் விளைந்த அவமானங்களோ, எதையும் தாங்கிக் கொண்டாள்—எல்லாம் ராஜா பிறப்பது வரையிலும்தான்.

ராஜா பிறந்து அவன் வளர வளரச் சேச்சம்மாவின் மனம் இழுபட்ட ரப்பர் போல் இருபுறமும் விரிந்தது. மகனின் எதிர்கால நல்வாழ்வும் – கணவனின் அதலபாதாள அவல வாழ்வும் – எது அவளுக்கு வேண்டும்?

திருத்த முடியாத விஷத்துக்கு அமிர்தம் ஊட்ட முயன்று தோல்விகளைத் தாங்கிக் கொள்வதை விடச் சமுதாயத்துக்கு ஒரு சாதாரணச் சராசரி நல்ல மனிதனைக் கொடுப்பதே மேலல்லவா?

ஃ ஃ ஃ

ஐந்து வருடங்கள்!

சந்தானம் ஜெயிலுக்குப் போனபின் உள்ள ஐந்து வருடங்கள்! சேச்சிக்கு அவை பாரமாக இருக்கவில்லை....

"ஏண்டா, இன்னிக்கு லேட்டாக வந்தாய்?" என்று ராஜாவைக் கேட்டதற்கு "மாணிக்கத்தின் பேனாவைத் தம்பு எடுத்திட்டான், அம்மா! நான் தம்புவோட சண்டை போட்டுப் பேனாவை வாங்கி மாணிக்கத்தின் வீட்டிலே கொண்டு கொடுத்திட்டு வரேன்" என்ற மகனை வாரியணைக்கையில் கணவனின் களங்கம் கரைந்து அந்தக் கண்ணீரில் மற்றொரு புனிதச் செடி துளிர்த்திருப்பதை அவளால் உணர முடிந்தது!

ஃ ஃ ஃ

"என்ன சேச்சி! பேசாமல் உட்கார்ந்து விட்டாய்?" என்று கோதை கேட்டாள். கோதைக்கு மாதம் ஆயிரம் ரூபாய் கொடுத்தால்கூடச் சேச்சம்மாவைப் போலத் தரம் அறிந்து பணியாற்றும் ஊழியக்காரி கிடைக்க மாட்டாள். சேச்சம்மாவின் நல்ல தனத்துக்காகச் சந்தானத்தை எப்படியாவது மீட்டு மறுபடியும் அவர்களை ஒன்றுசேர்க்க வேதாந்தம் தம்பதிகள் திட்டம் போட்டிருந்தனர்.

"ஒன்றுமில்லை, மாமி பழைய நினைவுகள்!"

"பழசு கிடக்கட்டும். நீ என்ன அப்படி ஒரு பேச்சுப் பேசி விட்டாய்? முதல் கேஸிலாவது ஐந்து வருஷம்! இந்தக் கேஸில் ஆயுள் தண்டனைகூடக் கிடைக்க வழி இருக்கிறது சேச்சி. வெறும் திருட்டோடு மட்டுமில்லை. தடுத்து நிறுத்திய வேலைக்காரன் முத்தையா தோள் மேலே அரிவாள் விழுந்திருக்கிறது..."

சேச்சம்மா உறுதியாக நிமிர்ந்தாள்.

"என் குழந்தை நல்லவன் அம்மா. அவன் என்றும் நல்லவனாக இருக்க ஆசீர்வதியுங்கள். எனக்காக மாமா ஒன்றும் செய்ய வேண்டாம். சட்டத்தை மீற வைக்கும் அந்த அநியாய இரக்கத்தையோ, அநுதாபத்தையோ நான் ஏற்றுக் கொண்டால் என் மகனை நல்லவனாக்கும் உறுதியை நான் இழந்து விடுவேன். எங்கிருந்தாலும் அவர் நன்றாக வாழ வேண்டும் என்று அவருடைய இதயம் உண்மைக்கு மதிப்புக் கொடுக்கிறதோ, என்று அவர் தம்மைத் தாமே உணருகிறாரோ, அன்று அவரை வரவேற்க நான் காலம் முழுதும் காத்திருப்பேன் அம்மா. என்னை விட்டு விடுங்கள்!"

"விட்டு விடவா? அப்படி என்றால்?"

"நான் போகிறேன். இந்த ஊர் என்னைப் பிரபலப்படுத்தி விடும். இலை மறைவாய் இருந்த விஷயம் இன்னும் பகிரங்கமாகி விட்ட பிறகு என் பிள்ளை ராஜாவின் வளர்ச்சிக்கு அது நல்லதல்ல...."

கோதையம்மாள் சகல வியாதிகளையும் கடந்து—உண்மையான மனத்திலிருந்து—கண்ணீர் சுரந்தது.

சேச்சம்மாவின் கைப் பாகத்தைச் சாப்பிட அன்று வக்கீல் வீட்டாருக்குக் கொடுத்து வைக்கவில்லை.

ஃ ஃ ஃ

பேயுடன் போராடி வந்தவளைப் போல் வந்த தன் தாயாரைக் கண்டதும் திடுக்கிட்டான் ராஜா.

"அம்மா! என்னம்மா, இது? உனக்குக் கூடவா ஜுரம் வந்திருக்கிறது?"

"ஜுரம் ஒன்றுமில்லை, ராஜா! நாம் இன்றைக்கே ஊருக்குப் போகப் போகிறோம்."

"ஊருக்கா? அப்பாவைப் பார்க்கவா?"

"இல்லை, பாட்டிக்கு உடம்பு சரியில்லையாம். நான் ஒத்தாசைக்குப் போக வேண்டாமா...?"


"என் படிப்பு?"

"பூவனூரிலேயே பள்ளிக்கூடத்தில் சேர்த்து விடுகிறேன்" என்ற சேச்சம்மாள் மூட்டை முடிச்சுகளைக் கட்டுவதிலும் பழைய பாக்கிகளைத் தீர்ப்பதிலும் முனைந்தாள்.

ஃ ஃ ஃ

அன்று மாலை.

மங்கிய இருட் தோற்றத்தினூடே நிழல் போல ரயில்வே ஸ்டேஷனை நோக்கிச் சென்று கொண்டிருந்த ஒரு மாட்டு வண்டியில் பெட்டி படுக்கை சாமான்கள் மட்டுமல்ல, முற்றிலும் ஜுரம் குணமாகாத சிறுவன் ராஜாவும், அவனுடைய அன்புத் தாயும் கூட இருந்தனர்.



அத்தியாயம் 11

சிங்கப்பூர் பயணம்

தப்பி ஓடும் ஒற்றர்களைப் பிடிக்கப் போலீஸார் ஏறிக் கொண்டு வந்த விசைப் படகு எப்படித் திடீரென்று தவிடு பொடியாகியது? திமிங்கிலம் போன்ற ராட்சதக் கடல்வாழ் பிராணிகள் ஏதேனும் அதனைத் தாக்கியதா? நடுக் கடலில்தான் அத்தகைய பிரும்மாண்டமான உயிரினங்களைக் காணலாமே ஒழிய கரையோரப் பகுதிகளுக்கு அவை வரக் காரணம் இல்லையே? அப்படியே இருந்தாலும் படகு தீப்பற்றி எரிவது எப்படிச் சாத்தியமாயிற்று? சில விநாடிகளில் மர்மம் விடுவிக்கப்பட்டது. கருகும்மென்றிருந்த இருளில் சற்றுத் தொலைவில் மின்சார விளக்கு ஒன்று கண் சிமிட்டுவது புலப்பட்டது. மின்மினிப் பூச்சி போல ஒளிர்ந்தும் இருண்டும் தென்பட்ட அந்த விளக்கு சங்கேத பாஷையில் விளம்பியதைப் படித்துப் புரிந்துகொண்டான் வடிவேலு.

"தாரா! அதோ பார்! வெளிச்சம் தெரிகிறதல்லவா? நமக்காகக் காத்திருக்கும் ஜப்பானிய நீர்மூழ்கிக் கப்பல் அதுதான்" என்று கூறிவிட்டு மறுபடியும் துடுப்பு வலிக்கத் தொடங்கினான்.

தாரா பதில் பேசாமல் ஒரு பக்கமாய் உட்கார்ந்து, இறைவனையே தன் நாயகனாக வரித்து அந்தத் தலைவனுக்கே தன் சகலத்தையும் அளித்து அவனிடத்தில் ஐக்கியமடைந்துவிடுகிற தெய்விகக் காதலியைப் போல் நீரினிடம் சிறிது சிறிதாகச் சரணடைந்து கரைந்து போகும் தீயினைப் பார்த்தபடி யிருந்தாள். அவள் மனநிலையை வடிவேலுவினால் புரிந்து கொள்ள முடிந்தது.

போலீஸாரின் 'மிஷின் கன்'னிலிருந்து புறப்படும் குண்டு மழைக்குப் பயந்து மீனவர் தோணியின் அடிவாரத்தில் பதுங்கிக் கொண்டவன் எரிமலை வெடிப்பது போன்ற சத்தம் கேட்டுத் திடுக்கிட்டு நிமிர்ந்த அரை விநாடியில் ஆயிரக்கணக்கான மின்னல்களின் பேரொளியையும் அந்தப் பிரகாசத்தினூடே இரண்டு உடல்களும் இயந்திரத் துப்பாக்கிகளும் மரத் துகள்களும் சின்னாபின்னமுற்ற கண்ணாடியும் வானில், உயரத் தூக்கி அடிக்கப் படுவதைப் பார்த்தான். கைகளையும் கால்களையும் அகற்றிக் கொண்டு பறந்தவர்கள் பின்னர் அந்தரத்தில் பல்டி அடித்துத் தலைகீழ்கோலமாய்த் தலைகுப்புற அலைகடலில் விழுந்தார்கள். சில விநாடிகளுக்கு முன் அவன் கண்ட இந்தப் பயங்கரக் காட்சியைத் தாராவும் பார்த்துத் தானிருக்க வேண்டும். அதனால்தான் அபாயம் நீங்கப் பெற்று அமைதி

ஏற்பட்ட போதிலும், அவள் அருவருப்பு அடைந்திருக்கிறாள்.

''தாரா! இதற்காகவெல்லாம் நீ மனந் தளரக் கூடாது. இதை விடப் பல நூறு மடங்கு அதிகமான அரக்கத் தன்மையுடன் கூடிய அக்கிரமங்கள் இந்தப் பாழும் உலகில் நடந்தன, நடந்து கொண்டு மிருக்கின்றன. நம்மைச் சிங்கப்பூருக்கு ஏற்றிச் செல்லப் போகிற அந்த நீர்மூழ்கிக் கப்பலிலிருந்து கிளம்பிய டார்பிடோ போலீஸ் படகைத் தாக்கித் தகர்த்தது ஒரு பெரிய விஷயமில்லை. பாவம்! வெங்கிட்டுதான் போலீஸாருக்குச் சமிக்ஞை செய்து நம்மைக் காட்டிக்கொடுக்கப் போய்த் தமக்குத் தாமே முடிவு தேடிக்கொண்டார். சுற்றுப்புறத்தில் காரிருளைத் தவிர வேறு எதையுமே காண முடியாதபோது ஒரு சிறு மங்கிய ஒளி தென்பட்டாலும் சட்டென்று அதனை இலக்காகக் கொண்டு சுடுவார்களென்பது அவருக்கு அனுபவமின்மையால் தெரியாமல் போயிற்று. வேண்டியவன் வேண்டாதவன் என்று போலீஸார் நிச்சயப்படுத்திக்கொள்ள நிதானிக்கிற தருணமா இது? நாம் நிராயுதபாணிகளாக இருப்போம் என்பதை அவர்கள் எதிர்பார்த்திருப்பார்களா? அல்லது நமக்காகக் காத்திருக்கும் ஸப்மரீனால் தங்களுக்குத் தீங்கு நேரும் என்பதை உணராமல்தான் இருந்திருப்பார்களா? வெகு துரிதமாகத் தோணியில் இருப்போரை எமனுலகுக்கு அனுப்பி வைத்து விட்டுப் பத்திரமாகக் கரை சேருவதுதான் அவர்கள் நோக்கமாக இருந்திருக்கும். அவர்களுடைய அவசரத்துக்கு வெங்கிட்டு பலியாகிவிட்டார்.''

தாராவிடமிருந்து விம்மல் ஒலி மட்டுமே எழுந்தது.

''தாரா! வெங்கிட்டுவுக்காகவா வருத்தப்படுகிறாய்? அவர் செய்தது மட்டும் நியாயமா? யோசித்துப் பார்!''

''நான் அவருக்காக மாத்திரம் அழவில்லை. அந்தத் துரோகியிடம் போய்ப் பூரண நம்பிக்கை வைத்து, அவர் உங்கள் மீது அபாண்டப் பழி சுமத்திய போது அதையும் உண்மையென்றே கருதி உங்களைச் சந்தேகித்தேனே என்பதை நினைக்கும்போதுதான் எனக்குக் கஷ்டமாக இருக்கிறது.''


''நான் முதலில் அவர் விளையாடுகிறாரக்கும் என்றுதான் எண்ணினேன், தாரா. பிறகு நிஜமாகவே நான் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கையாள் என்று அவர் முடிவு கட்டிவிட்டதாய்த் தோன்றியது. அப்புறம் காருக்குப் பெட்ரோல் நிரப்பிக் கொள்கையில் ஆர அமரச் சிந்தனை செய்தபோதுதான் அவர் நடத்தியதெல்லாம் நாடகம் என்று புரிந்தது. தம்மீது யாரேனும் குற்றம் சாட்ட நினைப்பதற்கு முன்னால் அவர் என் மீது பாய்ந்து அனைவரது கவனத்தையும் திருப்ப முயன்று வெற்றி கண்டிருக்கிறார். அதோடு போலீஸார் அங்கு வரும் வரை நம்மைத் தாமதப்படுத்துவது அவர் உள்நோக்கமாய் இருந்திருக்கிறது. நல்லவேளையாக நான் அதற்கு விட்டுக் கொடுக்காமல் துப்பாக்கிமுனையில் அவரைக் காரோட்டச் செய்தேன். ஒருவருக்கு இருவராய் இருந்தால் நெடுந்தூரப் பிரயாணத்தில் காரோட்டுவது இலகுவாய் இருக்குமே என்பதுதான் என்னுடைய அப்போதைய எண்ணம். பின் தூரத்திவரும் போலீஸாரைத் தாற்காலிகமாகவேனும் தடுத்து நிறுத்துவதும் அதனால்தான் சாத்தியமாயிற்று.''

''பெட்ரோல் பங்கில் வண்டியை நிறுத்தியபோது அவருடைய சுயரூபத்தை ஊகித்து விட்டீர்களல்லவா? அதற்குப் பிறகு அந்த நயவஞ்சகனை ஏன் காரில் ஏற்றிக் கொண்டீர்கள்?''

''உனக்கு மயக்கம் தெளிந்த பிறகு நாம் பேசியதையெல்லாம் அவரும் கேட்டுக் கொண்டிருந்தார். அதனால் மலாயாவுக்கு எந்த மார்க்கமாய் நாம் போகப் போகிறோம் என்பது அவருக்குத் தெரிந்திருந்தது. அவரை அங்கேயே விட்டு விட்டு வந்தால் போலீஸாரிடம் நம் திட்டத்தை விவரித்திருக்க மாட்டாரா? நம்முடனேயே அவரையும் மலாயாவுக்கு இட்டுப் போய் ராணுவ விதிகளின்படி அவருக்கு உண்டான தண்டனையைப் பெறச் செய்யலாம் என்று தீர்மானித்தேன். வீண் தகராறுக்கும் கால விரயத்துக்கும் இடமளிக்காமல், எப்போதும்போல் அவரை அந்தரங்கத் தோழராய்ப் பாவிப்பதாகவே பாசாங்கு செய்தேன். அதே நேரத்தில் அவரிடத்தில் மிகவும் எச்சரிக்கையாக நடந்து கொண்டேன்.''

''அவ்வாறிருந்தும் குறிப்பிட்ட இந்த இடத்துக்குப் போலீஸார் கணக்காக எப்படி வந்து சேர்ந்தார்கள்?''

''அதுதான் எனக்கும் சில விநாடிகள் முன்புவரை புதிராக இருந்தது, தாரா! வெங்கிட்டு இலேசுப்பட்ட ஆசாமியல்ல. பாவி மனிதர் பெட்ரோல் பங்கில் பில் பணம் கொடுத்துச் சில்லறை வாங்கிக்



கொண்ட தருணத்தில் நம்முடைய ஏற்பாடுகளைப் பற்றி ஒரு காகிதத்தில் குறிப்புகள் எழுதிக் கொடுத்திருக்கிறார். வேறு டயரை மாட்டிக்கொண்டு சற்றைக்கெல்லாம் அந்தப் பக்கம் வரப்போகும் போலீஸாரிடம் அந்தச் சீட்டைத் தந்து விடுமாறு சொல்லியிருக்கிறார். அப்போது ஆழ்ந்த யோசனையில் ஈடுபட்டிருந்த நான் இந்தச் சதியைக் கவனிக்கத் தவறி விட்டிருக்கிறேன்.''

''ஐயோ! ஏன் அவருக்கு இப்படிப் புத்தி போகவேண்டும்?'' என்று கோபப்படுவதற்குப் பதிலாகத் தாராவின் தங்கமான உள்ளம் வெங்கிட்டுவின் நடத்தைக்காக விசனித்தது.

''பணம் தாரா! பணம்! சிலரை வழிக்குக் கொணரக் கத்தை கத்தையாக ரூபாய்கள் தேவைப்படுகின்றன. வேறு சிலர் சில்லறை நோட்டுக்களைப் பார்த்ததுமே பல்லைக் காட்டுகிறார்கள். அவ்வளவுதான் வித்தியாசம். பணத்துக்கு அடிமையாகாதவனை அபூர்வமாய்த்தானே சந்திக்க முடிகிறது?''

இதற்குள்ளாக அவர்கள் நீர்மூழ்கிக் கப்பலை அணுகி விட்டார்கள். படகிலிருந்தோர் கலத்தின் மேல் தளத்துக்கு வர மாலுமிகள் சிலர் உதவினார்கள்.

ஜோஹூரில் ஜப்பானிய ஆட்சி தொடங்கிய பின்னர் அனைவரும் கற்றுணருமாறு திணிக்கப்பட்ட ஜப்பானிய மொழியை வடிவேலு சரளமாகப் பேசியது குறித்துத் தாரா ஆச்சரியப்படவில்லை. காப்டனுக்கு அவளை அறிமுகப்படுத்திவைத்த வடிவேலு, இத்தனை அழகான பிரயாணியை ஏற்றிச் செல்லும் அதிர்ஷ்டம் தன் கப்பலுக்குக் கிடைத்ததற்காக ஆட்ஸுகா — ஸான் பெருமைப்படுவதை அவளுக்கு விளக்கினான். மரியாதைக்குப் புன்னகை புரிந்தாள் தாரா.

''இன்னும் ஒரு நிமிஷம் தாமதித்திருந்தால் உங்களை உயிரோடு பார்த்திருக்க முடியாது'' என்ற காப்டன் அபாயம் முற்றிலும் தீர்ந்தபாடில்லையே எனக் கவலைப்படுபவன் போல் தென்பட்டான்.

சரியாக மூன்று மாதங்களுக்கு முன்னால் வடிவேலுவை இதே இடத்தில் இறக்கி விட்டவன் ஆட்ஸுகா - ஸான். மேலதிகாரிகள் தனக்கிட்டிருந்த கட்டளையின் பிரகாரம் குறிப்பிட்ட தேதியில் அங்கு திரும்பவும் வந்து காத்திருப்பதாய் உறுதி கூறிச் சென்று, கொடுத்த வாக்கைக் காப்பாற்றியு மிருப்பவன். ஸர்ச் லைட் வகுத்த ஒளிப் பாதை ஆர்ப்பரிக்கும் அலைகளின் மேல் சுழன்று வருவதைக் கண்டதும் இரண்டும் இரண்டும் நாலு என்று கணக்குப் போடுவது அவனுக்குக் கடினமாயில்லை. வடிவேலுவுக்கு உதவ டார்பிடோ ஒன்றினைப் போலீஸ் படகு இருந்த திசையில் ஏவி விட்டிருக்கிறான். நீரைக் கிழித்துக் கொண்டு தானாகவே நீந்திப் போகும் திறன் படைத்திருந்த அந்தக் குண்டு 'விர்'ரென்று பாய்ந்து சென்று போலீஸ் படகை நிர்மூலமாக்கி யிருக்கிறது.

''போலீஸார் உன்னைப் பின் துரத்தி வந்ததைப் பார்த்தால் ஸப்மரீன் ஒன்று உனக்காகக் காத்திருக்கிறது என்பதும் துப்பறியும் இலாகாவுக்குத் தெரிந்திருக்கும்போ லிருக்கிறதே'' என்றான் காப்டன்.

''அப்படித்தான் நினைக்க வேண்டியிருக்கிறது.''

வடிவேலு இவ்வாறு கூறியதும், ''ஆகா! நாம் வெட்டிப் பொழுது போக்குவதற்கில்லை உம், சீக்கிரம்'' என்று அவசரப்படுத்தினான் காப்டன்.

அவனுடைய விசாரம் என்னவென்பது தாராவுக்கு விளங்கியது. உலக யுத்தம் ஆரம்பமான சமயத்தில் இந்தியாவின் கடற் படைக்கு ஐந்து வயதே நிரம்பி யிருந்தது. ஆனபோதிலும் கடந்த இரண்டு மூன்று வருஷங்களுக்குள் அதனைக் கணிசமாகப் பலப்படுத்தி யிருந்தார்கள். பெரிய தாக்குதலை நடத்தவோ சமாளிக்கவோ பிரும்மாண்டமான போர்க் கலங்கள் ஏதுமில்லைதான். ஆனால் எல்லைப் பாதுகாப்பைத் திறம்பட நடத்தக்கூடிய பல கப்பல்கள் நாட்டின் மூன்று பக்கங்களிலும் பரவலாய் நின்று எதற்கும் சித்தமா யிருந்தன. ஜப்பானிய ஸப்மரீன் ஒன்று இந்தியாவைச் சேர்ந்த கடல் பரப்பின் எல்லைக்குள் நுழைந்த செய்தியுடன் அதனை நாசமாக்கவேண்டும் என்ற உத்தரவும் கிட்டினால் பிறகு அவை சும்மா இருக்குமா? ஸப்மரீன்களை அழிக்கவல்ல சக்தி வாய்ந்த ஆயுதங்களைக் குறைவரப் பெற்றிருந்த அவற்றினிடம் தனியாக அகப்பட்டுக் கொண்டால் அந்த நீர்மூழ்கியின் கதி என்ன?

ஆட்ஸுகா — ஸான் அஞ்சியதுபோலவேதான் நடந்தது. நீர்மூழ்கிக் கப்பலுக்குள் அவர்கள் இறங்கி மேலே கதவு இறுக மூடப்பட்டதும் நீருக்குக் கீழே அமிழ்ந்தவாறே பயணத்தைத் தொடங்கியது அந்தக் கலம். அடுத்த சில மணி நேரத்துக்குள் அவர்கள் மூன்று நான்கு கப்பல்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. இரவு நேரமானபோதிலும் பெரிஸ்கோப்பின் வழியே பார்த்தபோது கப்பல்களில் எரிந்த விளக்குகள் தெரியவே அவற்றினிடம் சிக்காமல் சாமர்த்தியமாய்த் திசை திருப்பிச் சென்று கொண்டிருந்தான் காப்டன். ''மிக மிக அத்தியாவசியமா யிருந்தாலொழிய இந்தப்

பக்கங்களில் போரைக் கிளப்புவது அனுசிதம் என்று எனக்கு மேலிடத்தார் படித்துப் படித்துச் சொல்லி யிருக்கிறார்கள். அதனால்தான் தாக்கத் துணியாமல் தப்பிச் செல்வதிலேயே கண்ணாயிருக்கிறேன்'' என்று அவன் வடிவேலுவிடம் சமாதானம் கூறுவது போல் தன் நிலையை விளக்கினான்.

இது வடிவேலு, தாரா இருவரையுமே மிகவும் சோதிப்பதா யிருந்தது. ஆபத்தை நேருக்கு நேராய்ச் சந்தித்து விட்டால் திறமையும் அத்துடன் அதிர்ஷ்டமும் யார் பக்கத்தில் இருக்கிறதோ, அவன் வெற்றி பெற்றுவிட்டுப் போகலாம். ஆனால் பேரபாயம் சூழ்வதாயும் கூற முடியாமல் அடியோடு அது நீங்கிவிட்டதாயும் நினைக்க முடியாமல் ஒருவித நிச்சயமற்ற தன்மைதான் நிலவியது அப்போது அங்கே.

காப்டன் பெரிஸ்கோப்பிலிருந்து கண்களை எடுத்து, ''இனிமேல் பயமேதும் இல்லை என்று எண்ணுகிறேன். கடந்த ஒரு மணி நேரமாய் எதிரி யாரும் தென்படவில்லை'' என்றபோது இயல்பாகக் கடிகாரத்தைப் பார்த்தான் வடிவேலு. மணி ஐந்து. பொழுது புலரும் நேரம்.

''இரவோ பகலோ நீர்மூழ்கிக்குள்ளே எல்லாம் ஒன்றுதான் தாரா!'' என்று கூறி வாய் மூடுவதற்குள்ளாக அந்தக் கப்பல் பேரதிர்ச்சியுற்றுக் குலுங்கி அவர்களை மூலைக்கொருவராக உருட்டித் தள்ளியது. பின்புற மண்டையை அழுத்தித் தடவிக் கொடுத்துக் கொண்டே எழுந்த வடிவேலு கீழே விழுந்து கிடந்த தாராவைக் கைகொடுத்துத் தூக்கிவிட்டான். அவள் சற்றுக் கலங்கித்தான் போயிருக்கிறாள் என்பதைக் கரங்களைப் பிசைந்தபடி அவள் நின்ற கோலம் எடுத்துக் காட்டியது. ஆறுதலாக அவள் முதுகைச் சுற்றி வளைத்த கரம் தோளைத் தட்டிக் கொடுக்க, ''ஆட்ஸுகா — ஸான் ரொம்பவும் கெட்டிக்காரன். நீ தைரியமாக இரு'' என்றான் வடிவேலு.

அச்சமயத்தில் ஸப்மரீன் மறுபடியும் கிடுகிடுத்து ஆடியது.

''என்ன நடக்கிறதென்று காப்டனைக் கேளுங்களேன்'' என்றாள் தாரா இலேசாக நடுங்குகிற குரலில். தன் போக்கு குறித்து அவளுக்கே அதிசயமாயிருந்தது. 'நான் தனித்திருந்தேனானால் இப்படிப் பதற்றமடைவேனா? வடிவேலு பக்கத்திலிருக்கும்போது நான் தன்னம்பிக்கை இழந்து அஞ்சுவது எதனால்?'

''தாரா! காப்டனிடம் எதையும் விசாரித்துத் தொந்தரவு கொடுக்கும் சந்தர்ப்பமில்லை இது'' என்றான் வடிவேலு. அவன் கூறியதற்கு ஏற்றாற்போல் ஆட்ஸுகா — ஸான் பளிச் பளிச்சென்று தனக்குக் கீழ் பணியாற்றுபவர்களை அதிகாரம் செய்து வேலை வாங்கிக்கொண்டிருந்தான். மீண்டும் ஒரு முறை முன்னெப்போதையும் விடக் கடுமையாக அந்தக் கலம் ஆடியது. இதனை எதிர்பார்த்திருந்தமையால் இந்தத் தடவை சுவரைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு கீழே விழாமல் சமாளித்தார்கள். ஸப்மரீனின் மாலுமிகள் பரபரப்புடன் பல காரியங்களில் முனைந்திருந்தார்கள். திடுமெனக் கப்பலின் இயந்திரங்கள் அனைத்தும் நின்று விட்டன. அலாதியான நிசப்தம் குடிகொண்டிருந்தது.

''எதிரியின் குண்டுபட்டு இயந்திரங்கள் பழுதாகி விட்டனவோ?'' என்று அச்சம் மிகுந்த ரகசியக் குரலில் கேட்டாள் தாரா.

காரணமில்லாமலே வடிவேலுவும் அதிகமாக ஓசைப்படுத்தாமல் பதிலளித்தான்: ''அப்படி ஒரு விபரீதம் நேர்ந்திருக்கும் என்று நான் நினைக்கவில்லை, தாரா!'' என்றவன் தொடர்ந்து என்ன நடந்திருக்க வேண்டும் என்பதையும் அனுமானமாகச் சொன்னான்.

அலைகடலின் மேல் மிதக்கும் இரண்டு மூன்று கப்பல்களிடம் மாட்டிக்கொள்ளாமல் அவற்றை ஏமாற்றி நழுவிவிட்டதும் நான்காவதாக ஒரு கப்பல் காப்டன் விழித்துக் கொண்டு ஒரு தந்திரத்தைக் கையாண்டிருக்கிறான். கப்பலிலிருந்த விளக்குகளை யெல்லாம் அணைக்கச் சொல்லி விட்டு இருளோடு இருளாக முன்னேறி அந்த ஸப்மரீனைத் தேடியிருக்கிறான். கடல் நீரினூடே ஒலி அலைகளை அனுப்பித் திரும்ப வரும் எதிரொலிகளை ஆராய்ந்திருக்கிறான். இம்மியளவு பிசகாமல் அதனை அளந்துவிடக்கூடிய நுண் கருவி ஸப்மரீன் இருக்கும் தூரத்தையும் திக்கையும் அமிழ்ந்திருக்கும் ஆழத்தையும்கூடக் கச்சிதமாகக் காட்டியிருக்கிறது. இந்த விவரங்களின் துணையுடன் ஸப்மரீனுக்கு நேர் மேலாக வந்து குண்டுகள் பலவற்றை வீசச் செய்திருக்கிறான். ஆட்ஸுகா—ஸான், 'இனிமேல் பயமேதுமில்லை' என்று கூறிச் சற்று அசந்து போயிருந்த சமயம் அது. உயரே இருந்தோர் போட்டது குறிப்பிட்ட ஆழத்தை அடைந்ததும் நீரின் அழுத்தத்தால் வெடிக்கும் குண்டுகள். நாலா பக்கங்களிலும் ஒன்றன் பின் ஒன்றாக அவை வெடித்ததும் அந்தச் சிறிய ஸப்மரீன் நடுநடுங்கிப் போயிற்று.

நல்லவேளையாகச் சுற்றுப்புறத்தில் ஆயிரக் கணக்கான மீன்களைத்தான் அவற்றினால் பழி வாங்க முடிந்ததே தவிர ஸப்மரீனைச் சேதப்படுத்த இயலவில்லை. தப்பித் தவறி அந்தக் குண்டுகளுள் ஒன்று தன் கலத்தை நேரடியாகத் தாக்கினால் அந்த நீர்மூழ்கிக் கப்பல்

சமுத்திரத்தின் அடிவாரத்தில் அவர்கள் அனைவருக்கும் அமைக்கப்பட்ட சமாதியாக மாறிவிடும் என்பதையும் ஜப்பானியக் காப்டன் அறிந்திருந்தான். தனக்கு நேர் மேலாக இருக்கும் கப்பல் மீது டார்பிடோக்களைப் பிரயோகிப்பதும் சாத்தியமில்லை. ஆகவே அவன் ஒரு யுக்தியைக் கையாண்டான். குண்டுபட்டு ஸப்மரீன் பாழடைந்து விட்டதாக உயரே மிதக்கும் கப்பலில் உள்ளோர் எண்ணிக் கொள்ளட்டும் என்ற கருத்தில் இஞ்சின்களின் இயக்கத்தை நிறுத்திவிட்டுக் கடலின் அடி மட்டத்தையே சென்றடைய விரும்பியவன் போல ஸப்மரீனைக் கீழே கீழே இறக்கிச் செல்கிறான்.

இதனை விவரித்து விட்டு, ''அதிக அழத்துக்கு மூழ்குவதும் ஆபத்துதான், தாரா. நீரின் அமுக்கத்தைத் தாங்க முடியாமல் கப்பல் நசுங்கி உருக்குலைந்துவிடும்!'' என்றான் வடிவேலு.

''இருந்தாலும் நீர்மூழ்கி ஒரு அதிசயக் கப்பல்தான்! எப்படிச் செயல்படுகிறது இது?'' என்று வியப்புடன் கேட்டாள் தாரா.

''அதன் தத்துவம் பார்க்கப்போனால் ரொம்பவும் எளிதானதாகத் தோன்றும். இரண்டு சுவர்கள் உள்ளன இதில். நாம் உட்சுவருக்கும் உள்ளே மையத்தில் இருக்கிறோம். இரு சுவர்களுக்கும் இடையில் கடல் நீர் நிறையும்போது அந்தக் கனத்தினால் கப்பல் கீழே இறங்குகிறது. அப்போது தண்ணீரால் வெளியேற்றப்படும் காற்று உள்ளே, நாமிருக்கும் பகுதிக்கு வந்து விடுகிறது. இங்கே காற்றின் அழுத்தம் மிக அதிகமாவதை உணர்கிறோம். கடல் நீர் கலத்திலிருந்து அப்புறப்படுத்தப்படும்போது ஸப்மரீன் உயர ஏறுகிறது. நீர்மூழ்கி அமிழ்ந்திருக்கும் ஆழம் இரு சுவர்களுக்கும் இடையில் எந்த அளவுக்குக் கடல் நீர் நிறைந்திருக்கிறது என்பதைப் பொறுத்த விஷயம்.''



இப்படி சுவாரஸ்யமாகப் பேசிக்கொண்டே இருந்தவர்கள் ஆபத்தை மறந்தார்கள். விரைவில் அது மறைந்து விட்டதாகவும் தோன்றியது. இயந்திரங்கள் மீண்டும் செயல்படத் தொடங்கின. சிங்கப்பூர் பிரயாணம் மறுபடியும் ஆரம்பமாயிற்று.

காங்குள்ள இந்தியர்கள் மட்டு மல்லாது வேற்று நாட்டவரும் அவரைக் கண் கண்ட தெய்வ மெனப் போற்றி வணங் கும் நிலைக்கு அவர்



பதினைன்கு நாட்களும் நேரம் போனதே தெரிய வில்லை அவர்களுக்கு. தாராவுக்கு மிகவும் பிடித்தமான உண்மைக் கதைகளைக் கூறி வந்தான் வடிவேலு. சுபாஷ் பாபுவின் சாதனை களை ஒரு நீண்ட நாவலை உரக்கப் படிப் பது போலவே சின்னஞ் சிறு நிகழ்ச்சி களைக்கூட விட்டு விடாமல் சாங்கோ பாங்கமாகச் சொன்னான்.

சிங்கப்பூருக்கு அவர் வந்து சேர்ந்த தும் நேதாஜி வாரம் என்று அமர்க்களப் பட்டதில் ஆரம்பித்து, இந்திய தேசிய ராணுவத்தை அவர் பார்வையிட்டு அது உருவாகி யிருப்பதை உலகத்துக்கு அறி வித்தது, கிழக்காசியாவில் ஜப்பானிய ரின் ஆணைக்கு உட்பட்டிருந்த தேசங் களில் பல நகரங்களுக்கும் விஜயம் செய்து பிரசங்கங்கள் நிகழ்த்தியது, ஆங் உயர்ந்தது, ரங்கூனில் பர்மிய சுதந்திர தினக் கொண் டாட்டங்களில் அவர் பங்கு பற்றியது, இந்திய தேசிய ராணு வத்தின் தலைமையை ஏற்றுக்கொண்டது, தாற்காலிக· சுதந் திர இந்திய அரசாங்கத்தை அமைத்தது, அதற்கு அடுத்த மாதமே ஒரு பெரும் படையை ஷா நவாஸ்கான் தலைமையில் பர்மாவுக்குள் இந்திய எல்லைப்புறத்தை நோக்கி அனுப்பி வைத்தது, மேலும் பல பட்டாளங்களைத் திரட்டிக் கடுமை யான பயிற்சிகள் அளிப்பதில் தீவிர மாக முனைந்திருப்பது முதலான தகவல் களையெல்லாம் அவன் வெளியிட்டான்.

''தாரா! 1943 ஜூலை 9-ந் தேதி வாழ்நாள் முழுதும் என் நினைவை விட்டு நீங்காமல் நிரந்தரமாக நிலைத்திருக்கக்கூடிய ஒரு தினம். நேதாஜி சிங்கப்பூரை அடைந்து சரியாக ஒரு வார காலம்தான் ஆகியிருந்தது. அன்றைக்கு அறுபதினாயிரம் மக்கள் கொட்டுகிற மழையைப் பொருட்படுத்தாமல் இம்மியளவும் அசைந்து கொடுக்காமல் அவருடைய சொற்பொழிவில் நனைந்து கொண்டிருந்த காட்சி இப்போதும் என் கண் முன்னால் நிற்கிறது. தாரா! அதே போல் அக்டோபர் இருபத்தோராம் தேதி கத்தே தியேட்டரில் தாற்காலிக சுதந்திர இந்திய அரசாங்கத்தை நேதாஜி பிரகடனப்படுத்தியதும் ஆண்களும், பெண்களுமாய்ச் சிலர் சேர்ந்து தேசிய கீதம் பாட, அப்போது அயல் நாடுகளிலிருந்து வந்திருந்த பார்வையாளர்கள் உட்பட அனைவரும் எழுந்து நின்று இருநூறு வருஷங்களாக அடிமைப்பட்டுக் கிடக்கும் ஒரு நாட்டுக்கு— ஓர் அங்குலம் பூமியிலேனும் இன்னும் சுதந்திரக் கொடி பறக்காத ஒரு தேசத்துக்கு — மரியாதை செலுத்திய அற்புதத்தை என்னவென்பது? அவர்களை அவ்வாறு நடந்து கொள்ளுமாறு தூண்டிய நேதாஜியின் மகத்தான சக்தியைத் தான் எப்படி அளவிட்டுச் சொல்வது?''

அடக்க மாட்டாத ஆர்வத்துடன் அவன் கூறக் கூற அவளும் மகுடி நாதத்தில் மயங்கிய நாகம் போல ஆவலுடன் கேட்டுக் கொண்டே யிருந்தாள்.

இடையில் ஒரே ஒரு முறைதான் அவர்கள் கடல் மட்டத்துக்கு மேலே வந்தார்கள். பரிசுத்தமான காற்றை மாலுமிகளும் மற்றவர்களும் நீள உறிஞ்சி மார்பில் நிறைத்துக் கொண்டதுடன் கப்பலுக்குள்ளிருந்த காற்றையும் புதுப்பித்துக் கொண்டுதான் புறப்பட்டார்கள்.

சிங்கப்பூரை நெருங்க நெருங்க வடிவேலுவின் நெஞ்சில் ஆனந்தத்துடன் கூட அலுப்பும் சலிப்பும் ஒன்றாகப் பிரவாகமெடுத்தன. குமாரியைப் பிரிந்திருந்த மூன்று மாதங்களைக் காட்டிலும் அவளுடன் மீண்டும் இணைசேரப் பாக்கி இருக்கும் மூன்று நாட்கள் அவனைப் பாடாய்ப்படுத்தி வைத்தன.

நேதாஜியைச் சுலபமாக இதயத்தின் ஒரு மூலையில் ஒதுக்கி வைத்துவிட்டு அவன் தன் குடும்பத்தைப் பற்றியே பேச ஆரம்பித்தான். இரண்டு வயது நிரம்பிய தன் மகள் பிஞ்சுக் கரங்களால் தன்னுடைய இரண்டு வாரத் தாடியை விளையாட்டாகப் பற்றி இழுத்து உலுக்குவது போல் கற்பனை செய்து கொண்டு உடல் சிலிர்த்தான் அவன்.

தேவை யில்லாதபோது ஸப்மரீனுக்குள் நடமாடக்கூடாது, அனாவசியமாகப் பேசக் கூடாது என்ற விதிகளை யெல்லாம் தாராவையும் வடிவேலுவையும் பொறுத்தவரையில் இளக்கி யிருந்தான் காப்டன். அவன் காட்டிய இந்தக் கருணைக்காகப் பிரயாணத்தின் முடிவில் அவனுக்கு நன்றி செலுத்திவிட்டுத் தாராவையும் அழைத்துக் கொண்டு வீடு போய்ச் சேர்ந்தான் வடிவேலு.

அத்தியாயம் 12

குடும்பப் பற்று

நாரியாகிய பிறகும் பெயராலும், தோற்றத்தாலும் இயல்பாலும் குமாரியாகவே விளங்கிய அவன் மனைவி, அவனைக் கண்டதும் கட்டித் தழுவும் வேகத்துடன் துள்ளிக் குதித்து ஓடி வந்தாள். தாராவைக் கண்டதும் தயங்கி நின்றாள். ''குமாரி! உனக்கு ஒரு சகோதரி இருப்பதாகச் சொல்லி யிருக்கிறேன் அல்லவா? இவள்தான் தாரா அக்கா!'' என்று அறிமுகப்படுத்திய வடிவேலு, குழந்தை சிவகாமியைத் தேடினான். மாதக் கணக்கில் தன்னை விட்டுப் பிரிந்து போன அப்பாவிடம் கோபித்துக் கொண்டு கதவிடுக்கில் ஒளிந்திருந்த அவளைக் கண்டு பிடித்து வெளியே இழுத்து வந்து முத்தங்களைச் சொரிந்தான். சிரித்துத் தாஜுக வேண்டுமென்று அவளுடைய சினத்துக்குப் போட்டியாகத் தானும் பிடிவாதம் பிடித்தான்.

மாப்பிள்ளை வந்து விட்ட செய்தியை டெலிபோன் மூலம் கேட்டறிந்ததும் ஓட்டமாய் ஓடி வந்த கதிரேசன், வீட்டினுள் அடியெடுத்து வைத்ததும் வைக்காததுமாக ஒரு சந்தோஷச் செய்தியை உடைத்து விட்டார்.

''வடிவேலு லெப்டினெண்ட் கர்னலாக்கப்பட்டிருக்கிறான்!''

எல்லாருமாக அவனைச் சூழ்ந்து தங்கள் பாராட்டுதல்களைத் தெரிவித்த போது, ''எதற்காக இந்தப் பதவி உயர்வு ?'' என்று ஒன்றும் விளங்காமல் கேட்டான் வடிவேலு. ''இதோ, பாருங்கள். இந்தியாவுக்குச் சென்ற நான் வெறும் கையோடுதான் திரும்பி யிருக்கிறேன்.

தாராவை அழைத்துக் கொண்டு வந்தது ஒரு பெரிய காரியமுமல்ல. பாரதத்தின் இன்றைய அரசியல், பொருளாதார, ராணுவச் சூழ்நிலைகளை நன்றாக அலசிப் பார்த்திருக்கும் அவளுடைய அறிவு ஐ. என். ஏ.வுக்கு மிகவும் பயன்படும் என்பது வாஸ்தவம்தான். ஆனால் அவளும் தான் மேற்கொண்ட ஒரு முக்கியமான பணியில் மோசம் போன பிறகுதான் என்னுடன் தப்பி ஓடி வந்திருக்கிறாள்.''

இந்திய தேசிய ராணுவத்தில் முன்னுக்கு வர விசேஷத் திறமை ஏதும் தேவையில்லை என்பதும் உயர்தர உத்தியோகங்களைப் பெறுவது அங்கே தண்ணீர் பட்டபாடாயிருந்தது என்பதும் வடிவேலுவுக்கு அப்போது தெரியாது. அதனால் பின்னால் நேரப் போகிற விபரீத விளைவுகளைப் பற்றியும் அவன் மட்டுமல்ல, பொறுப்புள்ள யாருமே எண்ணிப் பார்த்ததாய்க் காணோம். சற்று யோசித்திருந்தால் சரியான பயிற்சி பெறாத இந்த ராணுவ அதிகாரிகள் சிப்பாய்களை நிர்வகித்து நடத்திச் செல்லும் சாமர்த்தியமற்றவர்கள் என்பதையும் அவர்கள் தலைமையின் கீழ் சண்டையிடும் வீரர்களிடம் தோல்வியைத் தவிர வேறு எதையும் எதிர்பார்க்க முடியாது என்பதையும் புரிந்து கொண்டிருக்கலாம்.


ஆனால் கதிரேசனோ, ''அதை யெல்லாம் பற்றி நீ ஏன் கவலைப்படுகிறாய்?'' என்றார். ''இன்னும் நடக்க வேண்டிய காரியங்கள் எவ்வளவோ உள்ளன. பாரத நாடும் ஐ. என். ஏ.யும் உன்னைப் பெருமளவுக்கு நம்பி யிருப்பதைச் சதா மனத்தில் வைத்துக் கொண்டு கடுமையாக உழைத்துப் பாடுபடு. இப்போது உனக்குத் தரப்பட்டுள்ள பதவிக்குத் தகுதி படைத்தவனாக உன்னை ஆக்கிக் கொள்!''

அவர் கூற்றை அப்படியே ஒப்புக் கொண்டு சிரமத்தைப் பாராமல் இடைப் பொழுதும் தன் அலுவல்களைக் கவனித்தான் வடிவேலு. சிப்பாய்களுக்குத் துப்பாக்கி பிடிக்கக் கற்றுக் கொடுப்பதிலிருந்து நிர்வாக விஷயங்கள் வரை அவனுக்குப் பலதரப்பட்ட வேலைகள் காத்திருந்தன. முகம் சுளுங்காமல் சுறு சுறுப்பாகத்தான் செயலாற்றினான் வடிவேலு. ஆனால் இவற்றை யெல்லாம் அவன் இயந்திரம்போலச் செய்து கொண்டு போனானே யன்றி மனப்பூர்வமான பிடிமானம் ஏற்படவில்லை. போர் முனையை மீண்டும் சென்றடையவே, அவன் மனம் ஏங்கியது. நாலாபுறமும் ஆபத்துச் சூழ்கையில் நடுவிலிருப்பவனுக்கு உண்டாகும் கிகிலை அவன் இதயம் மறுபடியும் அனுபவிக்க ஏங்கியது.

அவ்வாறு கிகிலை நாடிச் செல்வதிலும் அதனை வரவேற்பதிலும் தனியானதொரு இன்பம் தனக்கு இருப்பதை அவன் ஒளிவு மறைவின்றிக் குமாரியிடம் வெளியிட்டான். ''முன்னைப் போல் நீங்கள் ஒன்றும் தனிக்காட்டு ராஜா இல்லை! அதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்'' என்றாள் குமாரி.

ஆஜானுபாகுவான அவனுடைய பரந்த தோள்களுக்குமேலாக விரல்களைக் கோத்துக்கொண்டு உடலைத் தொய்ய விட்டு ஊசலாடிய அவள், தன் கன்னத்தை அவன் நெஞ்சில் உரசிய படியே, ''உங்கள் உயிருடன் பின்னிப் பிணைந்திருக்கும் மற்றொரு ஜீவனை மறந்து விடாதீர்கள்!'' என்றாள்.

''உண்மைதான் குமாரி! இம்முறை நான் யுத்தத்துக்குப் போனால் உனக்காகவும் இந்தப் போக்கிரிக் குட்டிக்காகவும் மிகவும்ஜாக்கிரதையாகவே இருப்பேன்'' என்ற வடிவேலு, இடக் கரத்திலிருந்த சிவகாமியை வேடிக்கையாகக் கதுப்புக் கன்னம் சிவக்கக் கிள்ளிச் சிரிக்க வைத்தான். கதிரேசன் சிரத்தை எடுத்துக் கொள்ள இந்திய தேசிய ராணுவக் காரியாலயத்தில் எளிதில் விசேஷ அனுமதி பெற்றுக் குமாரியின் கரம் பிடித்த நாளாக அவனும் அவளும் ஒவ்வொரு தினமும் மறு நாளைப் பற்றிய சிந்தனையின்றி அன்றைய தினத்துக்காக வாழ்ந்து



வந்தார்கள். யுத்த மேகங்கள் கவிந்து எதிர்காலம் என்பது இருளடைந்ததாகத் தோன்றுகையில் அதனைப் பற்றிய விசாரத்துக்கு இடம் தருவானேன்?


ஆகவே அவர்களுடைய இல்வாழ்க்கை இன்னல் என்பதே எட்டிப் பாராத வசீகரம் மிக்க ஒரு மாய லோகமாய் விளங்கியது. ஆனால் சிவகாமி பிறந்த பின்னர் அவர்கள் போக்கிலே ஒரு மாறுதல் அவர்கள் அறியாமலே ஏற்பட்டது. இருவருமே பல்லாண்டு வாழ விரும்பினார்கள்; குழந்தையை ஒரு குறையுமின்றி வளர்க்க ஆசைப்பட்டார்கள். இதனால் கணவனும் மனைவியும் அடிக்கடி கவலையில் ஆழ்ந்து போனார்கள். என்றாலும் தான் பேரின்பத்தில் திளைத்திருந்த அந்தப் பழைய நாட்களை வடிவேலு அடியோடு மறந்துவிடவில்லை. இரண்டே உடல்களையும் அவற்றின் இரண்டே உயிர்களையும் மட்டுமே தன் விட்டத்தில் உலவி வர அனுமதித்து அவ்விருவருக்கும் மட்டுமே தனது அதி அற்புத சௌந்தரியங்களை ரசிக்கும் வாய்ப்பளித்த அந்தச் சிங்காரபுரிக்கு மீண்டும் குமாரியுடன் கரம் கோத்தபடி தாவிக் குதித்து ஓடி விடுவதன் மூலம் பகைவனைச் சந்திக்க யுத்தகளத்துக்குப் போகும் முன்னர் சிறிது காலமேனும் காதல் போதையில் ஆழ்ந்துவிட அவன் துடியாய்த் துடித்தான். மனம் போன போக்கில் சிரிப்பும் கும்மாளமுமாய் ஒவ்வொரு நிமிஷத்தையும் கழிக்க அவன் உள்ளம் விழைந்தது. ஆனால் தாரா அவர்களுடன் இருந்த வரையில் இது சாத்தியப்படவில்லை. அதிகமாக நெருங்கி வந்து அந்யோன்யமாக இழைந்து உறவாடி விளையாட விடாமல் கணவன் மனைவிக்கிடையே ஒரு சங்கோஜத் திரையாகத் தான் விழுந்திருப்பதைத் தாராவும் உணர்ந்து விட்டாள். வடிவேலுவின் குடும்பப் பற்று எவ்வளவு கெட்டியானது என்பதை நேரில் பார்த்ததும் அவன் நல்வாழ்விலே மிகுந்த அக்கறை கொண்டிருந்த அவளுக்குப் பரம திருப்தி உண்டாயிற்று. அந்த மன நிறைவுடன் அங்கிருந்து அகன்றுவிட எண்ணி அவள் வடிவேலுவுக்குத் தெரியாமல் சூழ்ச்சி செய்தாள்.


ஜான்ஸி ராணி படையில் சேர்ந்திருந்த தாராவுக்குப் பர்மாவுக்குச் செல்லுமாறு இவ்வளவு விரைவில் உத்தரவு வரும் என்று வடிவேலு எதிர்பார்க்கவே இல்லை. ''என்னை முந்திக் கொண்டு விட்டாயே நீ! அதிர்ஷ்டசாலிதான்'' என்று கூறிய அவளிடம் தன்னை வழியனுப்பி வைக்க ரயில் நிலையத்துக்கு அவன் வரக் கூடாது என்றும் குடும்பத்துடன் வீட்டில் இருந்தபடியே போய் வருமாறு தனக்கு விடை தர வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டாள் தாரா. தன்னிடம் ஒட்டிக் கொண்டு விட்ட சிவகாமியிடம் பிரிந்து செல்லச் சம்மதம் பெறுவதுதான் தாராவுக்குக் கடினமாயிருந்தது. ''பெரியம்மா சீக்கிரமே திரும்பி விடுவாள் கண்ணு!'' என்று அவளைச் சமாதானப்படுத்தி விட்டும் எட்டிப் பார்த்த ஆயாசத்தை வருவித்துக் கொண்ட புன்னகையால் மறைத்து விட்டும் தாரா புறப்பட்டாள்.

அவள் தலை மறையும் வரையில் கண்ணிமைக்காமல் நின்ற வடிவேலு, குமாரி இருந்த பக்கமாய் மெல்லத் திரும்பினான். ''அவளைப் போல் நானும் சீக்கிரத்திலேயே போர்முனைக்குப் போக வேண்டியவன்தான்'' என்று மொழிந்த அவன் வாயைப் பொத்திய பட்டு இதழ்கள், ''போய் வருகிறேன் என்று சொல்லக் கூடாதா?'' என்று கெஞ்சலாகவும் கொஞ்சலாகவும் கேட்டன.

வடிவேலு தன் ரத்த நாளங்களினூடே பாய்வது குருதியல்லவென்றும் நெருப்புக் குழம்பென்றும் முடிவுக்கு வந்தான். அவனை எரித்துச் சாம்பராக்கி விடுவது போல் தகித்துக் கொதிக்கும் ரத்தத்தைக் குளிர்விக்கச் செய்யும் ஆற்றல் படைத்த ஒரே ஒருத்தியை—குமாரியைச் சுற்றி வளைத்தன அவனுடைய கரங்கள்.

(தொடரும்)





அபவாதம்

ஜெயலட்சுமி

அட்டைப்படக் கதை:

"**ப**க்கத்துத் தெருவில் புதிதாக ஒருவர் பாட்டு வகுப்பு ஆரம்பித்திருக்கிறாராம். நம்ப ராஜியைச் சேர்க்கலாமா?" என்று வினவியபடியே காப்பியைக் கொண்டு வந்து வைத்தாள் உமா.

"வேண்டாம், உமா! அடுத்த வருடம் பார்த்துக் கொள்ளலாம். கூடியவரையில் செலவைக் குறைத்துக்கொண்டால் தேவலை" என்றார் ராமமூர்த்தி.

கணவரின் முகத்தை உற்று நோக்கினாள் உமா. அவர் சொல்வது அவளுக்கும் சரியாகவே பட்டது. இருந்தாலும் நப்பாசை, நாலு பேர்களைப்போல் நாமும் பெண்ணுக்குப் பாட்டு சொல்லிக் கொடுக்க வேண்டும் என்று. அது மட்டுமல்ல. நாளைக்கே ராஜி பெரியவளாகித் திருமணம் செய்ய வேண்டி வரும்போது பிள்ளையைப் பெற்றவர்கள் தினமும் மருமகளைப் பாடச் சொல்லிக் கேட்பதையே வாழ்வின் இலட்சியமாகக் கொண்டுள்ளவர்களைப் போல், 'பெண்ணுக்குப் பாட்டு சொல்லித் தரலையா?' என்று கேட்பார்களே என்று அநுபவித்தறிந்த பயம் வேறு. ஆனால் வெறும் ஆசையை மட்டும் வைத்துக் கொண்டிருந்து என்ன பயன்? வசதி வேண்டாமா?

முன்பெல்லாம் இருபது தேதியிலிருந்து மாதக் கடைசி கையைப் பிடித்து முடிவில் வயிற்றையே பிடித்திழுக்கும். இப்போதெல்லாம் விலைவாசிகளின் தாறுமாறான ஏற்றத்தினாலோ என்னவோ, பத்தாம் தேதியே மாதக் கடைசியின் ஆதிக்கம் ஏற்பட்டு விடுகிறது. என்ன செய்கிறது? இன்னும் ஐம்பது ரூபாயாவது கூடி வந்தால் தேவலை. ஒவ்வொரு நாளையும் பிடித்துத் தள்ளுவதே பெரிய பிரச்னையாக இருக்கிறதே! இந்த அழகில் பாட்டாவது இன்னொன்றாவது!

"அம்மா! பட்டுவின் அம்மா கோவிலுக்குப் போகிறாளாம். தை வெள்ளிக்கிழமை. அம்பாளுக்குச் சந்தனக் காப்பாம். உன்னையும் கூப்பிடுகிறாள்...." என்று சொல்லிக் கொண்டே உள்ளே வந்தாள் ராஜி.

"வருகிறேன் என்று சொல்" என்று கூறிவிட்டுக் கணவரைப் பார்த்தாள் உமா.

"போய் விட்டு வாயேன்" என்று கூறினார் ராமமூர்த்தி.

ஃ ஃ ஃ

"**எ**ன்ன உமா! கண்ணிலேயே தட்டுப்படவில்லையே! நாடார் கடையிலே எவர்சில்வர் பாத்திரச் சீட்டு சேர்க்கிறார்களாம். நீ சேரவில்லையா?" கோவிலின் உட்பிராகாரத்தில் வலம் வந்து கொண்டிருந்த உமாவை அழைத்துக் கேட்டாள் ராஜம்மா.

"இல்லை. அடுத்த தடவை பார்த்துக் கொள்ளலாம் என்று இருந்து விட்டேன்" என்று கூறினாள் உமா, திரும்பிப் பார்த்து.

''நன்றாக இருந்தாய், போ! பெண் ராஜிக்குப் பன்னிரண்டு வயது ஆகவில்லை? இப்பவே பிடிச்சுப் பாத்திரமோ, பண்டமோ சிறுகச் சிறுகச் சேர்த்து வாங்கிக் கொள்ள வேண்டாமோ? அப்படிச் செய்து வைத்திருந்தால்தான் கலியாணத்தின் போது அதிகச் சிரமம் இல்லாமல் இருக்கும்....'' என்று பேசிக் கொண்டே போனாள் ராஜம்மா.

''வாஸ்தவம்தான், மாமி! மாதம் பத்து ரூபாய் கட்டவேண்டுமே. என்னால் முடியவில்லை போங்கோ'' என்று பழக்கத்தின் மிகுதியால் மனம் விட்டுக் கூறினாள் உமா.

''கட்ட முடியவில்லையா? இரண்டு மாதங்களாகத்தான் உன் கணவருக்கு ஐம்பது ரூபாய் அதிகமாகச் சம்பளம் வருகிறதே! என் தம்பியும் அவர் கம்பெனியில் தானே வேலை பார்க்கிறான்?''

''என்ன மாமி சொல்லுகிறீர்கள்?'' என்று ஆச்சரியமாகக் கேட்டாள் உமா.

''உன் கணவருக்கு இரண்டு மாதங்களாக ஐம்பது ரூபாய் சம்பளத்தில் உயர்ந்திருக்கிறது என்று சொன்னேன்.''

'உயர்ந்திருக்கிறதா?' என்று கேட்க வந்தவள் கேட்காமலேயே நிறுத்திக் கொண்டு, ''எத்தனை வந்தாலும் சரியாய்ப் போய் விடுகிறது. எதற்கும் அவரை மறுபடியும் கேட்டுப் பார்க்கிறேன்....'' என்று கூறி விட்டு ராஜம்மாவை விட்டுப் பிரிந்தாள் உமா.

அதற்குப் பிறகு அவளுக்கு அம்பிகையின் அலங்காரத்தில்கூட மனம் லயிக்கவில்லை. தெய்வ வழிபாட்டைக்கூட ஒரு கடமையாகக் கருதிச் செய்துவிட்டு வீட்டுக்குத் திரும்பி விட்டாள்.

* * *

வீட்டுக்கு வந்தவுடனேயே, 'உங்களுக்கு இரண்டு மாதங்களாக ஐம்பது ரூபாய் சம்பளம் அதிகமாகி யிருக்கிறதாமே! நீங்கள் என்னிடம் சொல்லவில்லையே?' என்று கணவரிடம் கேட்டுவிடத் துடித்தாள் உமா. ஆனால் 'அவராகவே நம்மிடம் சொல்லாமல் மறைத்து வைத்திருக்கும்போது அதை நாமாகப் போய்க் கேட்பானேன்' என்று தோன்றவே பேசாமல் இருந்து விட்டாள். இருந்த போதிலும் தன் கணவர் தன்னிடம் ஒரு விஷயத்தைச் சொல்லாமல் மறைத்து வைத்திருக்கிறார் என்கிற எண்ணமே உள்ளத்தை உறுத்திக் கொண்டிருந்தது. மனமொத்த தம்பதிகளிடையேகூட ஒளிவு, மறைவா என்று அங்கலாய்த்தது அவள் மனம். இது வரையில் ராமமூர்த்தி அப்படி எதையும் உமாவிடம் சொல்லாமல் மறைத்து வைத்ததில்லை. இப்போது மட்டும் ஏன்?

'பார்க்கலாம், எத்தனை நாட்களுக்குத் தான் இந்த விஷயத்தை வெளியிடாமல் இருக்கிறார் என்று.' பொறுத்துப் பார்க்க எண்ணிப் பேசாமலிருந்தாள் உமா.

அன்று பிற்பகல்.

வேலைக்காரி அங்கம்மா உமாவிடம் ரகசியமாக வந்து, ''ஏம்மா நம்ம ஐயாவுக்கு வேலை மேலே ஏதாச்சும் மாத்திப் போட்டிருக்காங்களா?'' என்றாள்.

''எதற்காக இப்படிக் கேட்கிறாய், அங்கம்மா?'' என்று வியப்புடன் வினவினாள் உமா.

''ஒண்ணுமில்லீங்க. நம்ப ஐயாவை எங்க குடிசைகள் பக்கம் அடிக்கடி பார்க்கிறேன். அதனாலேதான் கேட்டேன். மேட்டுப் பக்கத்து மூலைக் குடிசையிலே தான் செவந்தி இருக்கா. அவ நல்ல அழகு. அவ புருஷன்கூடச் செத்துப்பூட்டாரு, நாலு மாசத்துக்கு முன்னே. அவ குடிசைக்கு எதுக்காக ஐயா அடிக்கடி வரணும்? என் கண்ணுலே பட்டதை உங்ககிட்டே சொல்லிப்புடறது நல்லதுன்னு பட்டிச்சு. சொல்லிட்டேன். பிறகு உங்க பாடு, ஐயா பாடு!'' என்று கூறி விட்டுப் போய் விட்டாள் அங்கம்மா.

திகைத்துப் போய் உட்கார்ந்திருந்தாள் உமா. அவளுக்கு எதுவுமே விளங்க வில்லை. ராமமூர்த்தியின் ஒழுக்கத்தைப் பற்றிச் சந்தேகிக்க அவள் மனம் இடம் தரவில்லை. அங்கம்மா பொய் சொல்ல மாட்டாள். 'அப்படியானால் இவர் குடிசைகளின் பக்கம் எதற்காகப் போக வேண்டும்? சம்பள உயர்வை என்னிடம் எதற்காக மறைக்க வேண்டும்? மூன்றாவதாக ரவி பிறந்த பிறகு நான்காவதாக ஒன்றை விரும்பப் பொருளாதாரம் இடமளிக்காததால் கட்டுப்பாடாக வாழத் தீர்மானித்திருப்பது உண்மைதான். அதனால் ஒரு கால்....? சே, சே! இப்படியெல்லாம் நினைப்பதே அருவருப்பான செயல்தான்! அவருடைய விருப்பத்துக்கு என்றுமே நான் மறுப்புச் சொல்லியதில்லை. ஏனோ இந்த விபரீதம்?' என்று உமாவின் உள்ளம் என்ன முயன்றும் சமாதானம் அடைய மறுத்தது. அடுத்தடுத்து வந்து அலைக்கழிக்கும் அலைகடல் துரும்பென அவளது பூமனம் மாறி மாறி எழும்பும் எண்ண அலைகளால் அலைக்கழிக்கப்பட்டுத் துன்புற்றது.

* * *

முதல் தேதி.

வழக்கம் போல் சம்பளப் பணத்தை உமாவிடம் கொடுத்து விட்டு நிச்சிந்தையாக டிபன் சாப்பிடலானார் ராமமூர்த்தி.

மெள்ள உட்பக்கம் சென்று, கோட் ஸ்டாண்டில் மாட்டியிருந்த அவருடைய சட்டைப் பைக்குள் கையை விட்டுப் பார்த்தாள் உமா. அவள் எண்ணம் பொய்க்க வில்லை. அந்தப் பைக்குள் ஐந்து பத்து ரூபாய் நோட்டுக்கள் இருக்கத்தான் செய்தன. உள்ளம் அலை பாய்ந்தது. சிரமப்பட்டுப் பொறுமையைக் கடைப்பிடித்தாள்.

வயிற்றுப் பசி தீர்ந்ததும் சட்டையை எடுத்துப் போட்டுக் கொண்டு வெளியேறினார் ராமமூர்த்தி. ராஜியிடம் வீட்டைப் பார்த்துக் கொள்ளச் சொல்லி விட்டு அவர் அறியாமல் அவரைப் பின் தொடர்ந்தாள் உமா.

பத்து நிமிஷ நடைக்குப் பிறகு அந்தக் குடிசைகள் இருந்தபக்கம் போய் நின்றார் ராமமூர்த்தி. ஒரு மரத்துக்குப் பின்னால் மறைந்து கொண்டு அவரையே கண் இமைக்காது பார்த்துக் கொண்டிருந்தாள் உமா.

குடிசைக்குள்ளே யிருந்து ஒரு பெண்மணி வெளியே வந்தாள். ஏதோ கூறினாள். ராமமூர்த்தி உள்ளே போனார். ஏழைதான் என்றாலும் வாளிப்பான உடலும் வசீகரமான முகலட்சணமுமாக இருந்தாள் அந்தப் பெண்மணி. பேசாமல் வந்த வழியே திரும்பி நடந்தாள் உமா. அவள் வீட்டை அடைந்த சிறிது நேரத்துக்கெல்லாம் ராமமூர்த்தியும் வந்து சேர்ந்தார். 'எங்கே போய் வந்தீர்கள்?' என்று உமா அவரைக் கேட்க விரும்ப வில்லை.

பதறி நொந்த உள்ளத்தை அமுக்கிப் பிடித்து மரத்துப் போகச் செய்து கொண்டு நடைப்பிணமாக உலவி வந்தாள். என்ன, ஏது என்று கணவரிடம் விசாரித்துக் குடும்பத்தின் அமைதியைக் கலைக்க அவள் விரும்பவில்லை. ராமமூர்த்தி உமாவிடம் கொஞ்சமும் அன்புக் குறைவாக நடந்து கொள்ளவில்லையே! குடிசைப் பக்கம் போய் வருகிறார் என்பதைத் தவிர வேறு எந்தக் குற்றமும் வீட்டினுள் அவர் இழைக்க வில்லை. எந்தத் தவறைச் சுட்டிக் காட்டி அவர் மீது சண்டை பிடிக்க முடியும்? தனக்குத் தெரியாததை, தனக்குத் தெரிந்து விட்டதாகக் காட்டிச் சண்டை போடலாமா? சண்டை, சச்சரவு, கணவன் மனைவிகளிடையே அபிப்பிராய பேதம் என்றாலே உமாவுக்குப் பிடிக்காது.

'கணவன், மனைவியை விடுத்துப் பிற பெண்ணின் உறவை நாடுகிறான் என்றால் மனைவியிடத்தில்தான் ஏதோ குறை இருக்க வேண்டும். புத்திசாலி மனைவியாக இருந்தால் தன் குறையை நீக்கிக் கொள்வதன் மூலம் கணவனைத் தன் உரிமையாக்கிக் கொள்வாள்!' என்கிற எண்ணம் படைத்தவள் உமா. அதன்படி பார்த்தால் உமாவிடம் எந்தக் குறையையும் காண முடியாது. அவள் ஒரு நல்ல மனைவிக்குரிய எல்லா இயல்புகளும் பூரணமாக அமையப் பெற்றவளே! அப்படியும் ராமமூர்த்தி அன்னிய உறவை நாடினால் அவருடைய பலவீனத்தையும், மிருக குணத்தையும்தான் குற்றம் சொல்ல வேண்டும். தானாகவே திருந்த வேண்டிய ரகம் அது. வீணாக அவரை அதட்டிக் கேட்டு வெறுப்பை வாரிக் கட்டிக் கொள்வதில் என்ன பயன்?

அடுத்த முதல் தேதி வரை காத்திருக்க முடிவு செய்தாள் உமா. அதுவும் ஒரு நாள் வரத்தான் செய்தது.

கணவரிடம் டிபன் காப்பியைக் கொண்டு வந்து வைத்து விட்டு மெல்ல உள் அறைக்குச் சென்று அவருடைய சட்டைப் பைக்குள் கையை விட்டு அதனுள் இருந்த ரூபாய் நோட்டுக்களை எடுத்துத் தன் இடுப்பில் ஒளித்து வைத்துக் கொண்டாள் உமா. வேகமாக ராமமூர்த்தியிடம் வந்து, ''கொஞ்சம் வீட்டைப் பார்த்துக் கொள்ளுங்கள்.

> மதம் என்பது மொழியில் இல்லை பெயரில் இல்லை; கட்சியில் இல்லை— மெய்யுணர்வே மதத்தின் பொருளாகும். இதை உன் வாழ்க்கையில் நிரூபித்துக் காட்டு.
>
> —ஸ்வாமி விவேகானந்தர்

நான் ராஜம்மாவைப் போய்ப் பார்த்து விட்டு வருகிறேன். அரை மணியில் வந்து விடுவேன்'' என்று கூறி வேகமாகத் தெருவில் இறங்கி நடந்தாள்.

உமாவின் தலை மறைந்ததும் சட்டையை எடுத்து மாட்டிக் கொண்டு தாமும் கிளம்பினார் ராமமூர்த்தி. அந்தச் சட்டைப் பையில் தான் வைத்த ரூபாய் இருக்கிறதா, இல்லையா என்றுகூடப் பார்க்கத் தோன்ற வில்லை அவருக்கு. சந்தேகம் இருந்தால்தானே?

குறிப்பிட்ட குடிசையை அடைந்ததும் சடக்கென்று நின்றார் ராமமூர்த்தி. அவராக நின்றார் என்று கூறுவதைவிட உள்ளேயிருந்து வந்த பழக்கமான பேச்சுக் குரல் தான் அவர் நடையைத் தடை செய்தது என்று சொல்ல வேண்டும்.

''அவர் வராமல் நான் கொண்டு வந்து கொடுப்பதால் தவறாக எண்ண வேண்டாம். வாங்கிக் கொள். அவருக்கு உடம்பு சரியாக இல்லை. அதனால் தான் நான் எடுத்து வந்தேன்.''—இது உமாவின் குரல்தான்.

''நானே அவரிடம் சொல்ல வேண்டும் என்று இருந்தேனுங்க. எப்படிச் சொல்லுவதென்று தெரிய வில்லை. பனை மரத்திலேயிருந்து பாலைக் குடிச்சாலும் தப்பா எண்ணுகிற உலகமுங்க இது! ஐயா என்னவோ என் உடன் பிறப்பு மாதிரிதான் வந்து போறாரு. ஊர் வாய் சும்மா இல்லையே! என் நாத்தனாரு வேறு வயசுப் பெண்ணாயிட்டுது. நாலு பேர் நாலு விதமாகப் பேசும்படியாக எதுக்குங்க நாம்ப வைச்சிக்கணும்? நான் எப்படியோ பிழைத்துக் கொள்கிறேன். அவரை இனிமேல் பணம் கொண்டு வந்து கொடுக்க வேண்டாம்னுட்டு நீங்களே சொல்லிடுங்கஅம்மா!''—இது செவந்தி.

''பரவாயில்லை, செவந்தி! இனிமேல் மாதா மாதம் நானே கொண்டு வந்து கொடுத்து விட்டுப் போகிறேன்'' என்றாள் உமா.

''எதுக்குங்கஉங்களுக்குவீண்சிரமம்?''

''சிரமம் ஒன்றுமில்லை. நான் வரட்டுமா?'' உமா கிளம்பி விட்டாள்போல் இருக்கிறது என்று வேகமாகத் திரும்பி வீட்டை நோக்கி நடந்தார் ராமமூர்த்தி.

உமா வீட்டுக்குள் நுழைந்ததும் நுழையாததுமாக, ''உனக்கு எப்படி அந்த விஷயம் தெரிந்தது?'' என்று வியப்புடன் அவர் கேட்டதும் ''எந்த விஷயம்?'' என்று வினவினாள் அவள்.

''நான் அந்தச் சின்னய்யனின் மனைவிக்கு மாதா மாதம் ஐம்பது ரூபாய் கொடுத்து வருகிற விஷயம்தான். நான்கு மாதங்களுக்கு முன்பு ஒரு நாள் ரவிக்கு ஹார்லிக்ஸ் வாங்கி வரும்படி நான் என் ஆபீஸ் பியூன் சின்னய்யனைக் கடைக்கு அனுப்பினேன். போனவன் திரும்பி வரவில்லை, உமா! விதி என் உருவில் அவன் உயிரை அபகரித்துக் கொண்டு விட்டது. சைக்கிளில் போனவன் ஒரு லாரியின் வேக மோதலுக்குப் பலியானான். அவனுடைய குடும்பம் ஆதரவற்றுப் போவதற்குக் காரணமாக இருந்தது நாம்தானே என்கிற வேதனை என் உள்ளத்தை அணு அணுவாக அரித்துக் கொண்டிருக்கிறது உமா. என்னால் முடிந்த வரையில் அந்தக் குடும்பத்துக்குக் கொடுத்து வருவது என்று நிர்மானித்திருக்கிறேன் உமா. உனக்குத் தெரிந்தால் — நம் குடும்பம் இருக்கிற நிலையில் என்ன சொல்வாயோ என்று எண்ணி நான் உனக்குத் தெரியாமல்...''

''நீங்களாகவே மாதா மாதம் போய்க் கொடுத்து வந்தீர்கள். நீங்கள் ஆண் பிள்ளை. உங்களைப் பற்றி யாரும் குற்றம் சொல்ல மாட்டார்கள். ஆனால் அந்தச் செவந்தி....! ஏழையாக இருந்தாலும் மானமாக வாழ ஆசைப்படுகிறாள். அதனால் இனி மாதா மாதம் நானே போய் அவளிடம் ரூபாயைக் கொடுத்து வருகிறேன்'' என்றாள் உமா.

''உமா!'' — ஆச்சரியம் தாங்காமல் மனைவியின் கைகளைப் பற்றிக் கொண்டு ராமமூர்த்தி அதே உணர்வுடன், ''சின்னய்யனின் குடும்பத்துக்கு நான் மாதா மாதம் ஐம்பது ரூபாய் கொடுப்பதில் உனக்குக் கொஞ்சம்கூட வருத்தம் இல்லையா?'' என்று கேட்டார்.

''அதில் எனக்கு வருத்தம் கடுகளவும் இல்லை. உங்களுடைய மன வருத்தத்திலும் உங்களுடைய கடமைகளிலும் எனக்குப் பங்குண்டு என்பதை நீங்கள் மறந்து விட்டதுதான் எனக்குவருத்தம்'' என்று மொழிந்தாள் உமா.

''உண்மைதான் உமா. பிறருக்கு உதவி செய்வதற்குக் கூடச் சில நெறி முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டியிருப்பதை நான் அறியத்தான் இல்லை. நீயே இந்த உதவியை அவளுக்குச் செய்து விடு'' என்றார் ராமமூர்த்தி.

நிம்மதியாக நீண்ட பெருமூச்சு விட்டாள் உமா.

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press Kilpauk Madras-10
Managing Editor T. Sadasivam.

REGISTERED No. M. 4962
Registered as a Newspaper in Ceylon